
# மனித நடத்தைக் கோலங்கள்

உளவியல் வெளியீடு 4

அ. றொபேட்
(மெய்யியல்துறை மாணவன்)
குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

12104


1986

# மனித நடத்தைக் கோலங்கள்

உளவியல் வெளியீடு 4

அ. றெபேட்
(மெய்யியல்துறை மாணவன்)
குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

முதற் பதிப்பு:- சித்திரை 1987

விலை:- 10/-

அச்சகம்:- 'மணி ஓசை'
பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

# ஆசிச் செய்தி

மனிதன் தனித்து வாழமுடியாத ஒரு சமூகப்பிராணி என்கிறார் அறிஞர் அரிஸ்டோட்டில். மனித வாழ்க்கை தேவைகளை அடிப்படையாகக் கொண்டது, தேவைகள், விஞ்ஞான வளர்ச்சி, நாகரிக வளர்ச்சி என்பவற்றுக்கேற்ப அதிகரித்துச் செல்வதோடு, சிக்கல்த்தன்மை கொண்டனவாகவும் அமைந்து விடுகின்றன. இவ்விதமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மனிதனால் மேற்கொள்ளப்படும் வெவ்வேறுபட்ட உள, உடல் ரீதியான செயற்பாடுகளே மனித நடத்தைக் கோலங்கள் ஆகின்றன. அதாவது சூழ்நிலையின் தூண்டலுக்கேற்ப தனக்குள்ளே ஏற்படும் ஒரு நிலைமைக்கு ஓர் உயிரியின் தொடர்ச்சியான செயற்பாடே நடத்தைக்கோலம் ஆகும். நடத்தைக்கோலமானது, மனிதனுக்குள்ளேயும் மனிதருக்கிடையேயும் வேறுபட்டும், மாறுபட்டும் அமையுந் தன்மையை அறிவியல் முறையில் விளக்குகின்றது உளவியல்த்துறை.

உடல் எழுச்சி, உளவெழுச்சி, மனவெழுச்சி, சமூகவெழுச்சி ஆகியவற்றின் அடிப்படையில் எழுகின்ற தேவைகளைப் பூர்த்திசெய்வதில் மனிதத் தொடர்புகளும், உறவுகளும், தனக்கும், சமூகத்துக்கும் ஏற்ற வகையில் எவ்விதம் அமைய வேண்டும் என்பதை உளவியல் அறிவு தெளிவுபடுத்துகின்றது.

சமூகத்துடன் கொள்ளும் இணக்கமான உறவின் மூலமே தனி மனிதன் சீராக வாழமுடியும், இதற்கு மனிதன், திருமூலர் கூறுவது போல ''தன்னை அறிதல் வேண்டும்'' யேசுநாதர் குறிப்பிடுவதுபோல ''தன் அயலானை அறிதல் வேண்டும்'' முஹம்மது நபி சொல்வது போல ''உலகினை அறிதல் வேண்டும்'' பிறருடன் இசைவாக வாழ்வதற்கு அவர்களைப்பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். அவரவர்களின் நடத்தைக்கோலங்களின் மூலமாகவே அவர்களைப் புரிந்து கொள்ளமுடியும். இந்தவகையிலே ஆரோக்கியமான மனித உறவுகட்கும் தொடர்புகட்கும் வழிகாட்டுவதற்காகவே மனித நடத்தைக் கோலங்கள் பற்றிய உளவியல் ஆய்வு அமைகின்றது. பல மேனாட்டு நடத்தை உளவியலாளர்களும் மேற்படி விடயம் பற்றி ஆராய்ந்து விளக்கியுள்ளனர். ஆனால், அடிப்படை உண்மைகளை வைத்துக்கொண்டு அந்தந்த நாட்டுமக்களின் சுயவியல்புகளுக்குப் பொருந்தும் வகையில் மனித நடத்தைக் கோலங்கள் பற்றிய ஆய்வுகளை முனைப்படுத்தும் முயற்சிகள் அவசியமாகின்றன. இந்த வகையிலே,

"புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக்கலைகள் தமிழனில் இல்லை"

என்ற குறையினைப் போக்கும் விதத்தில், கொழும்புத்துறை கத்தோலிக்கக் குருத்துவக் கல்லூரி மாணவனான அருட்செல்வன் அ. றொபேட் அவர்களின் கன்னிப்படைப்பான "மனித நடத்தைக்கோலங்கள்" விளங்குவதையிட்டுப் பெருமைப்படலாம். இவர், உளவியலறிஞரான அருட்திரு எஸ். டேமியன் O. M. I. அடிகளாரின் வழிகாட்டலில் உருவாகிவரும் மெய்யியற்றுறை மாணவன் மனித நடத்தைகள் பற்றியவொரு புள்ளி விபர ஆய்வினை கடந்த இரண்டுவருடங்களாக மேற்கொண்டிருந்த இவர், 1950 ஆம் ஆண்டிலிருந்து இரு தசாப்தங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த, ஏறக்குறைய 2500 இளைஞர்கள், யுவதிகளை கிட்டத்தட்ட 52 நிறுவனங்களில் சென்று சந்தித்து, உரையாடி, செவ்விகண்டு ஆராய்ந்த முடிவுகளின் அடிப்படையில் முகிழ்த்ததே "மனித நடத்தைக்கோலங்கள்" பதட்டம் நிறைந்த இன்றைய சூழ்நிலையிலே, நடத்தைப் பிறழ்வுகள் (Abnormal Behaviour) காரணமாக ஆரோக்கியமான மனித உறவு வளர்ச்சிக்குத் தடை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையிலே மனித நடத்தைக் கோலங்கள் பற்றித் தெளிவாக, மனவியல் ரீதியாக (Psychology)விளக்கம் அளிப்பதற்கு முற்பட்டுள்ள இவரது முயற்சி பாராட்டுக்குரியது. குறிப்பாக இவரது ஆய்வின் சாரம் ஆரோக்கியமான ஆண் பெண் நட்புறவை ஊக்குவித்தல் தூய்மையான சந்தோஷத்தை உடல், உள, ஆன்மா சார்ந்த முறையில் பெறமுடியும் என்ற கருத்தினை அழுத்தம்பெறச் செய்கின்றது. ஒழுங்கற்ற முறையில் சமூக உறவுகாண விழையும் உள்ளங்களுக்கும், ஆண்களும் பெண்களும் சமூகத்தில் கலந்து பழகுவதை அசிங்கமாக விமர்சிக்கும் ஆட்களுக்கும் 'மனித நடத்தைக் கோலங்கள்" துருவ நட்சத்திரமாகும்.

இருபத்தேழு வயது உடையவரான அருட்சகோதரர் அ. றொபேட் அவர்கள் வயதில் இளையவராயினும், ஆழமான அறிவும், ஞானமும், முதிர்ச்சியும் நிரம்பியவராகக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. அவரது முயற்சி மேன்மேலும் வளர்ச்சி அடைய இறைவன் அருள் பாலிக்க வேண்டி, ஆசி கூறி வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்
1987.04.30

ஒப்பம்: எம். எம். மன்சூர்
பிரதேசக்கல்விட்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

அ. ம. தி. பயிற்சியகம்,
கொழும்புத்துறை.
3,4,87

# எனது ஆசிரியரின் ஆசி

உளவியலானது வளர்ந்து வரும் ஒரு விஞ்ஞானமாகும். மனிதன் தன் நடத்தையை சீர்ப்படுத்தி வளமான ஆளுமை நிறைந்த வாழ்வைக் கட்டியெழுப்ப உளவியல் பெரிதும் உதவுகின்றது

அருட் செல்வன் அ. றெபேட் உறுதியான உழைப்பும், ஊக்கமும் உளவியலில் நிறைந்த ஆர்வமும் கொண்டவர். இதன் பயனாக ''மனித நடத்தைக் கோலங்கள்'' என்னும் உளவியல் நூல் அவரது ஆக்கத்தில் தோன்றியிருக்கின்றது. இந்நூலுக்கு ஆசியுரை கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந் நூல் நமது மக்களுக்கு உளவியலைப் பற்றி மேலும் அறியவும் அவர்கள் தங்களது வாழ்வை சீராக்கவும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

வளர்க அவரது பணி

அருட்திரு. எஸ். டேமியன் அ. ம. தி. M.A (Psy)

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருமடம்,
கொழும்புத்துறை.
10–4–87

# என்னுரை

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும், பயிலும்தாய்மொழியின் வழியாலே அந்நாட்டுப் பன்முக வாழ்க்கையும் நாகரீகமும் பண்பாடும் துலங்கி வருகின்றன. இதன் பிரகாரம் எனது இறுதியாண்டு மெய்யியற் துறையில் சமர்ப்பித்த ஆய்வுரைக் கட்டுரையை தாய்மொழி அடிப்படையிலேயே ஒரு நாட்டு வாழ்க்கை நிலைகள் அமைந்து உருவாகின்றது எனும் பேருண்மையை மனத்துட் கொண்டே அமிழ்தினுமினிய நம் தமிழ் மொழியில் ''மனித நடத்தைக் கோலங்கள்'' எழுதப்பட்டது. இந்நூலில், உளவியல் மெஞ்ஞானக் கலைச் சொற்கள் இங்குமங்கும் கையாளப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டு எவரும் அஞ்சத் தேவையில்லை. தமிழ்த்தாய் வளம் பெற புதுப்புதுச் சொற்கள் காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்ப அரும்பவும், நிலவவும் வேண்டும் என எவர் தான் விரும்பார். பல்கலைக் கழக மாணவர்களும், உயர் வகுப்பு மாணவர்களும், இளைஞர்களும், இளம் யுவதிகளும் ஏன் ஒவ்வொரு மனிதனும், தான் வளரும் சமூகத்தில் தமக்கும் சமூகத்திற்கும் ஏற்றவர்களாக ஒழுக இச் சிறு நூல் உதவியாக நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இச்சிறு நூலை உருவாக்க உதவியோர் எல்லோருக்கும் நன்றி உரித்தாகுக. ஆசியுரை வழங்கிய எமது யாழ் கல்விப் பணிப்பாளரான எம். எம். மன்சூர் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. குறிப்பாக எனக்கு வழிகாட்டியாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆசியுரையும் அளித்து உதவி புரிந்த எங்கள் குருத்துவக்கல்லூரியின் உளவியல் விரிவுரையாளரான அருட் திரு S. டேமியன் O. M. I அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இந் நூலின் கையெழுத்துப் பிரதியை அச்சேற்ற மனமுவந்து அனுமதியளித்த பெரியகுருமட அதிபர் அருட்திரு S. J. இம்மனுவேல் அடிகளாருக்கு என்னுடைய நன்றி சிறப்பான முறையில் உரித்தாகுக.

என் வாசகர்களால் எனக்கு எடுத்துக் காட்டப்படும் குறைபாடுகளும் கண்டனங்களும், பாராட்டுகளும் கூட எனது முயற்சிக்கு ஊக்கத்தினையும், சிந்தனைக்குத் தெளிவினையும் போக்கில் நிதானத்தையும் அளிப்பதாக அமையுமென நம்புகின்றேன்.

உளவியல் விஞ்ஞானம் வளர வேண்டும். மெஞ்ஞானம் மலர வேண்டும். ஞானத்தின் ஊற்றான இறைவனடி கொண்டு போய் இவை சேர்க்க வேண்டும். தங்களது இயற்கையான உடலியல், உளவியல்பு சார்ந்ததுமான உண்மையையும் அவற்றை மலர்ச்சியுறும் நேர்க்கருத்துப் படியான வழிகளில் செயல் வடிவமாக்கி என் வாசகர்கள் நலமடைய வேண்டுமென நான் ஆசிக்கிறேன். அனைத்திற்கும் மேலாக இறைவனுக்கே இந்நூல் நன்றியோடு சமர்ப்பணம்.

சகோதரன்
அ. ஜெபேட்

## பொருளடக்கம்:


1. முகவுரை
2. பிறக்க முன்பும் பின்பும் நிலைப்பாடு
3. சிசு / குழந்தை
4. இளம் பருவம் ஒரே வயதானவர்களின் நிலைப்பாடு
5. குடும்பத்தின் பங்கு
6. புலன் காட்சியும், புலனுணர்வும்
7. அறிதிறன், மூளையும் நடத்தையும்
8. நனவு நிலை
9. ஆளுமை
10. அறிவு ஆற்றல் (சிந்தித்தல், மொழி, கற்றல்)
11. உள உணர்ச்சிகளும், எளிச்சிகளும், ஊக்குவித்தலும்
12. சமூக நடத்தையும், சொல் சாராத தொடர்பும்
13. புள்ளி விபரவியல் உளவியலும், ஆய்வுத் தொகுப்பும்
14. முடிவுரை
15. துணை நூல்கள்
16. பின்னிணைப்பு

# முகவுரை

உளவியலானது விஞ்ஞானத் துறையைச் சார்ந்ததாகும். இது விசேஷமாக மனித நடத்தையை விளக்குவதோடு நடத்தையின் பல் வேறுபட்ட தன்மையை விபரித்துக்கூற முயலுகின்றது. இது உளவிய லாளர்கள் இயல்பு தொடர்பான பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்குரிய மனித நடத்தையை விளக்கிக்கொள்ள ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் உளவியல் தொடர்பான அறி வாற்றலை பயன்படுத்துகிறார்கள்.

உளவியல் என்னும் சொல்லானது இரு கிரேக்கச் சொற்களான உயிர்நிலை (Psyche), விஞ்ஞானம் (logos) என்பவற்றால் ஆனது. நாம் இன்று உளவியல் என்று கூறுவதை ஆதிக் கிரேக்கர்கள் ஆன்மீகவியல் என்று கூறினார்கள். உளவியலுக்குப் பலர் பலவாறாக வரைவிலக்கணம் கூறியுள்ளனர். ஆயினும் ஏச். சி. வான் (H. C. Waran) என்பவர் தமது உளவியல் அகராதி என்னும் நூலில் உளநிகழ்ச்சிகளை அல்லது உளச் செயல்களை ஆராயும் விஞ்ஞானம், மனிதனுக்கும் சூழ்நிலைக்கும் இடை யில் ஏற்படும் பரஸ்பரத் தொடர்புகளை ஆராயும் விஞ்ஞானம், மனித னுடைய நடத்தையை முறையாக ஆராயும் விஞ்ஞானம், தனி மனித னுடைய மனம்பற்றிய விஞ்ஞானம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளதே உளவியல் என்றார்.

ஆரம்ப காலத்தில் உளவியலாளர்கள் உளவியலை மனச் செயற்பாடு பற்றிய ஆய்வு என வரையறை செய்தார்கள். நடத்தை வாதத்தின் வளர்ச்சியில் உளவியலானது நடத்தைபற்றிப் படிக்கும் பகுதி மீள்வரை யறை செய்யப்பட்டது. ஆனால் தற்போது நடத்தை உளப்பாங்கு போன்றவற்றின் செயற்பாட்டைப்பற்றிய ஆராய்ச்சிக் கல்வியே உளவியல் என வரையறுக்கப்பட்டுள்ளது.

மனித நடத்தைபற்றி விஞ்ஞானமானது பல உளவியல் பிரிவு களைக் கொண்டதொரு தொகுதியாக வரையறை செய்யப்பட்டுள்ளது. உடலிலுள்ள பல்வேறு உறுப்புக்கள், நரம்புகள், உயிரணுக்கள் முதலிய வற்றின் அமைப்பையும், அவற்றின் செயற்பாடுகளையும் மட்டுமல்லாது, ஒருவனுடைய சிந்தனை வளம், உணர்ச்சி வயப்படும் பாங்கு, ஊக்குவித் தல், கனவுகள், உணர்வுகள்பற்றியும் ஒட்டுமொத்தமாக உளவியல் ஆராய்கிறது. அத்துடன் நடத்தையிலும், நரம்பின் உயிரியல் தரவு களில் இருந்தும் அறியக்கூடிய உளவியல் செயற்பாங்கினை விளங்கிக் கொள்ளுதல் மனச் செயற்பாட்டை விளக்க முக்கியமானதாகும்.

உளவியலின் குறிக்கோளானது, மனச்செயற்பாங்கின் நடத்தையை அவதானித்து வரையறை செய்வது, பெறப்பட்ட தகவல்களின் கருத்தை தெளிவுபடுத்தல், அச் சூழ்நிலையால் என்ன நடைபெறும் என்பதை முன்மதிப்பிட்டுரைத்தல், இறுதியாக பெற்ற அறிவை மனிதனின் உடல், உள, வாழ்க்கை நல நிறைவு நிலையை மேம்படுத்த பயன்படுத்தல் என்னும் கணியங்களை உள்ளடக்கியுள்ளது என உளவியலாளர்கள் நெறிப்படுத்தியுள்ளார்கள்.

1875 :- வில்கெலம் உவுன்ட் (Wilhelm Wundt), [வில்லியம் ஜேம்ஸ் (Willam James)] உளவியல் முதலாவது ஆய்வு கூடத்தை, ஜேர்மனியிலுள்ள லேப்ஷக் என்னும் பல்கலைக்கழகத்தில் நிறுவினுர். இவர் நவீன உளவியலின் ஸ்தாபகர் என அழைக்கப்படுகின்ருர்.

1888 :- பிரான்சிஸ் கல்ரன் (Francis Galton) தொடர்புபடுத்தலை வளரச் செய்தார்.

1892 :- ஜி. ஸ்ரான்லி ஹோல் (G. Stanly Hall) அமெரிக்க உளவியல்பு தொடர்பான நெருக்கத்தைக் கொண்டவர்.

1900 :- சிக்மன் புரெய்ட் (Sigmund Freud) கனவுகளின் விளக்கங்களில் ஈடுபட்டார்.

1913 :- ஜோன் பி. வற்சன் (Johu B. Watson) நடத்தை, உளப்பாங்கின் நோக்கே உளவியல் எனக் கூறினுர்.

1928 :- கான்ஸ் பெர்கர் (Hans Berger) முதன்முதலாக மின்னியக்கக் கருவியை E. E. G. (Electroencephalogram) அறிமுகப்படுத்தினுர்.

1938 :- பி. எவ். சிஸ்கினர் (B. F. Skinner) உயிர்ப் பொருளின் நடத்தையைத் தோற்றுவித்தார்.

1951 :- கால் ரோஹஸ் (Carl Rogers) காட்சிக்காரரின் உளநல மருத்துவ முறையை (Clent centered therarpy) ஆரம்பித்தார்.

1967 :- உல்றிக் நிசர் (Ulric Neisser) புலனுணர்வுடைய உளவியலை வளரச் செய்தார்.

1*

1. Andrew B. Crider, "Psychology" (U. S. A. Scott, Foresman and Company, 1983) P. 18

புகழ்பெற்ற விஞ்ஞானிகளும், வைத்தியர்களும், அறிவாளிகளும், உளவியலை ஆராயத் தொடங்கியதால் அதன் எல்லைகள் பெரிதும் விரிவடைந்தது. உளவியலாளர்கள் வேறுபட்ட முறைகள்மூலம் விபரங்களைத் திரட்டி வழக்கப்படி தொகுத்து மனித உளவியல்பற்றிய புதிய உண்மைகளை வெளியிடுகின்றார்கள். மனிதனின் உளவியலை பலர் வெவ்வேறு அணுகுமுறைகளின்மூலம் புரிந்துகொள்ள முயற்சிக்கிறார்கள். எந்த ஒரு தனி அணுகுமுறையும் தன்னிலே நிறைவுடையதல்ல. ஒவ்வொரு முறையும் தமக்குரிய முறையிலே தனித்துவமான பங்கைச் செய்கின்றன.

**நரம்பு உயிரியல் அணுகுமுறை (Nuro Biological approch)**

நமது உடலினுள்ளே நடைபெறும் நிகழ்வுகளுக்கும் நமது செயல்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளை விளக்க முயல்கிறது. அதாவது நமது மூளைத்தொகுதி, நரம்புத்தொகுதி நடத்தையில் ஏற்படும் மாற்றத்தை விளக்க முயல்கிறது.

**உளப்பகுப்பாய்வு முறை (Psycho analytic approach)**

அடிமனதிலே பொதிந்து கிடக்கின்ற இயல்பூக்கங்களிலே மனித நடத்தையானது கட்டுப்படுத்தப்படுகின்றதாகும்.

**நடத்தையியல் அணுகுமுறை (Behavioural approach)**

விஞ்ஞான ரீதியாக மனிதனிலே அவதானிக்கப்படக்கூடிய நடத்தைகளை அவதானித்து அளவீடு செய்து மனித நடத்தைகளை புரிந்துகொள்ள பயன்படுகின்றது.

**மனிதவியல் அணுகு முறை (Humanistic approach)**

ஒவ்வொரு மனித வளர்ச்சியையும் தன் ஆளுமை நிறைவையும் (sefl actualization) நோக்கியே செயற்படுகின்றான் என்னும் சிந்தனையைக் கொண்டதாகும்.

**ஆய்ந்து அறியும் அணுகுமுறை (Cognitive approach)**

உள்ளே செல்கின்ற தகவல்களைப் பல வழிகளிலே பரிமாற்றம் செய்வதோடு புதிய செயல்களையும் புதிய வகைகளையும் உருவாக்குகின்ற கருத்தாகும். அதாவது மனத்தின் செயற்பாட்டை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து முறைகளைத் தருவதாகும்.

1981 ஆம் ஆண்டு ரிச்சேட் மேயர் (Richard Mayer) உளவியலானது மனித மனத்தின் செயற்பாங்கையும், நினைவாற்றலின் அமைப்பு முறை

யையும், மனித நடத்தையை விளங்கிக்கொள்வதற்கு ஏற்ப விஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு செய்கிறது எனக் கூறினர்.

2*

எனது கட்டுரையில் நடத்தையியல் அணுகுமுறையை அடிப்படையாக வைத்தே செயற்பட்டிருக்கிறேன். இம் முறையானது 1900 ஆண்டளவில் அமெரிக்க உளவியலாளர் யோன் வைற்சன் (John Watson) அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு மனிதனின் அல்லது பிராணியின் நடத்தையிலே ஏற்படும் பாதிப்பை இம் முறை ஆய்வு செய்கிறது. முதலாம் உலக யுத்த காலத்தையொட்டி இற்றைவரை கூடுதலாக அமெரிக்க உளவியலாளர்கள் நடத்தைவாதத்தை வளர்த்திருக்கிறார்கள். 1913 ஆம் ஆண்டு அமெரிக்க உளவியலாளரான யோன் வைற்சன் நடத்தை உளப்பாங்கின் நோக்கே, உளவியல் எனக் கூறினர். பின்பு பி. எவ். ஸ்கினர் (B. F. Skinner) தூண்டல் – விளைவு உளவியலை அறிமுகப்படுத்தினர். ஒரு புறத்தூண்டி எவ்வாறு நடத்தையைப் பாதிக்கும் என்பதை ஆய்வு செய்கிறது. தூண்டல் (stimulus) இன்னதென த் தெரிந்தால், அதனுல் ஏற்படும் துலங்கல் (Response) இன்னதென்று உறுதியாகக் கூறலாம். அவ்வாறே துலங்கல் யாதென்றுணர்ந்தால் அது எதனுல் தூண்டப்பட்டிருக்க வேண்டுமென்று துணிந்து கூறிவிடலாம் என்பர் நடத்தை வாதத்தினர்.

மனித நடத்தையை புரிந்துகொள்ளும் ஆற்றல்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மனித நடத்தையை புரிந்துகொள்ளும் ஆற்றலின் முதனிலை உருமாதிரித் தீட்டானது தெளிவின்மையை நிவர்த்திசெய்ய உதவும். இதன் முக்கிய நோக்கம் உறுதியளிக்கிற, ஆர்வமாகப் பாராட்டி தீர வேண்டிய நடைப்பாங்கினை வாசகர் மேற்கொண்டு பெறுவதாகும். மனித நடத்தை வாத அறிவானது ஆண், பெண் இருபாலாரும் தத்தமது நடத்தையை புரிந்துகொள்ளும் ஆற்றலுக்கு உதவியாகும். மேலும் ஆண், பெண் இருபாலாரும் தத்தமது நடத்தையை மீளச் சீராக அமைக்க ஆர்வமிக்கவராயும், தங்களது பிள்ளைகளை நல்வாழ்விற்குத் துணைபுரிகிற வழியில் வளர்க்க ஆவலுடையதாகவும் உருவாக்க இவ்வறிவானது கட்டாயமாக வேண்டியதாகும். மனித நடத்தையானது நிலைமைக்குத் தக்கபடி தன்னை வேறுபடுத்திக்கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும் விறைப்பானது. சில உளவியலாளர்கள் மனித நடத்தையின் செயற்பாட்டின் முதல்நிலை சூழமைபு என்றும், தனிப்பட்டவர்களுடைய பொதுவான தனிச்சிறப்பு பயனற்றதென்றும் உணர்வு பெற்றுர்கள்.

---

2. Rita L. Atkinson, "Introduction to Psychology" Eighth Edition (New York: Harcourt Brace Jovanovich, Ire. 1983), P. 14.

சொல் சார்ந்த் தொடர்புக்கும், சொல் சாராத தொடர்புக்கும் இடைப்பட்ட வெளிப்படுத்தலே மனித நடத்தையைப் புரிந்துகொள்ளும் ஆற்றலாகும். டேவிற்றி (Davity) சொல் சார்ந்த தொடர்பை நாலு வகைக் கூறுகப் பகுத்துள்ளார். அவையாவன: செயற்படுத்தல் – இதன் உள்ளடக்கமாய் திடீர் உணர்ச்சி விளைவு உண்டாகும், உண்டாக்காமலும் இருக்கும், சூழ்நிலைகளின் உறவுடைமை, இன்பத்துக்குரிய குரலோசை, ஆற்றல் ஆகும். வெவ்வேறு பண்பாட்டைப் பின்பற்றும் மக்களின் நடத்தையானது அவர்களின் பண்பாட்டை ஒத்ததாய் இருப்பதால் அவர்களிடையே தப்பெண்ணம் உருவாகும்நிலை உருவாகும். நடத்தையானது மனித இன ஆராய்ச்சிக்குரிய, சமூகவியல் ஆராய்ச்சிக்குரிய, உடலியல் ஆராய்ச்சிக்குரிய உளவியல் ஆராய்ச்சிக்குரிய பின்னிப்பிணைந்த ஆக்கக் கூறுகளால் வரையறை செய்யப்படும். மனித நடத்தையானது சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதன் வெளிப்பாடு ஏற்றுக்கொள்ளப்படும். மக்களின் செயற்பாடுகள் வெளிநிலைச் சூழலால் நெறிப்படுத்தப்படும் வேளையிலும் அவர்களின் நடத்தையானது, தத்தமது நடத்தையில் தங்கியுள்ளது. மனிதனின் செயற்பாட்டு முன்னேற்றத்தில் மரபுநிலையும் சூழ்நிலையும் பின்னிப்பிணைந்துள்ளது.

## வாழ்க்கையில் மூன்று

| | | |
|---|---|---|
| மதிப்பளிக்க வேண்டிய | 3 — | முதுமை, மதம், சட்டம் |
| விரும்பவேண்டிய | 3 — | தூய்மை, நேர்மை, கடின உழைப்பு |
| பாராட்டவேண்டிய | 3 — | அழகு, அறிவு, குணம் |
| வைத்துக்கொள்ளவேண்டிய | 3 — | அஞ்சாமை, உற்சாகம், திருப்தி |
| காப்பாற்ற வேண்டிய | 3 — | செல்வாக்கு, நட்பு, பற்று |
| விலக்கவேண்டிய | 3 — | புகைபிடித்தல், மது அருந்துதல், சூது |
| கட்டுப்படுத்தவேண்டிய | 3 — | நாக்கு, உணர்ச்சி, இச்சை |
| கவனிக்க வேண்டிய | 3 — | பேச்சு, நடத்தை, செயல் |
| ஒழிக்கவேண்டிய | 3 — | சோம்பல், பொய், புறங்கூறல் |

# 2

# பிறப்பிற்கு முன்னும் பின்னும் ஏற்படும் விருத்தி

**பேறுகாலத்திற்கு முந்திய நிலை:-**

உளவியலில் உடலியல் அடிப்படையைப் புரிவதற்கு மரபு வழித் தொடர்கிற செல்வாக்கின் சிலவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டும். எல்லா உளவியல் குணதிசயங்களும், மரபு வழித் தொடர்பினதும், சுற்றுடலினதும் இடைவினையைப் பொறுத்ததாகும். 1*

நாம் எமது பெற்றோரிடமிருந்து பெற்று எமது பிற்காலச் சந்ததியினருக்கு அளிக்கும் முன்னோர் பண்பொத்த (Chromosomes அணுக் கரு) அலகுகள் குரோமோசோம் என்று அழைக்கப்படுகிறது. இவை எம் உடலின் ஒவ்வோர் (nuelcus) ஊன்மத்தின் நள்ளுயிர் மத்திலும் காணப்படுகின்றது. இந்த குரோமோசோம் பெண்ணின் கருவிலும், ஆணின் விந்திலும் காணப்படுகிறது. (Genes) உயிரணுக்கள் என்பது பெரிய குரோமோசோம்களை ஆக்கிக்கொள்ளும் சிறிய புரதத் துணுக்கைகளாகும். விந்தும், முட்டையும் மியோசின் (Meiosis) என்று அழைக்கப்படும் சேர்க்கையை அடைகின்றன. மியோசின் போது- இருபத்து மூன்று சோடி குரோமோசோம்கள் முதலில் பிரிந்து இரு கலங்களாக ஒருங்கு சேருகின்றன. இவை ஒவ்வொன்றும் இருபத்தி மூன்று தனித்தனி குரோமோசோன்களைக் கொண்டவையாகும். உற்பத்தியின்போது இவை சிக்கொட் (zygote) என்று அழைக்கப்படுகின்றன. சிக்கொட்டில் தாயிடமிருந்து 23 ம் தந்தையிடமிருந்து 23 மாக 46 குரோமோசோங்களை அடக்கும். 23 சோடிகளில் 22 ஆண்பெண் பாலாரில் ஒரேமாதிரியாகக் காணப்படுகின்றன பாலியலில் குரோமோசோம் என்று அழைக்கப்படும் 23 வது சோடி ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுணவையாக இருக்கும். ஆண் X அல்லது Y அளிக்க பெண், X குரோமோசோமைக் கொடுக்கிறது. ஒவ்வொரு முட்டையும் X குரோமோசோமையும், ஒவ்வொரு விந்துக்கலமும் X அல்லது Y குரோமோசோமையும், உள்ளடக்கியதாகும், X இன விந்து முதல் முதலாக முட்டைக்கலத்துள் பிரவேசித்தால் கருக்கொண்ட முட்டை XX மாதிரி

---

1. Ernest R. Hilgard, "Introduction to Psychology" Eighth Editien, (New York, Harcourt Brace Jovanovich, Ire, 1983), P. 53

யாண்தாகும் பிள்ளை பெண் பிள்ளையாகும். Y இன விந்து முட்டைக் கலத்துள் நுளைந்தால் கருவுள்ள முட்டை X Yஇன மானதாகி பிள்ளை ஆண்பிள்ளையாகும். எனவே தகப்பனின் விந்தில் உள்ள குரோமோசோனே குழந்தையின் பாலை நிர்ணயிப்பதாகும். சில உயிரணுக்கள் ( Genes ) அடக்கமானவையாயும் சில ஒதுங்கியவையாயும் இன்னும் சில பாலியல் – இணைவுடையவையாயும் இருக்கும் மனித குணாதிசயங்கள் உயிரணுக்களின் தொகுதிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

பாலின் செல்வாக்கை எற்படுத்தும் உயிரணு மற்ற விரல்களுடன் ஒப்பிடும்போது சுட்டு விரலின் நீளத்துக்குப் பொருத்தமானதாக இருக்கும் என்று A. M. வின் செஸ்ரர் (A. M. Winchester) கூறுகிறார். சுட்டு விரல் நாலாம் விரலிலும் கட்டையாக இருக்க காரணமாயுள்ள உயிரணு ஆண்களில் அடங்கியதாகவும் பெண்களில் ஒதுங்கியதாகவும் இருக்கக் காணலாம். 2*

பேறு காலத்திற்கு முந்திய பகுதியை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது: கருத்தரித்தல் (Fertilisation) ஆண் பெண் சேர்க்கைக்குப்பிறகு கருப்பைக்குடிலில் ஆண் இனப்பெருக்க உயிரணுவான விந்தானது: (Spermatazoon) சூல் முட்டையுடன் இணைவது கருத்தரித்தல் ஆகும். கருத்தரித்த முட்டை தன் பிரயாணத்தைத் தொடர்ந்து கருப்பைக்குழல் வழியாகக் கருப்பையை அடைகின்றது. இதற்குப் பத்து நாட்களாகும் என்று கருதப்படுகின்றது, இரண்டாவது நிலை: முதிர்வுருக் கருவுயிர் : இரண்டு தொடக்கம் எட்டுக்கிழமைகள் ஆகும். ஆண், பெண் கருப்பை இரண்டிற்கும் பொது நிலையான திரிவுருதநுண்ம உயிர்மம் (Gonad) கரு உருவாகி வளர்ச்சி அடைவதில் அமைப்புமுறையை ஓவோரெஸ்ரிஸ் (Ovotestis) என் அழைப்பர். இது உட்புறம் சார்ந்த உட்பிரிவு வெளிப்புறத்துக்குரிய புறத்தோற்றம் என்றும் இரு கூறுகளைக் கொண்டுள்ளது. கரு உருவாகி வளர்ச்சி அடையும் உடலின் ஆக்க மூலப் பொருளில் (Tissue) அடிப்படை அமைப்பில் ஆண், பெண் வேறுபாட்டுத் தன்மை ஒருங்கமையாக இருக்கும். மனிதத்தன்மையுடைய முதிர்வுருக் கருவுயிரில் ஆறு கிழமைகளின்பின் விதையின் தோற்றத் தொடக்கத்தையும்; பன்னிரண்டு கிழமைகளின்பின் பெண் கருப்பையின் தொடக்கத்தையும் கண்டறியலாம். இறுதிநிலை: சிசு வளர்ச்சியின் போது மூன்று அல்லது நான்கு மாதங்களில் சிசுவின் அசைவுகளைத் தாய் உணர்வாள். கருவில்

2. Ernest R. Hilgard; "Introduction to Psychology" Eighth Edition, (New York, Harcourt Braee Jovarovich, Inc ) P.56

உள்ள சிசு நஞ்சுடன் தொடர்புள்ள கொடியுடன் பிறக்கும் வரை ஒட்டியுள்ளது. கொப்புள் கொடியானது தாய் இரத்தத்தில் இருந்து சத்து எடுத்துச் சிசுவிற்கு அளிப்பது, சிசுவின் இரத்தத்திற்கு உயிர்வாயு அளிப்பதுபோன்று பேறுகாலத்துக்குரிய வளர்ச்சியில் பங்கு கொள்கின்றது,

பேறு காலத்திற்குரிய சூழ்நிலை எல்லாச் சிசுக்களுக்கும் ஒரேமாதிரியாகக் கிடைப்பதில்லை. அதன் வளர்ச்சி, தாயின் வயது, தாய்க்குரிய உணவு, குடிவகை, வெப்பஅலைபரவுதல், நோய் என்பனவற்றிலும் தங்கி இருப்பதால் வித்தியாசமானதாகும்.

பிறப்பு ஒருவனைத் தூண்டும்போது வாழவேண்டும்
என்று எண்ணுகிறன்

பருவம் ஒருவனைத் தூண்டும்போது அனுபவிக்க வேண்டும்
என்று எண்ணுகிறன்.

அரசியல் ஒருவனைத் தூண்டும்போது உரிமை வேண்டும்
என்று எண்ணுகிறன்.

அடிமைத்தனம் ஒருவனைத் தூண்டும்போது விடுதலைவேண்டும்
என்று எண்ணுகிறன்.

சாவு ஒருவனைத் தூண்டும்போது பரம்பொருள் வேண்டும்
என்று எண்ணுகிறன்.

# 3

## சிசு - குழந்தை

**முதலாம் ஆண்டில் உடல் வளர்ச்சியும், மைல் கல்லும்:-**

குழந்தைப் பருவமென்றால் வாழ்க்கையில், முதல் 18 மாதங்களென விளக்கம் கூறலாம். பிறப்பில் குழந்தை 7 1/2 றாத்தல் நிறையும், 20 அங்குல நீளமும் அதன் மூளை ஏறக்குறைய 350 கிராமுமாகும். முதலாம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் குழந்தையின் உடல் அளவு வீதம் விரைவாக மாற்றமடையும். சிசுவின் முதல் பல பொதுவாக கீழ் தாடையில் சிசு ஏறக்குறைய எழுமாதமாக இருக்கும் பொழுது வெளிவரும் ஒரு வயதாகும் போது அதற்கு ஆறு பற்கள் வெளி வந்துவிடும்.

சிசுவின் உடல் வளர்ச்சியின் மாற்றம் அதன் இயக்கு தசை வளர்ச்சியில் (Moter) நேரடித்தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. குழந்தை முதல் மாதத்தில் அது ஒன்றில் நேராக அல்லது வயிற்றுப் பக்கமாகத்தான் படுக்குமேயொழிய, வேறு விஷேஷமான அசைவாட்டங்களொன்றும் அவதானிக்க முடியாது. ஏறக்குறைய பெரும்பாலான சிசுக்கள் திரும்பிப்படுக்க முடிகின்றன. நாலாம் மாதத்தில் குழந்தை ஒருவர் தாங்கிப் பிடித்தால் அது இருப்பதை எதிர்பார்க்கலாம். ஆறும் மாதத்தில் அநேகமாக குழந்தைகள் தாங்களாகவே இருக்கமுடியும். ஏழாம் மாதமளவில் ஓர் குழந்தை எதும் ஒரு துணையுடன் எழும்பிநிற்க தொடங்கும் பின் எதையும் பிடித்துக்கொண்டு ஒரு பக்கமாக நடக்கத் தொடங்கும். 11 ம் மாதத்தில் ஒரு துணையுமின்றி தனியாக நிற்கும், கடைசியாக 12 ம் மாதத்தில் உதவியின்றி நடக்கத் தொடங்கும். 12–18ம் மாதங்களில் நடக்கும் அறிகுறிகளும் கூடிய உற்சாகமும், பேச்சை விளக்கும் அறிகுறிகளையும் பொதுவாக அவதானிக்க முடியும்.

உளவியல் நிபுணர்கள் பிரதானமாக இரண்டு வளர்ச்சிப் பருவங்களில் அக்கறை கொண்டுள்ளார்கள். ஒன்று எங்கள் சூழலைப்பற்றி விளங்கிக் கொள்வது, மற்றது சமுதாய வளர்ச்சி அதாவது மற்றவர்களுடன் பழகி, உறவாடுவது. சாதாரண குழந்தைகளுக்கு நடுங்கும் சத்தமும், தொனிச்சத்தமும், அதன் குழந்தைப்பருவத்தில் சர்வசாதாரணமானதாகும். சில உடல் குணதிசயங்களாகிய மயிர், கண், நிறம் முதலியவற்றைப் பிள்ளைகள் பரம்பரை பரம்பரையாக சுதாகரித்துக் கொள்ளுகின்றனர்.

ஜின் பியயெற் [Jean Piaget] குழந்தை பருவத்தின் முதல் இரு வருடங்களையும் உணர்வுபற்றிய வளர்ச்சியின் ஆறு பருவங்களாக வகுத்

துள்ளார். முதலாம் பருவம் பிறந்த நாள் தொடக்கம் முதலாம் மாத முடிவுவரை, இப்பருவத்தில் சாதாரண புற உருவத் தோற்றம் அதாவது விரல் சூப்புவது போன்றன பிறப்பிலேயே செயற்பட்டு அவை சிறிது சிறிதாக அற்றுப்போகின்றது. பருவம் இரண்டு, இரண்டாம் மாதம் தொடக்கம் நாலாம் மாதம் வரையிலாகும், இப்பருவத்தில் குழந்தை பார்ப்பது பொருள்களைப் பிடிப்பது போன்றவற்றை புறத் தோற்ற அசைவுகளோடு தொடர்பு படுத்துகிறது. மூன்றுவது பருவம், நாலாம் மாததிற்கும் எட்டாம் மாதத்திற்கும் இடைப்பட்டதாகும். இப்பருவத்தில் சிசுவானது சூழலிலுள்ள பொருள்களை ஊடுருவத் தொடங்குகின்றது. ஆரம்பத்தில் ஊடுருவல் ஒரு கருத்தற்றதாக இருக்கின்றது. ஆனுல் படிப்படியாகக் கருத்துள்ளதாக மாறுகின்றது. 8ம் மாதத்திற்கும் 12ம் மாதத்திற்குமிடைப்பட்ட நான்காம் பருவத்தில் சிசு ஏற்கனவே பயின்றவற்றைக் கொண்டு சிறு பிரச்சினைகளைத் தீர்க்கப் பழகுகின்றது. 12ம், 18ம் மாதத்திற்கும் இடைப்பட்ட ஐந்தாம் பருவத்தில் குழந்தை சிலவற்றைப் பரீட்சித்துப்பார்த்து, சரி செய்யும் முறையில் ஈடுபடுகின்றது. இக்கட்டத்தில் தன் குறிக்கோளை அடைவதற்கு ஒரு முறையிலிருந்து இன்னொரு முறைக்கு மாறக்கூடும். கடைசிப்பருவமாகிய 18ம், 24ம் மாதங்களுக்கு இடைப்பட்ட கடைசிப் பருவத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புது முறைகளைக் கடைப்பிடிக்கும். சிரிப்பு, அழுகையாகிய குணுதியங்கள் பெற்ருேர் மேல் பாச உணர்வை வளர்க்கும். அநேகமான குடும்பங்களில் குழந்தைகளைக் கவனிப்பதில் தந்தையர்தான் கூட பங்கை எடுக்கின்றனர். வேறு பிள்ளைகளுடன் பழகுவது பிள்ளைகளின் உளவளர்ச்சியில் பிரதானமான பங்கை அளிக்கின்றது.

சாதாரணமான குழந்தை நிறத்தையும் வெளிச்சத்தையும் பிறந்த நாட்கள் தொடக்கம் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அப்படிப்பட்ட குழந்தை நல்ல பார்வைக்குரிய அறிகுறிகளைக் காட்டுகிறது. குழந்தைகள் சொற்பத் தெளிவாக தமது மனக்கிளர்ச்சியின் துலங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிருர்கள். குழந்தை பிறந்து சில மாதங்களில் தோன்றும் சிறப்பு வெளிப்பாடொன்று ஆள் முகத்தைக்கண்டு புன்முறுவல் பூத்தலாம். உடல் வளர்ச்சியானது உடல் நலத்திற்கும், நடத்தை அனுசரணைகட்கும் முக்கியமானதாகும்.

---

1. Robert D. Kavanaugh, "Psychology", (U. S. A.; Scott, foresman and company, 1983), P. 331.

# 4

# இளம் பருவம் (Adolescence)

**இளம் பருவத்தில் ஏற்படும் உடல் மாறுதல்களை அனுசரித்தல்:-**

இளம் பருவமானது குழந்தைப் பருவத்திற்கும், முதிர்ச்சிப்பருவத்திற்குமிடையில் செயற்படுகிறது. குருதியில் கலந்து உறுப்புக்கள் செயற்படத்தூண்டும் உட்சுரப்பு நீர் வகைகளானது ஆண் விந்துகளும், புதிய உயிராக உருவாகும் பெண்கரு உயிரணுக்களும் முதிர்ச்சியுற்று வளர்ச்சியடையும் பால்சுரப்பிகளை உற்பத்தியாக்கத் தூண்டவும் பயன்படுகிறது. முதலாம் நிலைபால் இனஅறிகுறிகளும் (Primary Sex Characteristics), இரண்டாம் நிலைபால் இனஅறிகுறிகளும் (Secondary Sex Characteristics) எல்லா மாற்றங்களிலும் உட்பட்டிருக்கிறது. முதலாம் நிலைபால் இனஅறிகுறிகளின் வெளிப்படுத்துதல் இனப்பெருக்க பால் உறுப்புக்களில் முழு வளர்ச்சியை குறிக்கிறது. பெண்களில் சூல்சுரப்பிகள், கருப்பை, பிறப்புப்பாதை என்பவற்றில் விரைந்த வளர்ச்சியையும், ஆண்களில் விதைப்பை உறை, விந்தணு, ஆண்குறி என்பவற்றின் வளர்ச்சியையும் குறிக்கும்.

பதின்மூன்று, பதிநான்கு வயதில் ஆண்கள் பால்தன்மையில் முதிர்ச்சி அடைவார்கள். பெண்களின் மாதவிடாய் பருவம் குளிர்நாடுகளில் பிந்தியும், வெப்பநாடுகளில் முந்தியும் 8 தொடக்கம் 18 வயதிற்குமிடையில் ஆரம்பமாகும். இளம்பருவத்தில் முதலாம் நிலை பால்இன அறிகுறியின் வெளித்தோற்றம் பெரும்பாலும் நேரக்கூடியதாகும்.

**இரண்டாம் நிலைபால் அறிகுறிகள் பெண்களில்:-**

மார்பக வளர்ச்சி, இடுப்பு விசாலமாதல், பருவ உரோமம் வளர்தல்.

**ஆண்களில்:-** தாடிவளர்தல், நெஞ்சில் உரோமம் வளர்தல், பருவ உரோமம் வளர்தல், குரல் அழுத்தமாதல் ஆகும்.

பிறக்கும் குழந்தையில் கிட்டத்தட்ட மூன்று இலட்சம் முட்டைகள் உள்ளன. அவற்றில் சொற்பமே பூப்புநிலை வரை அடைகிறது. பெண்ணின் கருப்பையில் கருமுட்டையும் ஹார்மோன்களும் உற்பத்தியாகின்றன. மாதவிலக்கிலிருந்து சாதாரணமாக 18 — 22 நாட்களில் வெளிவரும் கருமுட்டை 48 மணித்தியாலங்களில் உயிருடனிருக்கும். பருவநிலை அடைந்த பெண்களின் மார்பகங்கள் நன்கு புலப்படும். மார்பகங்களின் வளர்ச்சியும், கருவகங்களின் முதிர்ச்சியும் ஒன்றுக்கொன்று நெருங்கிா

தொடர்பைக் கொண்டுள்ளன. முட்டையானது சினையாகாவிட்டால் மாத விடாய் தோன்றுகின்றது. இது சராசரி 45 வயது வரை நடைபெறுகின் றது. மாதவிடாய் நாட்களுக்குச் சிறிது முன்பு மார்பகங்கள் விம்மிப் புடைகின்றன, முலைக்காம்புகள் விறைத்து உறுதியாகின்றது. மாதவிடாய் காலத்தில் பெண்கள் கிட்டத்தட்ட எப்பொழுதும் முகத்தில் சிறு வீக்கத் தையும், சில சமயங்களில் உடம்பில் தடிப்பையும் அடைகிறார்கள். மாத விடாயானது உடல் அமைப்பில் எல்லா உயிர்த்தன்மையான தோற்ற வெளிப்பாடுகளையும் பாதிக்கின்றது.

ஆணில் உணர்ச்சி ஏற்படும்போது பிறப்புறுப்பில் உருவாகும் திர வமும், உயிர் அணுக்கருவும் சேர்ந்து விந்தை உருவாக்குகின்றது. அதில் 20 அல்லது 40 கோடி உயிர் அணுக்கள் உள்ளன. இவை அதிகமாக 72 மணித்தியாலம் உயிராக இருக்கும். பிறப்புறுப்பில் விந்தும் ஹார்மோன் களும் எவ்வேளையும் உருவாகும். நித்திரை செய்யும் தருணம் விந்து நீர் வெளிப்படுதல், ஒருவரது விந்துநீர் சுரப்பிகளின் ஒழுங்கான இயக் கத்தைக் காட்டுகின்ற ஒரு நல்ல அடையாளமே தவிர வேறு அல்ல. இளைஞர்கள் உண்மையில் அதைப்பற்றி மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர கவலையோ, பயமோ கொள்வதற்கு இடமில்லை. ஆனால் இயற்கைக்கு மாறாக விந்துநீர் வெளிப்படுதல் உடம்பை உண்மையிலேயே பலவீனப் படுத்திவிடும். மேலும் ஆண்கள் பால் முதிர்ச்சியடையும் காலப்பகுதி யில் சிலரின் உடல்வளர்ச்சியின் தன்மையினால் மார்பகங்களின் முலைக் காம்புகள் விம்மிப்புடைவது கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் செயற் படுவதினால் அவர்கள் உளத்தாக்கத்திற்கு உட்படுகிறார்கள். ஒருவர் தனது முதுமைப்பருவ காலம்வரையும் அதாவது தனது வாழ்க்கையில் உடல் ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுத்திக்கொண்டால் அவரின் பால்முதிர்ச்சி செயல் ஆற்றல் தொடர்ச்சியாக இருக்கும் என்று மருத்துவர்களின் கருத்தாகும்.

உடல் வளர்ச்சியில் முக்கியமானது பால் முதிர்ச்சியாகும். இம் முதிர்ச்சி வந்தெய்வதில் மக்களின் தனிவேற்றுமைகளும், மற்ற உடல் வளர்ச்சி வேறுபாடுகளும், சமூக நடத்தையும், மனச்செயலும் காரணி களாகின்றன. இளமைப் பருவத்தில் ஏற்படும் மாறுதல்கள் யாவற்றுள் ளும் உடலின் அளவிலும், தன்மையிலும் ஏற்படும் மாறுதல்களே வியக் கத்தக்கவை எனலாம். மேலும் ஆணின் முதிர்ச்சியிலும், பெண்ணின் முதிர்ச்சி முந்துவதால் பல சிக்கல்கள் இருபாலாரின் நடத்தையிலும் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது.

**ஒரே வயதொத்தவர்களின் நிலைப்பாடு (The Influence of Peers)**

ஒரே வயதொத்தவர்களின் உறவானது எவ்வாறு மற்றவர்களு டன் தொடர்பு கொள்வதென்றும், சமூகக் கூட்டான நடத்தையில்

செயற்படவும், செயற்திறனை பொருத்தமான விதத்தில் செயற்படுத்த வும் உதவியாக இருக்கும். ஒரே வயதான குழுவினர் சமுதாயக் கூட்டான செயலில் முக்கிய பங்குடையவர்கள். உதாரணமாக இயக்கங்களின் குழுக்களில் தலைமைத்துவம், துணைசெய்யும் வகைகள் மற்றவர்களை வழிநடத்தல் போன்றவற்றின் செயற்பாடுகளாகும். பெற்றோர்களுடன் மட்டும் உறவாயிருப்பதல்ல, ஒரே வயதினவர்களுடன் உறவாயிருப்பதும் சமுதாயக் கூட்டான வளர்ச்சியின் நிலைப்பாடாகும்.

இரண்டு வயதான பருவகாலத்தில் ஒரே வயதானவர்கள் மற்றொன்றைச் சார்ந்திருக்கும் சமுதாய துலங்களில் கூடுதலாக செயற்படுவார்கள். ஒரே வயதான இளம் பருவத்தினர் புதுப்பாணியான முறையிலும், இன்னிசையிலும், பொழுதுபோக்கிலும், நண்பர்களை தெரிவு செய்வதிலும், முன்னுரிமை கொடுப்பார்கள். ஒரே வயதொத்தவர்களின் உறவின் செயற்பாடானது, அவர்களின் நடத்தையில் நிலைப்பாடு கொண்டுள்ளது. இருபாலாருக்கிடையிலுள்ள நண்பர்களின் செயற்பாடானது, இளம் பருவகாலத்தில் விசேட பற்றுத் தொடர்பாக இருக்கும்.

உன் உள்ள உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள
எனக்கு எக்ஸ்ரே கண்கள் இல்லை.
நீ உன்னை வெளிப்படுத்தினாலொழிய
நாம் ஒருவரையொருவர் புரியமுடியாது.

5

# குடும்பத்தின் பங்கு (The role of family)

ஒரு குழந்தை பரந்த உணர்வுகளால் செல்வாக்குப் பெறுகிறது. இவ்வுணர்வுகள் பெற்ருேர், சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள், ஆசிரியர்கள், பொது சாதனங்கள் ஆகியவற்றின் தூண்டுதலால் ஏற்படலாம். குழந்தைப் பருவத்தில் பெற்ருேர், பிள்ளை, பாசம் – உறவு என்ற தொடர்ச்சி இருக்கச் செய்யும் இக்கால எல்லையில் பெற்ருேர் பிள்ளைகளுக்காக மாதிரிப் பொருள்களாகின்றனர். போதனை தண்டனை, வெகுமதி என்ற பலதீரப்பட்ட தீர்மானங்களை எடுக்கின்றனர். தண்டனையானது, நடத்தையில் மாற்றத்தை விளைவிக்கின்றது. அடக்கியாளுகின்ற அல்லது, பிரதிகூலமான அன்புள்ள அல்லது, தோல்வி மனப்பான்மையுள்ள பெற்ருேர்களிடம் பிள்ளைகள் வாழத்தான் செய்கின்றனர். இந்த ஒவ்வொரு ரகம் பெற்ருேரும் பிள்ளையில் வித்தியாசமான ஆளுமையை உண்டாக்க ஏதுவாகின்றனர் என மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இந்தவித பகுப்பு பெறுபேற்ருல் பிள்ளைகள் நட்புரிமையுள்ள, ஆதிக்கமுள்ள, உயர்ந்த கண்ணியமிக்கவர்களாகின்றனர். கோபம் குன்றிய, ஆக்கத்திற்குன்றிய, மிகவும் நம்பிக்கை உள்ள அதிக எதிர்ப்பைக் காட்டும் குழந்தையை உருவாக்கும் அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டும். சண்டையிடுகின்ற, தன்நடத்தையில் குறைந்த கட்டுப்பாடுகளைக் கொண்ட குற்றங்களை ஆழமாக உணரும் குழந்தையே வெட்கத்தால் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழத் தள்ளப்படுகிறது.

1*

புதிதாகப் பிறந்த ஆண் குழந்தை ஒரு குடும்பத்தின் முடிக்குரிய அரசகுமாரனுக அடிகோலப்படுகின்ருன். இரண்டாம் குழந்தை பிறந்தவுடன் முதலாவது குழந்தை தான் நினைத்ததை முடிக்க கஷ்டப்படுகிறது. முதற்பிறந்த குழந்தை வளர்ந்தோர்களுடன் தன்னை இனம் காட்டிக்கொண்டதோடு வீட்டிற்கு வெளியே நண்பர்களை அதிகம் நம்புவான். தனது பெற்ருேரால் அதிகமாக இயக்கப்படுகிற மூத்தபிள்ளை (ஆணோ, பெண்ணோ) தமது வயது ஒத்தவர்களோடு செல்வாக்கைப் பெறுவார். நீண்டகாலமாக அடக்கப்பட்டதன் காரணமாக பின் பிறந்த

---

1. "The new Encycloredia Britanrica" U. S. A., macroredia Volume 8, 15 edition, 1980, P. 1144.

குழந்தைகள் தமக்கென பெருமை தேடுபவர்களாகவே இருப்பர் என்று அட்லர் (Adler) கூறுகிறார்.

2*

இன்றைய காலகட்டத்தில் குடும்ப வாழ்க்கை மிகவும் கஷ்டமானது. ஒரு குடும்பத்தில் இருந்து நாம் அதிகம் எதிர்பார்க்கின்றோம் அன்பையும் பாலுறவையும் பற்றி ஆராய்வது மிகவும் கஷ்டமானது. அன்பு என்பது ஒருவரிடம் ஆழமான சிந்தனையை வைத்தாலாகும். சிறந்த பெண்மை என்பது அற்பமான உடற்பொருத்தமல்ல, அது அன்பின் முதிர்ந்த உறுதியாகும். எதிர்ப்பால் தன்மையால் ஆண் ஒருவரைக் கவரலாம். ஆனால் ஆண்கள் தங்களிலும் பார்க்க குறைந்த கல்வியறிவுள்ள பெண்களையே விவாகம் செய்ய விரும்புவர், பெண்கள் தங்களிலும் பார்க்க எல்லா வழிகளிலும் ஆண்கள் மேலானவர்களாக இருப்பதையே விரும்புவது தெளிவு.

ஆண்மீகத்தையும் உணர்ச்சிவசப்பட்டதையும் புதுமையாக்குவதே அன்பு,- உறவு,- மனம், உடல், உயிர் ஆதியான ஒன்று சேர்வதே அன்பு ஆண் பின்வரும் மிகச்சிறந்த கொள்கைகளை உடையனவாக விளங்க குடும்பத்தில் எதிர்பார்க்கப்படுகின்றார்.

மனைவியைப் பாதுகாக்கின்றான், அவளின் உணர்ச்சியில் துணையாகின்றான், அவளின் நலனுக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் தேவையானவற்றை நல்கின்றான், பிள்ளைகள் பெறுவதில் திருப்தியளிக்கிறான், தான் ஓய்வாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ ஒரு வீடு அமைத்துக் கொள்கிறான். உடல்விருப்பின்படி மகிழ்ச்சியும் பற்றும் எய்கிறான், பிறர்தன்னில் கவனம் செலுத்த சந்தர்ப்பத்தை எற்படுத்துகிறான், தன்னுறுதியும் தான் அல்லது எனையோர் முதிர்ச்சியடைந்தமையை எடுத்துக்காட்டும் சூழலை உண்டாக்குகிறான்.

கணவனும் மனைவியும் சில தேவைகளிலும் தகுதிகளிலும் பங்கேற்கின்றனர். எதிர்பால் கவர்ச்சிக்கு சான்றுதல் இல்லை. திருமணத்தால் ஒவ்வொருவருடைய தேவையைக் கணிப்பதற்கு அவர்கள் உணர்த்தப்படுகின்றனர். ஒருவரோடொருவர் தொடர்பு வைத்துக்கொள்ள கற்கின்றனர். தனித்தன்மைக்கு அனுமதிக்கப்படுகின்றனர். விட்டுக்கொடுப்பதைக் கற்கின்றனர். ஒருவருக்கொருவர் நன்றியுடையோராய் இருந்து ஒருவர் மற்றவரிடமிருந்து அதிகமான தேவைகளை எதிர்பார்க்கக்கூடாது என உணர்கின்றனர்.

---

2. Apirl o' connell / Vineen o' connell, choice charge, 1980, P. 85.

ஆண் தன்மையின் இயலாத தன்மையின் தரத்திற்கும் சமூகத்தின் ஆதிக்கத்திற்கும் வாழமுடியாததால், அநேக திருமணங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன, இருந்தும் இவைகள் தற்பொழுதுள்ள சூழ்நிலையில் சில பெண்களால் எற்றுக்கொள்ளப்படுகின்றன. ஓர் இளம் மனைவி தனது கணவனுடன் சமுதாயத்தில் நடமாட எண்ணிப்பார்க்கிருள்.

பெண்மையின் முக்கிய கடமைகளை பெண்கள் அறிந்துகொள்ள பெற்ருேர் உதவலாம். அதேபோன்று இயற்கை நிகழ்வுகளை இளைஞன் தெரிந்துகொள்ள உதவவேண்டும். ஆணே, பெண்ணே எதிர்பாலாருடன் ஒன்றுதலில் பரந்த அக்கறையை உண்டாக்குதல் அவர்கள் ஒன்ருக விளையாடுகிருர்கள், ஒன்ருகப் பேசுகிருர்கள், ஒருவர் செயலில் மற்றவர் கவனம் செலுத்துகிருர்கள். இவ்விதமாக ஒரு பையன் தன் சகோதரியோடு விளையாட்டுக்களில் குறைந்த ஆசையைக் காட்டுகிருன். ஆனல் போட்டி விளையாட்டுக்களில் அதிக ஆவலைக் காட்டுகிருன். ஒரு பெண் தன் சகோதரனுடன் பால் கலப்புள்ள செயல்களில் அதிக ஆர்வமும் அதிக எதிர்பார்ப்புக்களையும் காட்டுகிருள். உளவியல் ரீதியான பாலுணர்வின் செல்வாக்கு மூன்று முதல் ஒன்பது வயதுக்கிடைப்பட்ட குழந்தைகளால் மிகவும் கூர்மையாக உணரப்படுகிறது. 3*

"நிபந்தனைகளுக்கு உட்பட்ட அன்பு அன்பன்று
அது தாய்ப்பாலுக்கு விலை பேசுவது போன்றது"

3. April O' Connell / Vinces O' Connell, Choice Changs, 1980, P. 87.

6

# புலனுணர்வும் புலன் காட்சியும்
# (Sensation & Perception)

புலனுணர்வும், புலன் காட்சியும் மனித வாழ்வுக்கு மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் இவையே நாம் நமது சூழலோடு தொடர்பு கொள்ள உதவும் பிரதான பாலமாகத் திகழ்கிறது. நாம் புலனுணர்வு, புலன் காட்சி என்பவற்ருல் பெறும் அறிவானது, நமது ஆளுமையின் உருவாக்கத்திற்கு இன்றியமையாததாக விளங்குகிறது.

புலன் உணர்வு, புலன் காட்சி என்பன தனித்தனியாக வேறுபட்டு நடைபெறும் நிகழ்வு அல்ல; ஒன்ருேடொன்று பின்னிப்பிணைந்து நிகழ்வன. புலனுணர்வு, புலன் காட்சி என்பன மிகவும் எளிமையானதுபோல தோன்றினுலும் பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

**புலனுணர்வு**

புலன்களினூடாக புறச்சூழல்பற்றிய அறிவைப்பெறும் செயற்பாட்டை புலனுணர்வு என அழைக்கப்படுகிறது. சூழலிலுள்ள பல்வேறு வகையான சக்திப்பரிமாற்றங்களினுலே தூண்டப்படும் வகையிலே புலனுறுப்புகள் அமைந்துள்ளன. புலனுறுப்புகள் புறக்காரணிகளினுல் தூண்டப்படும்போது ஏற்படும் தாக்கமானது நரம்புகளினூடாக மூளையைச் சென்றடைகிறது. (Transduction) மூளை இத் தாக்கத்தை உணர்ந்து செய்தியாக மாற்றுகிறது. ஒவ்வொரு புலனுறுப்பும் இவ்வாறே தொழிற்படுகிறது. உதாரணமாக கண்கள் ஒளிச்சக்தி பெற்று ஒளியுணர்வாக மாற்றுகின்றன.

ஐம்புலன்களிலும் கேள்வி, பார்வை ஆகிய இரண்டு புலன்களுமே மிக உயர்ந்த புலன்கள். எமது நடத்தையை நிர்ணயிக்கும் பெரும்பான்மையான தரவுகள், செய்திகள் என்பவற்றை கண், காது என்பவற்றினூடாகவே பெறுகின்ருேம். அதேபோல நுகர்வுணர்வு, சுவையுணர்வு, தொடுகையுணர்வு போன்றவற்றினுல் பெறும் செய்திகளும், எமது நடத்தையிலும் அன்ருட வாழ்க்கை அனுபவத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஒலியுணர்வு, ஒளியுணர்வு சுவையுணர்வு, நுகர்வுணர்வு, தொடுகையுணர்வு என்பன பிரதான புலன்கள் (Primary senses) எனப்படுகின்றன.

இவை உட்பட பதினொரு புலன்கள் உண்டு. இன்ப உணர்வு, நோவுணர்வு, வெப்ப உணர்வு, குளிர், பசி, தாகம் என்பன இரண்டாம் நிலைப்பண்புகள் (Secondary senses) என அழைக்கப்படும்.

அளவுக்கு அதிகமாக புலனுறுப்புகள் புறக் காரணிகளால் தாக்கப்படும்போது அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள அவை தற்பாதுகாப்பு அமைப்பினை இயல்பாகக்கொண்டு விளங்குகின்றன. உ+ம் அதிக சக்திவாய்ந்த ஒளி கண்ணை அடையும்போது கண்குத்து ஏற்படுகிறது. இதனால் பார்ப்பதைத் தவிர்ப்போம். இவ்வாறு புலனுறுப்புகள் தமக்குரிய வழியில் இயங்குகின்றன.

புலன் காட்சி

புலனுணர்விலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள், செய்திகள் என்பனவற்றை மூளையானது தெரிவுசெய்து ஒழுங்குபடுத்தி, விளங்கிக்கொள்வதையே புலன்காட்சி என்கிறோம். இது மூளையினுள் நிகழும் ஒரு செயற்பாடாகும். புலன்காட்சி ஏற்படும்போது தெரிவு நிகழ்கின்றன. நம் புலனுறுப்புகளைத் தூண்டும் அனைத்தையும் நாம் உணர்வதில்லை. உ+ம் ஒரேநேரத்தில் பல்வேறு வகையான ஒலியலைகள் செவிப்புலனில் கொண்டிருந்தாலும் நாம் நம்மையறியாமலே சிலவற்றை தெரிவுசெய்து கேட்கிறோம். நாம் தெரிவுசெய்து கேட்பதானது கவனம் செலுத்துதல் என்கிறோம். எல்லாப் புலனுணர்வுக்கும் இது பொருந்தும்.

நமது புலனுறுப்புகளிலிருந்து வரும் செய்திகள் தற்காலிகமாக எமது நரம்புத் தொகுதியிலே ஆராயப்படாமல் ஒழுங்கின்றி சேர்த்து வைக்கப்படுகின்றன என்பது ஆய்வுகளின் முடிவு. புலனுறுப்புகளிலிருந்து வரும் செய்திகளில் எது தேவையானது, தொடர்பானது என மனம் கணிப்பதன்மீதே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

ஒருவன் எதை நோக்குகிறான் (Perceive), எப்படி நோக்குகிறான் என்பது அவனுடைய தேவைகள், மதிப்பீடுகள் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. பணக்காரப் பிள்ளைகளைவிட ஏழைப் பிள்ளைகள் ஒரு நாணயத்தை அதன் உண்மையான அளவைவிட பெரிதாக எண்ணுவது ஒரு ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவர்களுடைய பணத் தேவையானது அவர்களுடைய புலன்காட்சியை எவ்வாறு பாதித்தது என்பது புலனாகிறது.

# 7

# அறிதிறன் (Intelligence)

அறிதிறன் (விவேகம்) மின்னியல் போன்றது. இலகுவில் கணக்கிட முடியும். ஆனால் வரைவிலக்கணம் கூற முடியாது. டேவிற் வெச்சலர் (David Wechsler) இன் கூற்றுப்படி ஒரு நபர் தேவைக்கேற்ப செயற்படுதலை ஒட்டுமொத்தமாகவும், தர்க்க பூர்வமாக சிந்திக்கவும் சூழலில் ஏற்படுபனவற்றை செயலூக்கமுடையதாகச் செய்யவும் விவேகம் உதவுகின்றது என்று கூறுகின்றூர். *1 முதன்முதலாக விவேகப் பயிற்சிகள் பிரான்சைச் சேர்ந்த உளவியலாளரான அல்பிறேற் பினேற் (Albred Binet) என்பவரால் மிக விமரிசையாக விருத்தி செய்யப்பட்டது. இவரே மனம் சார்ந்த முதிர்ச்சிக்கோட்பாட்டை அறிமுகப்படுத்தியவர். ஸ்ரான் போர்டு (Stanford), பல்கலைக்கழக உளவியலாளரான லூவிஸ் ரேமான் (Lewis Terman) என்பவர் மனம் சார்ந்த முதிர்ச்சிக்கும் (Mental age M. A.), கால வரிசையான முதிர்ச்சிக்கும் (Chronological age, C. A.) இடையேயுள்ள விகிதாசாரமே அறிதிறன் ஈவு (I Q) என வெளியிட்டார்.,

உ+ம்: ரவியின் வயது 10, அவனது மனவயது 12, அவனது

$$\text{அறிதிறன் ஈவு} = \frac{10}{12} \times 100 = 83$$

மன ஆற்றல்களை அறிய நம்பகமான பெறுமானமுள்ள தரப்படுத்தப்பட்ட அறிதிறன் பயிற்சிகள் உதவும். வாக்குவாய் விளக்கம், எண் ஆற்றல்கள், தர்க்கித்தல், இடக்கணிப்பு, பிரச்சனைகளைத் தீர்க்கும் ஆற்றல் முதலியவை மனத்தால் இயக்கப்படும் ஆற்றலில் அடங்கும். அறிதிறன் பயிற்சிகள் பலவித பயன்களை உடையவையாயினும் எல்லா உளவியலாளரும் இதை ஏற்றுக்கொள்வதில்லை. அறிதிறன் வளர்ச்சியில் மரபு நிலையும், சூழலும் பெரும்பங்கு கொள்வதாக சில உளவியலாளர்கள் கருதுகிறார்கள். வேறு சிலர் மரபுநிலை – சூழல் தொடர்புகளைக்கொண்டு ஒத்திருக்கும் முறையை ஆராய்கிறார்கள்.

மூளையும் நடத்தையும் (Brain and Behaviour)

உளவியல், இரசாயன கரு கூலங்களே மூளையின் சிந்தனைக்கும் உணர்வுக்கும் நடத்தைக்கும் காரணமென மூளை ஆராய்ச்சியாளர்கள்

1. Ernest R. Hilgard, "Introduction to Psychology", Eighth edition. (U S. A. Harcourt, Brace Jovanovich, Inc 1983. P. 367

கூறுகிறார்கள். 10 அல்லது 12 கோடி நரம்புக் கலங்கள் சேர்ந்தே நரம்பு மண்டலத்தை ஆக்குகின்றது. நரம்புக் கலங்கள் வெவ்வேறு அளவில், உருவத்தில் இருந்தபோதிலும் செய்திகளை ஏற்கவும் அவற்றைத் திரும்ப அனுப்பவும் கூடிய விசேட தன்மை உடையனவாகும்.

மூளைக்கு மூன்று சிறப்பான தொழிற்பாடுகள் உண்டு.

(1) தூண்டுதல்களை உள்வாங்குதல்.

(2) அவற்றைப் பகுத்துத் தீர்மானித்தல்.

(3) தசையை அல்லது சுரப்பிகளை செயற்படச்செய்தல்.

உடலின் இரு ஒருங்கிணைவுகளான நரம்பு மண்டலம் (இது மின்னியல் தூதுவர்) மற்றது உள்ளாரச் சுரப்பிகள் (இவை இரசாயனத் தூதுவர்) என்பவை தன்னின செயற்பாட்டுக் கலங்கள். தொடர்ச்சியாகத் தொழிற்பட உடலைச் சமநிலையில் வைத்துக்கொள்கின்றன. மனித மூளையின் உள்ளறையில் தாலமஸ் என்ற பகுதியில் புலனறிவு, உணர்ச்சி வேகம் சார்ந்த நரம்புகள் இருப்பதால் இன்னிசையால் அவன் ஆட்கொள்ளப்படுகிறான். நடத்தையையும் சிந்தனையையும் விளக்க மூளையையும், நரம்பு மண்டலத்தையும் ஆராய வேண்டுமென சில உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

உரிமைகளை மட்டும் எண்ணிய சமுதாயம் மேன்மை அடைந்ததில், கடமைகளைக் கருதியவர்களே மேன்மை அடைகிறார்கள். கடமையைச் செய்தால் உரிமைகள் தாமாகவே வந்து அடையும்!

- மகாத்மா காந்தி -

# 8

# நனவு நிலை (State of Consciouness)

எமது அன்றாட வாழ்க்கையில் எமக்கு ஏற்படும் அனுபவங்கள் மனித நனவு நிலைகளுக்கு ஏற்றவாறு பிரதிபலிக்கின்றன. இவ்வாறு பிரதிபலிக்கும் அனுபவங்களின் அடிப்படையில் உளவியலாளர்கள் மனத்தின் நிலைகளை ஐந்து பிரிவுக்குள் அடக்குகின்றனர்.

சாதாரண நிலையில், மனம் (normel walking Consciousness,) நித்திரையும் கனவு நிலையில் மனம் (sleep & dream), தியான நிலையில் மனம் (meditation), அறிதுயில் நிலையில் மனம் (Hypnosis). போதை மயக்கத்தில் மனம் (Psychoactive drugs).

**சாதாரண நிலையில் மனம்:-**

நனவானது புலனுணர்வுகள், உணர்ச்சிகள், விம்பங்கள், சிந்தனைகள், புலன்காட்சிகள் கொண்ட ஒரு தொகுப்பாகும். மனமானது, எந்நேரமும் சுயநலமுள்ளதாகும் மனத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துள் நடக்கும் அனுபவத்துள் அடக்கி விடமுடியாது. இது தொடர்ச்சியான மாற்றத்தைக் கொண்ட நிலையாகும் இந்த மனத்தின் நிலையானது அந்தக் கணத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்த மனநிலை (Passive Consciousness) எதிர்கால சாத்தியக் கூறுகளை அறிகின்ற மனநிலை (Active Consciousness) என்னும் இரு வழிகளில் செயற்படுகின்றது.

**நித்திரையும் கனவு நிலையில் மனம்:-**

நித்திரை என்பது உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது ஒன்றாகும். நாம் எமது அன்றாட வாழ்க்கையில் மூன்றில் ஒரு பாகத்தை நித்திரையில் செலவிடுகிறோம். கிட்டத்தட்ட 24 மணித்தியாலத்தில், 7 1/2 மணித்தியாலத்தை நித்திரைக்கு செலவு செய்கிறோம். நித்திரையானது மனிதருக்கு மனிதர் மாறுபாடுடையதாக இருக்கும். தூங்குபவர் 20 தொடக்கம் 40 தடவைகள் உடல் அயர்வு நிலையில் மாற்றம் செய்வர் மூளையின் அலை அதிர்வில் ஏற்படும் அலைவடிவினை 1930 ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மூளையின் தொழிற்பாட்டை படமெடுக்கும் மின்னியக்கக் கருவி (Electroencephalogram) காட்டுகிறது. நித்திரையாகவுள்ள தருணத்தில் ஹர்மோன்கள் புதுபபிக்கப்படுகின்றன, உடம்

பானது ஒழுங்கமைவாக வளர்ச்சியடைகிறது, உடலின் ஆக்க மூலப் பெருக்க, தூண்டல்கள் வளர்ச்சியடையும், அத்துடன் உடல்நலம் பெறச் செய்கிறது.

1*

நித்திரையின் போது மூளையின் எடுத்துக்காட்டமைப்பு, 5 படி நிலை களை உள்ளடக்கியுள்ளது. இந்நிலைப்பாடானது இரவில் மாறி மாறி நடை பெறும் தன்மை கொண்டது. 10—20 நிமிடங்கள் துயில் கொள்ள ஆரம்ப மாகும் நிலை முதலாம் படிநிலையாகும். இதன்பின் மிதமாக துயில் கொள்ளுவர் 3-வது நிலையாக ஆழ்ந்த தூக்கத்தில் நிலை கொள்வர். பின் மிதமான துயில் நிலைக்கு கொணரப்படுவர். 5 வது நிலையாக விரைந்த கண்ணின் அசைவாக்கமாகும் (Rapid eye movement, REM) கனவு கள் கூடுதலாக REM நிலையில் தான் ஏற்படும். இரவில் இறுதியாக நிலைகொள்ளப்படும் REM நிலையில் இலகுவாகக் கனவை நினைவுக்குக் கொண்டு வரக் கூடியதாய் இருக்கும். ஒவ்வொரு மனிதனும் 1—2 மணி த்தியாலங்கள் REM நிலையில் துயில் கழிக்கின்றான். சாதாரணமாக ஒவ் வொரு இரவு வேளை நித்திரையிலும் 4—6 கனவுகள் காண்பர். முதற் கனவானது கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் எடுக்கும். இறுதியாகக் காணும் கனவு கிட்டத்தட்ட 35 நிமிடம் எடுக்கும் இரவில் துயில் கலையும் கணப் பொழுதில் ஒருவர் கனவை REM நிலைப்பாட்டில் காண்பாராயின் அவ் வேளை அவர் கண்ட கனவை, உறுதியாகக் கூறக்கூடிய வாய்ப்பு உண்டு. மற்றைய வேளையில் கனவு காண்பாராயின் நினைவுக்கு கொண்டுவரு வது கஷ்டமாகும்.

உணர்வு நிலையுடைய கனவுகளின் கற்பனைகள் வெளிப்படையான உள்ளடக்கம் என்றும், உணர்வற்ற நிலையில் கனவுகள், கற்பனைகள் தெளி வாக்கம் வெளிப்படையற்ற உள்ளடக்கம் என்றும் புரொய்ட் கூறியுள் ளார். அநேக உளவியலாளர்கள் கனவை 4 சிறப்புப் பண்புகளாகப் பிரித் துள்ளார்கள். அவையாவன:- ஒளிர்வு மிக்க வண்ணப்பகட்டான மனக் காட்சிக்குரிய உருவம், விசித்திர பாணியில் அமைந்த செயற்பாடு, மனக்கிளர்ச்சியின் கனவு, மருட்சிக்குரிய கனவாக இருக்கும் பிறந்த குழந்தையானது 50 வீதம் நித்திரையின் போது REM நிலையில் துயில் கொள்ளும், வளர்ந்த குழந்தையானது 30—40 வீதமும், வளர்ந்தோர் கிட்டத்தட்ட 20 வீதமும் நித்திரையின் போது REM நிலையில் துயில் கொள்வர். *2

---

1. Claire Rayner, "Time Presents the Rand McNally atlas of the Body", (New York, Rand McNally & company, 1980) P. 105.

2. George R. Goethals, "Psychology", (U S.A. Scotl, foresman ana Company, 1983) P. 170

பெண்கள் ஆண்களிலும் பார்க்க சொற்பம் கூடுதலாக அவர்களின் உணர்ச்சி இயல்பின் தன்மையினுல் கனவு காண்பார்கள். விஞ்ஞானிகள் கனவு நிலையில், மூளையின் அலை அதிர்வை பரிசோதிக்கும் வேளை கனவு காண்பவரின் கண் ஆனது கண்மடலில் அடிப்பாகத்தில் அசைவுறுவதைத் தெரிந்துகொண்டார்கள். கனவானது நபரின் பிரச்சனைகளுக்கு தீர்வை உண்டு பண்ணக் கூடியதாகவும், அவரின் பிரச்சினைகளில் உள்ளாந்தமாக செயற்படக் கூடியதாகவும், அவரின் உள்ளக் கிளிர்ச்சியைத் திருப்திப்படுத்தக் கூடியதாகவும் செயற்படவாய்ப்புண்டு.

கனவு நிலையில் மனமானது இயல்பாகவே ஒரு உயர்நிலையில் வைக்கப்படுகின்றது. இது ஒரு குழம்பிய நிலையாகும். எனெனில் நினைவுகள் நிஜங்கள் தான் என்ற ஒரு பூரித்த நிலை இம்மனநிலை நீடிப்ப தொன்றல்ல.

அநேகமாகக் கனவுகள் பார்வைக்குரியதும் வண்ணப்பகட்டானதுமாய் இருக்கும், ஆனுல் பிறவியிலேயே பார்வையற்றவர்கள் ஒலி, மணம், தொடுகை என்னும் உணர்வின் மூலம் கனவுகளை உணர்கிறுர்கள். பெண்கள் ஆண்களிலும் பார்க்க வண்ணப்பகட்டான கனவுகளைக் காண்பார்கள். கலைத் தொழிலாளரும் வண்ணப் பகட்டான கனவுகளைக் காண்பார்கள். கனவுகளுக்கும் பலவகையான சின்னங்கள் பயன்படுத்தப்படுகிறது. ஆண்கள் கூடுதலாகப் பெண்சார்ந்தவையிலும் பார்க்க ஆண்கள் பற்றிய கனவுகளையே காண்பார்கள்.

ஆண்கள் ஆண் பாலரின் மேல் கூடுதலாக ஆக்கிரமித்தும், பெண் பாலரின் மேல் குறைவாக ஆக்கிரமித்தும், ஆண்பாலரின் நண்பரின் பின்னிய செயல் விளைவு குறைவாகவும், பெண்பாலரில் நண்பரின் பின்னிய செயல்விளைவு கூடுதலாகவும் கொண்டு கனவு காண்பார்கள். பெண்கள் நடுநிலையுடைய விதமாக இருபாலாரையும் கனவு காண்பார்கள். பெண்கள் ஆண்பாலாரையும், பெண்பாலாரையும் ஆக்கிரமித்தும், ஆண்பாலரில், பெண்பாலரில் நண்பரின் செயல் விளைவு நிறைந்ததாகவும், கனவுகாண்பார்கள். புரோயில்ட் என்பவர் கனவை ''உணர்வற்ற நிலைக்குரிய பேரளவினதான பாதை'' என்று குறிப்பிடுகிறுர் ஜெறேம் சிங்கர் (Jero--me Singer) என்பவர் பகற்கனவானது ஒருவரின் புகழ் ஆர்வத்துக்கும் ஊக்குவித்தலிக்கும் சிறப்பான வாய்க்காலாக தொழிற்படும் என்று கூறியுள்ளார்.

(Insomnia) உறக்கமின்மை நோய் என்பது பல வடிவங்களாலும், பலகாரணிகளாலும் ஏற்படலாம் இந்நிலையானது வாழ்க்கையில் பல நிலைகளில் ஆண்களின் சூழ்நிலைக்கு எற்றவாறு ஏற்படலாம். (Somna-mbulism) துயில் இயக்கம் நடைபெறும் தருணம் உடலானது தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும், ஆனுல் ஆற்றல் துயில் நிலையில் இருக்கும்

துயில் மயக்க நோய்(Narcolopsy) உள்ளவர் துயில் கொள்ளும் தருணம் உதாரணமாக கடிதம் எழுதலாம், வாகனம் செலுத்தலாம்.

### தியான நிலையில் மனம்

தியானம் என்பது நித்திரையிலிருந்தும் மனதின் இயல்பான விழிப்பு நிலையிலிருந்தும் வேறான ஒரு மன உணர்வு நிலை. இதுபல வழி முறைகளினால் சுலபமாகவே உருவாக்கிக் கொள்ளலாம். இது சாதாரண மன உணர்வு நிலையிலிருந்து வேண்டிய ஒரு மாற்றத்தை ஏற்படுத்து வதற்கான பயிற்சியுமாகும். பொதுவாகத் தியானம் என்பது எமது வெளி அவதானத்தை உள்நோக்கி நிலை மாறுதல் எனக் கருதப்படும். மரவுவழி வந்த தியான அமைப்புகள் சைவசமயத்தை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைக்கோவையடங்கிய யோகப்பியாசங்களையும் (yoga), சீன, ஜப்பானிய பௌத்தத்திலிருந்து பெறப்பட்ட சென் (zen) எனப் படும் தியானமுறைகளையும் பின்பற்றின. தியான நிலையில் மனமானது ஒருவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு உசார் நிலைப்படுத்தப்படுகிறது. இங்கு மனம் ஒரு நிலைப்படுத்தப்பட்ட பக்குவ நிலையை அடைகின்றது. வெளித் தூண்டல்கலால் மனம் பாதிப்படையாத நிலையாகும்.

ஆழ் நிலைத்தியானம் அல்லது சமாதி நிலையான தியானம் (Tra--nscendental Meditation) என அழைக்கப்படும் தியான அமைப்பு பல ருக்கு நன்கு அறிமுகமானதாகவுள்ளது. தியானிப்போர் அதிகமாகத் தங்கள் தியானவேளைகளின் போது உள்ளனமதிமிக்க அனைத்திலிருந்து விடுபட்ட ஓர் நன்நிலையில் தாம் இருப்பதை உணர்ந்ததாகவும், அந் நிலையானதுஅவர்களது நாளாந்த நடவடிக்கைகளில் தொடர்வதாகவும் அறிக்கையிட்டுள்ளனர். அத்தகைய அனுபவத்தைப்பெற்ற ஒருவரிடமிருந்து தியானம் செய்யக் கற்றுக்கொள்ளுதல் எப்போதும் புத்திசாலித்தனமான தாகும்.

### அறி துயில் நிலையில் மனம்

அறிதுயில் நிலையில் மனத்தின் சுய உணர்வானது இன்னொரு வரின் உதவியோடு குறிக்கப்படுகின்றது. இதனால் இந்நிலையிலுள்ள மன மானது மிக சக்தி வாய்ந்த ஒன்றாக உருவாகின்றது. அத்தோடு புலன் காட்சியில் (Perception) ஏற்படும் மாற்றத்தை அனுபவிக்கக்கூடிய நிலைக்கு ஒருவனை உட்படுத்துகிறது.

### போதை மயக்கத்தில் மனம்

போதை மயக்கநிலையில் போதைப்பொருட்களால் மூளையின் சாதா ரண செயற்பாடுகள் உசார்ப்படுத்தப்பட்டு அதன் சாதாரணமாக மன அனுபவத்தில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. இம்மாற்றமானது நீடிப்ப

தில்லை அத்தோடு மனம் சாதாரண நிலைக்குத் திரும்பிய பின் நடந்த மாற்றத்தை அறியும் திறனை இழக்கின்றது. தொடர்ச்சியாக பயன்படுத்தின் உளவியல் தொடர்பான தாக்கத்தை உண்டுபண்ணும், உடல் உள சீரழிவுக்கும், பாலியல் துர்நடத்தைகளுக்கும் குற்றச் செயல்களும் போதைப்பொருள்களின் உபயோகம் முக்கிய காரணமாகும்.

நாணயமற்ற உறவுப் பரிமாற்றம்
நியாயமான எதிர்பார்ப்புகளை
நிறைவு செய்யமாட்டாது.

நாணயமான உறவுப் பரிமாற்றம்
நியாயமற்ற எதிர்பார்ப்புகளை
வேண்டி நிற்காது.

ஆழமான உறவிலே ஆளுமை சிதைவுறுவதில்லை;
ஆணவம் அடிமைப்படுவதில்லை;
அந்தரங்கள் அம்பலமாவதில்லை.

9

# தனி மனித ஆளுமை Personality

ஆளுமை என்பதற்கு திருத்தமான வரைவிலக்கணம் கூறுவது சிரமமானதாகும். ஏனென்றால் ஆளுமை என்பது உளவியலிலே பரந்த பொருளுடைய சொல். ஆளுமை என்பது ஒருவனுடைய உடற்பண்புகள், உளப்பண்புகள், மனப்போக்குகள் சமூக அறநெறிப்பண்புகள் போன்ற எல்லாப்பண்புகளின் பிணைப்பைக் குறிக்கின்றது. ஆளுமை ஒரு மனிதனைப் பற்றிய முழுவிளக்கமுமாகும். ஒருவனது உடற் தோற்றம், உள்ளம், உணர்ச்சி, இயல்பூக்கங்கள் அனைத்தும் அவனது ஆளுமையை நிர்ணயிக்கின்றன.

ஆளுமையானது இருகாரணிகளில் தங்கியுள்ளது. சில மரபுநிலைப் பட்டவை. ஏனையவை சூழ்நிலைப்பட்டவை. இவ்விரு காரணிகளால் உருவாகும் ஆளுமையில் ஒருவருக்கொருவர் மாறுபடுவது இயற்கை. ஆளுமை வளர்ச்சியில் மரபுநிலைக்கு முக்கிய பங்கு உண்டு. ஒருவனது உடலமைப்பு அவனது மரபுநிலையையே பொறுத்ததாகும். கிட்டத்தட்ட ஆறு பரம்பரைக்கு அதன் செயற்பாடு இருக்கலாம். அவனது உயரம். பருமன், தோற்றம், உடற்பண்புகளும் அவனுடைய ஆளுமை வளர்ச்சியை பாதிக்கின்றன. உடலமைப்பில் எதாகிலும் குறைபாடுகள் அவனுடைய நடத்தையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

மரபுநிலைக் காரணிகளைப் போலவே, சூழ்நிலையும் பெரும்பங்கை வகிக்கின்றது. ஒரு சமூகம் ஏற்றுக்கொண்ட கொள்கைகள், பண்பாடு அச்சமூகத்தில் வாழும் ஒருவனது ஆளுமை வளர்ச்சியில் பெரும் பங்கை வகிக்கின்றன.

பொதுவாகக் கூறுமிடத்து ஆளுமை வளர்ச்சி என்பது ஒருவன் தனக்கே உரித்தான நடத்தைக் கோலங்களைப் பெறும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். உடல் தோற்றம், உளவளர்ச்சி, உணர்வுத்திறன், ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற ஆளுமையில் முழுமை அடைவதே முதிர்ச்சி அடைவதாகும். ஒவ்வொரு வயதிற்கும், பருவத்திற்கும் ஏற்ற ஆளுமையில் முதிர்ச்சி அடைய வேண்டியது இன்றியமையாததாகும்.

தற்காலிக உளவியல் தொடர்பான, ஆளுமையின் ஆராய்ச்சியை நான்கு முழு உளக்காட்சியாக (Perspective) உளவியலாளர்கள் பகுத்

துள்ளார்கள். அதாவது உள ஆற்றல் சார்ந்தது. (Psychodynamic) தனிக் கூறு (Trait) புறவாழ்வுக் கூறு (Behavioural) மனித இன இயற் பண்பு (Humanistc) ஆகும்.

**உள ஆற்றல் சார்ந்த உளக்காட்சி**

20 ம் நூற்றுண்டளவில், உளவியலிலே ஒரு புரட்சி ஏற்படுத்திய வர் சிக்மண்ட் புறெய்ட் (Sigmund Freud) என்று கூறலாம். அவரின் கோட்பாடு இயற்கை, வாழ்வு, மனம் என்ற மூன்றுக்கும் விரிவான விளக்கம் கொடுக்கிறது. இவரின் விளக்கத்தின் மையமாக விளங்குவது "நனவிலி உள்ளம்" அல்லது "அடிமனம்" (Unconsciousmind) என்று கூறலாம். மனம் என்பதை மூன்றுகப் பிரிக்கின்றுர் நனவு உள்ளம் (Conscious Mind) நனவு அடி உள்ளம் (Preconscious Mind) நனவிலி உள்ளம் (Unconscious Mind) எனப்படும்.

**நனவு உள்ளம்:-**

உடன் எண்ணங்கள் சிந்தனைகள் கொண்டிருக்கும் பகுதி.

**நனவு அடி உள்ளம்:-**

உடன் ஞாபகத்திலிருந்து மறைந்திருக்கும் விடயங்களை உள்ள டக்கும் பகுதி இங்கிருந்து மறந்திருப்பவைகளை ஞாபகப்படுத்திக் கொள் ளலாம்.

**நனவிலி உள்ளம்:-**

இப்பகுதியில் ஒருவனது எண்ணங்களும், விருப்பங்களும் அடங்கு கின்றன. விருப்பங்களே அதிகமாக உறைந்து கிடக்கின்றன. உளவாற் றலால் இவ்விருப்பங்களை முதலாம் பகுதிக்குள் கொண்டுவரலாம்.

மனிதனின் ஆளுமையானது மூன்று கட்டங்களிலேயே உருவாக் கப்படுவதாக புறெய்டு கருதினுர்.

அதாவது (Id) "அது" பூர்வீக உத்திகைகளாய் ஆனது தனிப் பட்ட ஒருவரின் உணர்வு உந்தல் நனவிலி நிலையில் செயற்படும்
(Ego) "அகம்" உணர்ச்சியுள்ள தூண்டுதல்களால் ஆனது.

"நான்" எனும் முனைப்பை உடையது.
நனவு நிலையில் கூடுதலாக செயற்படும்.

(Super Ego) "மீயகம்" கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும் கட்டமாக வும், அவைகளை மீறுகின்றபோது தண்டனையை யும் விதிக்கக்கூடியதாகவும் உள்ளது. நனவு நிலை, நனவு அடி நிலை நனவிலி நிலை, என்ப வற்றை தன்னகத்தே கொண்டதாக இருக்கும்.

"ஒவ்வொரு தனிமனிதனும், அவனது முதல் ஐந்து வருடகால வாழ்வின் போதும் அவனது ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கும் பல வளர்ச்சிப் படிகளைத் தாண்டிச் செல்லுகின்றான்" என சிக்மன் புரொய்ட் என்ற உளவியலாளர் நம்பினார். இக்கால அளவினை அவர் உளரீதியான பாலியற்பருவங்கள் (Phycho Sexual Stages) என அழைக்கிறார். இக் கால அளவானது ஐந்துவகையான வளர்ச்சிப்பருவங்களைக் கொண்டுள்ளது.

1. வாய் சார்ந்த பருவம் (Oral Stage)

இப்பருவமானது குழந்தையின் முதல்வருட வாழ்வினைக் குறித்து நிற்கின்றன. குழந்தையானது பிறந்ததிலிருந்து முதல் வயது முடியும் வரை இப்பருவத்தில் வாழ்கிறது. தாயின் முலையில் பால்பருகுவதன் மூலம் குழந்தையானது தனது பசியைப் போக்குவதோடு நிறை மகிழ்ச்சியையும் அடைந்துகொள்கிறது. இப்பருவத்திலே குழந்தையின் வாயும் உதடுகளும் உணர்வு மிக இன்பமளிக்கும் பகுதிகளாக இருப்பதனால் தாயின் மார்பிலே பால் பருகும்போது பாலியல் இன்பத்தை அது அனுபவிக்கின்றது. குழந்தையின் இத்தகைய கால வாழ்வின் போது போதியளவு உணவு, அன்பு என்பவற்றை குழந்தை பெறாமல் போவதன் விளைவாக பேராசை, அனைத்தையும் தனக்கெனக் கொள்ளும் தன்மை வளர ஏதுவாகின்றது. அன்னையின் அன்பும், அரவணைப்பும், உணவும் போதியளவில் இப்பருவத்தில் கிடைக்காவிடத்து, அவனது பிற்கால வளர்ச்சியினைப் பாதிக்கும். பல பிரச்சனைகள் எழுகின்றன. நம்பிக்கையீனத்தை அடிப்படையாகக் கொண்டு உலகினை வெறுப்புணர்வோடு நோக்கல், மற்றவர்களை அண்டி செல்லப் பயம், வரண்ட உள்ளம் மற்றவர்களை அன்பு செய்யவும் அவர்களில் நம்பிக்கை கொள்ளவும் தயக்கம் தன்னைப்பற்றி மிக இழிவாக எண்ணுதல், சமூகத்திலிருந்து விலகி எப்போதும் தனிமையை நாடுதல், நெருங்கிய நட்புறவுகளை உருவாக்கி வளர்க்க இயலாமை போன்ற பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும், இப்பருவத்தில் அக்குழந்தையானது தன்னிலும், மற்றவர்களிலும், இவ்வுலகத்திலும் முழு நம்பிக்கை கொண்டு வாழச் செய்வது இன்றியமையாததாகும். நிறை அன்பைக் கொடுப்பதன் மூலம் குழந்தை மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளுக்குள் சிக்குவதை தவிர்த்துக் கொள்ளலாம். மற்றறவர்களால் அன்பு செய்யப்படும் குழந்தைகளுக்கு தங்களை ஏற்றுக் கொள்வதில் எவ்வித கடினமும் இருப்பதில்லை. ஆனால் இப்பருவத்தில் மற்றவர்களால் வேண்டப்படாத, ஏற்றுக்கொள்ளப்படாத, அன்பு செய்யப்படாத குழந்தைகள் தங்களைத் தாங்களே ஏற்றுக்கொள்வதில் கஷ்டப்படுவர். இப்பருவத்தில் வெறுக்கப்படுவதன் விளைவாக இவர்கள் தங்கள் பிற்பட்ட வாழ்க்கையில் பயந்தவர்களாக பாதுகாப்பற்றவர்களாக, எப்போதும் பதற்ற நிலையில் உள்ளவர்களாக, இவற்றோடு வெறுப்பு, பொறாமை, தனிமை முதலிய பண்புடையவர்களாகவும் இருப்பார்கள்.

2. குதவாய் சார்ந்த பருவம். (Anal Stage)

இப்பருவமானது முதல்வயதுக்கும் மூன்றும் வயதிற்கும் இடைப் பட்ட பருவமாகும். இப்பருவத்திலே குழந்தை பயிலவேண்டியது யாதெனில் தனித்துவம், தற்பலம், தன்னுரிமை இவற்றோடு எதிர்மறையான உணர்ச்சிகளைக் கண்டறிந்து அவற்றைக் கையாளல் என்பனவாகும் இரண்டாம் வயதின் ஆரம்பத்தில் இருந்து மூன்றும் வயதினுக ஆளுமை உருவாக்கலில் தனிச்சிறப்பு வாய்ந்த பங்கேற்பது குதவாய் பகுதியாகும். தற்போது குழந்தைகள் பெற்றோரின் வற்புறுத்தல்களை தொடர்ச்சியாக எதிர்நோக்குகின்றனர். இப்பருவத்தில் குழந்தைகள் மலம்கழித்தலை தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துச் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றனர். இரண்டாம் வயதில் மலங்கழித்தல் பயிற்சி ஆரம்பமாகும்போது அத்தகைய அநுபவத்தைக் கட்டும்பாடோடு பெறுகின்றனர். இப்பருவத்தில் அவர்களுக்கு இன்ப உணர்வூட்டும் பகுதி குதவாய்ப்பகுதியாகும். மலம் கழிக்கும்போது அவர்கள் ஒருவகை இன்ப உணர்வைப் பெறுகின்றனர் மலங்கழித்தல் பயிற்சி முறையின்போது குழந்தையை நோக்கி பெற்றோரின் உணர்வுகள், மனநிலைகள், எதிர்ச்செயல்கள் என்பன அதன் ஆளுமை உருவாக்கலில் பல விளைவுகள் தோற்றுவிக்கும். குழந்தைகள் தமது உடற் செயற்பாட்டைப் பற்றிக்கொள்ளும் மனநிலைகள் அதிகமாகப் பெற்றோர் கொண்டிருக்கும் மனநிலைகளின் விளைவுகளாகவே அமைகின்றன. இப்பருவத்திலே குழந்தைகள் உலகில் தமக்கென ஒரு குறிப்பிட்ட இடத்தை எடுக்க விளைகின்றனர். இதில் நடக்க, போக, சிந்திக்க, தனை நார்களைக்கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றல்கள் விரைவாக விருத்தியடைகின்றன. இப்பருவத்தில் குழந்தைகள் பெற்றோரின் வலுக்கட்டாயத்திற்கு உள்ளானால் குழந்தைகளின் எதிர்கால ஆளுமை வளர்ச்சியில் சுயமை, சுதந்திரம் பாதிப்படையும்,

3 உற்பத்தி உறுப்பு சார்ந்த பருவம் (The phallie Stage)

இப்பருவம் மூன்று வயதிற்கும், ஐந்து வயதிற்கும் இடைப்பட்டதாகும். இயந்திரம் போன்று புலனுணர்வு ஆற்றல்களும், குழந்தைகளுள்ளிருக்கும் திறமைகளும் விருத்தியடையத் தொடங்குகின்றன. இதில் பாலியல் நடத்தை மிகவும் மும்முரமானதாகின்றது. அத்தோடு அவர்களின் கவனம் ஆண்களாயின் ஆண்குறி நோக்கியும், பெண்களாயின் இனப்பெருக்க உறுப்பு நோக்கியும் செலுத்தப்படுகிறது. பாலியல் கவர்ச்சியால் இனப்பெருக்க உறுப்புக்களைக் கையாடல் இப்பருவத்திற்குரிய சாதாரண செயலாகும். இதனைப் பெற்றோர் பிழையாக எடை போடக்கூடாது. தங்களது உடல்களைப் பற்றி அறிவதில் ஆர்வம் கொண்டு இவர்கள் அவற்றை அறியவும் இருபாலருக்கிடையேயுள்ள பால் வித்தியாசங்களை கண்டறியவும் ஆர்வம் கொள்கின்றனர். இப்பருவத்திலேயே அவர்களின் மனச்சான்று வளர்ச்சியடைகின்றது; அத்தோடு

ஒழுக்க நெறிகளையும் பயின்று கொள்ளுகின்றனர். இதில் பெற்றோர் அதிக கண்டிப்பான நடைமுறைப் படுத்த முடியாத நெறிகளை அவர்க ளுக்கு போதிப்பதன் மூலம் பிள்ளைகளது ஆளுமையின் ஞாபகமாகிய மீய கத்தின் (Sujses ego) மிதமிஞ்சிய கட்டுப்பாட்டிற்குள் நடத்திச் செல்வர். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு பாலியல் தூண்டல்கள் தீயன, தகாதன எனப் போதித்தால் அவர்க தமக்கேற்படும் பாலியல் தூண்டல்களைப் பற்றி குற்றப்பழியுணர்வு கொள்ளத் தொடங்குவர், இந்த உணர்வு அவர்கள் வளர்ந்த பின்னரும் அவர்களுக்குள்ளிருந்து மற்றவர்களோடு சமூக உறவு கொள்வதைத் தடைசெய்யும். இன்னும் குற்றப்பழி, மிகுந்த கண்டிப்பு, உளநோவு, தன்னைப்பற்றி இழிவாக மதிப்பிடல் தன்னைத் தானே தீர்ப்பிடல் போன்ற விளைவுகளும் எற்படலாம்.

### 4 முதிர்வுருப் பருவம் (The Latency period)

மேற்கூறிய பருவமானது 5ம் வயதில் முடிவடைந்ததும் ஓர் நீண்ட அமைதியான உளவியல் வளர்ச்சி குழந்தையில் ஏற்படுகிறது. இப் பருவம் முதிர்வுருப்பருவம் எனப்படுகிறது. இது பிந்திய பிள்ளைப் பருவத் திலிருந்து பூர்புப்பருவம் வரை நீடிக்கிறது. இக்காலத்தில் சிறுவர் தங் களைச் சுற்றியிருக்கும் உலகைப்பற்றியும், மற்ற மக்களைப்பற்றியும் தங்க ளது சொந்த ஆற்றல்கள், திறமைகளைப் பற்றியும் அதிகம் கற்றறிந்து கொள்ளுகிறார்கள்.

### 5 பிறப்புறுப்பு சார்ந்த பருவம் (The genital Stage)

இளம் நபர் ஒருவர் பூப்புப்பருவம் அல்லது பாலியல் முதிர்ச்சியினை அடையும் போது ஆணோ அல்லது பெண்ணோ தனது இறுதி வளர்ச்சிப் பருவத்தை அடைகின்றார். இப்பருவம் பிறப்புறுப்பு சார்ந்த பருவம் எனப்படுகிறது. இப்பருவத்தில் அவர் முதற்தடவையாக வலிமையான முதிர்ச்சி மிக்க தூண்டல்களை அல்லது விருப்பங்களை உணரத் தொடங்கு கிறார்.

தனிக்கூற்று உளக்காட்சியில் ஆளுமையான தொடர்ச்சியான எண் ணிக்கை கொண்ட உருவகக் கூறுடையதாகும். இது தனிப்பட்ட நடத் தையை வரையறுக்கப் பயன்படுகின்றது. உள ஆற்றல் சார்ந்த முறைக்கு முரணானதாகும்.

தூண்டல் இன்னதென்று தெரிந்தால், அதனால் ஏற்படும் துலங் கல் இன்ன தென்று உறுதியாகக் கூறலாம் அவ்வாறே துலங்கல் யாதென்றுணர்ந்தால், அது எதனால் தூண்டப்பட்டிருக்கும் என்று துணிந்து கூறிவிடலாம் என்பர் நடத்தை வாதத்தினர். அகநிலை உணர் வுக்கு புறம்பான நிகழ்ச்சியாலும் வலிமை ஊட்டும் காரணிகளாலும் விளையும் தனிச்சிறப்பான பண்பானது ஆளுமை உருவாக்கலில் பெரும்

பங்கு வகிக்கின்றது. சமூக கூட்டான கற்றலில் ''வோல்ரர் மைக்கேல்'' (Watter mischel) என்பவர் தனியொரு மனிதனின் மாறுபாட்டை ஐந்தாகப் பகுத்துள்ளார். அவையாவன ஆற்றல்; நீர் என்ன செய்ய முடியும்? அறிவாற்றலின் சூழ்ச்சி முறை; எப்படி இவற்றை அணுகுவீர்? எதிர்பார்க்கப்படுபவைகள்; என்ன சம்பவிக்கும்? அகவுணர்வு நிலைக்குரிய மதிப்புகள்; இதனுடைய தகமை என்ன? தன்னைத்தானே ஒழுங்கு செய்யும் முறையும் திட்டமும்; எப்படி இதனை எய்தப் பெறுவீர்? 1*

மேற்கூறியவை தனிப்பட்டவர்களின் சூழ்நிலைக்கேற்ப மாறுபட்டு அமையக்கூடியவையாகும். சமுதாயக் கூட்டான வளர்ச்சியானது தனித்துவமான உருவாக்குதல், பெற்றோருடன் உறவுமுறை, ஒத்த வயதானவர்களுடன் உறவுமுறை, புதுமலர்ச்சிப் பருவத்தில் பாற்தன்மை என்பவற்றை உள்ளடக்கியதாகவும், வளர் இளம் பருவத்தினர் இயல்பாகவே தலைமயிர் அலங்கரிப்பதிலும், புதுவகையான உடை அணிவதிலும் விருப்பங்கொள்வர். இக்காலப்பகுதியில் அநேகமான இளமைபருவத்தினர் பெற்றோருடன் அடிப்படை மதிப்பீடுகளைப் பற்றியும் நடத்தைகளைப் பற்றியும் கேள்வி எழுப்புவார்கள் ஒத்த வயதானவர் இக்காலப் பகுதியில் பல வழிகளில் உதவியாக இருப்பார்கள். எதிர்பாலாரின் நட்புறவு இப்பருவத்தில் தீவிரமாக செயற்படும்.

மனித இன இயல்பின் தனித்தன்மையை எய்தப் பெற முயல்வது ஆளுமையின் பங்கை வகிக்கிறது. "கால் ரோஜேஸ்" (Carl Rogers) என்பவர்களின் அடிப்படையான இயல்பான போக்கானது தனித்தன்மையை அணுக வழிவகுக்கின்றது. ஆனல் மாசலோ (Maslow) என்பவர் தனித்தன்மையின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டாக, தனித்தன்மையை ஏற்றுக்கொள்ளுதல், தன் விருப்பநிலை சூழல் தொடர்ந்த தன்மை, தன்னுரிமை, புதிய மதிப்பீட்டைத் தோற்றுவிக்கும் தன்மை, சூழ உள்ளவற்றின் மதிப்பீட்டைத் தோற்றுவிக்கும் தன்மை, சூழ உள்ளவற்றின் மதிப்பீடு என்பவற்றின் மூலம் தெளிவுபடுத்துகிறார். 2*

அநேக உளவியலாளர்கள் ஆரம்பகால மனித வாழ்க்கையானது ஒருவரின் ஆளுமையின் உருவாக்கலில் பெரும்பங்கை வகிக்கின்றது என கருதுகிறார்கள். அதாவது முதல் ஐந்து வருடங்களில் அவர்களின் வாழ்க்கை ஆளுமை வளர்ச்சிக்கு இன்றியமையாததொன்றாகும்.

---

1. Rita L Atkinsor, "Introdnction to psychology" Eighth Edition, (New york, Harcont Brace Jovarovich, Inc, 1983) P. 394
2. Panl R. Solomon, "Psychology", (U. S. A. Scott, foresnar and Compory, 1983) P. 416.

ஒருவரின் ஆளுமை சிதைவுகளுக்கு தனியானதாகவும், கூட்டாக வும் பல காரணிகள் செயல்படுகின்றன. எனவே வேதனையின் விளிம் பில் நின்று மனிதன் சாதனையை நிலைநாட்ட ஆளுமைச் சீரிணக்கம் செய்துகொள்வது அவசியமாகின்றது. ஆளுமைச் சீரிணக்கம் பின்வரும் மூன்று படிநிலைகளில் நிறைவேற்றப்படலாம் அவையாவன:-

1) தனிமனித உள்ளத்தில் எழும் போராட்டங்களை இனம் காணல்
2) அப்போராட்டங்களுக்கான காரணிகளை உய்த்தறிதல்.
3) அவற்றை வெற்றி கொள்ளும் மாற்றுத்திட்டத்தை வகுத்தல்.

இம்மாற்றுத்திட்டம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும். அவையாவன.

1) ஒருவர் தன்னிலுள்ள பலங்களையும் பலவீனங்களையும் ஆராய்தல்.
2) தன்னிலும் ஏனையோரிலும் காணப்படும் திறமைகளுக்கும் நற்பண் பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்.
3) வாழ்வில் பிரச்சனைகள், தோல்விகள், ஏமாற்றங்கள் ஏற்பட்டாலும் உடனே நம்பத்தகுந்த ஒருவரிடத்தில் ஒளிவுமறைவின்றி வெளிப் படுத்தல்.
4) ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஆர்வத்தோடு ஈடுபடல்.
5) தனது ஆற்றல்களை நினைவுகூர்ந்து தன்னைத்தானே பாராட்டிக்கொள் ளல்.
6) பிறரைப்பற்றி அநாவசியமாக குறைகூடும் சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ளல்.
7) நேர அட்டவணைப்படி வாழ்க்கை நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்.
8) ஒழுங்காக ஓய்வு எடுத்தலும் மீளாய்வு செய்தலும்.
9) சிறந்த வாழ்க்கைத் தத்துவங்களை அன்றாடம் காலையிலும் மாலை யிலும் நினைவு கூருதல்.

நேர்மையுடனும் நீதியுடனும் நீ நடந்தால் கூட
உன்னை வெளிவேடக் காரனென்று கூறுவார்கள்.
நேர்மையைக் கடைப்பிடி, நீதி தவறாதே!

10

# ஆய்ந்து அறியும் வளர்ச்சி (Cognitive Process)

**சிந்தித்தல் (Thinking)**

சிந்தித்தல் என்னும் சொல்லை வரையறையின்றிப் பல மனச் செயல்களுக்கு வழங்குகின்றோம். கருத்துப்படிவம் உருவாக்குதல், பிரச்சினைகளைத் தீர்த்தல், ஒழுங்கு முறைக்குரிய ஆராய்தல், இப்போ செய்ய வேண்டிய திட்டம் செய்தல் ஆகியவையும் சிந்தித்தலில் உள்ளடங்குகின்றது.

கருத்துப்படிவ உருவாக்குதல் வாதப் பொருத்தமுடைய கருத்துப் படிவம், இயல்பாக உண்டான கருத்துப்படிவம் என இரு வகைப்படும். வாதப் பொருத்தமுடைய கருத்துப்படிவமானது ஒரு செயல் தெளிந்த தனிச்சிறப்பு வாய்ந்த உருவாக்குதலாகும். இயல்பாக உண்டான கருத்துப்படிவமானது பல வகையான தனிச்சிறப்போடு பொது உருவாக்குதலை உண்டாக்கும்.

நியூவெல், சைமன் (Newell and Simon) என்பவர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் மூன்று படிமுறைகள் உண்டு எனக் கூறினார். அதாவது பிரச்சனைகளை இயன்றளவு சிறு பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். பின் அவைகளைச் சட்டக்கோவையுடன் அல்லது மேலாராய்வுக்கு அடிப்படையான தற்காலிக பொதுவான கோட்பாட்டுடன் தனியாக ஒப்பிட வேண்டும். இறுதியாக அவற்றின் கோட்பாட்டைக் கணிக்க வேண்டும்.

ஒழுங்கு முறைக்குரிய ஆராய்தலில் விவாதப் பொருளை நுணுகி ஆராய்ந்து உய்த்துணரும் வாதப்பொருத்தமூலம் முடிவைப் பெற வேண்டும்.

திட்டம் செய்தலில் சிந்திப்பவரின் முரண்பாடு அடங்கியுள்ளது. உளவியலாளர்கள் தமது ஆய்வின்மூலம் முரண்பாடுகள், தனிப்பட்டவரின் தகுதியிலும், அவர்களின் திறனாய்வு முடிவிலும் சார்ந்தது என்றார்கள். கற்றல் அனுபவங்களின்மூலம் செயற்படும் கற்பனை, உருமாதிரி, உருவாக்குதல் என்பவற்றின் அமைப்பின் செயலாக்கமானது சிந்தித்தலுடன் தொடர்புடையதாகும்.

மொழி ( Language )

மொழி குறியீடுகளால் இயன்றது அது ஒரு சிறந்த சிந்தனை வழியாகும். நம் மொழிகளில் இக்குறியீடுகள் சொற்களாகும். இச்சொற்களுக்கும் பொருள் உண்டு. ஆகையால் இவை தூண்டலை எழுப்பும் அடையாளங்களாகும். இச்சொற்களைச் சொல்லலாம், எழுதலாம், செவிடர் படிக்கும் குறியீடுகளில் அமைக்கலாம் சில மொழிகளில் சைகைகளே குறியீடுகளாகும்,

மொழியானது சூழ்நிலை முறைமை, சூழல், புறப்பொருள் கருத்து என்பவற்றின் குறியீட்டான செயற்பாடாகும். மொழியின் வளர்ச்சியானது இயல்பான முன்சார்பிலும், சூழ்நிலையில் சொல்சார்ந்த ஊக்கத்திலும் தங்கியுள்ளது- மொழி வளர்ச்சியில் மொழியானது வயதானவர்களின் உருவப்படிவத்தில் முதல் நிலையின் போலியிலும் இயல் பார்ந்தத்திலும், சிந்தனையின் தன்மையிலும் தங்கியுள்ளது. சொல்குறியீடுகள் சிந்தனையை ஒழுங்காயமைத்துப் பயன்படுத்த உயர்ந்த கருவிகளாகும். நமது சொல்லால் சிந்தனைக்கு அதிக பயனில்லை, அச்சொல்லின் பொருளையே நாம் சிந்திக்கும்போது பயன்படுத்துகிறோம்.

கற்றறிதல் ( Learning )

கற்றல் என்பது மனிதனின் நடத்தைகளில் ஒன்றாகும். முதிர்ச்சியடைதல், குறிக்கோள், சமூகநடத்தை ஆளுமை போன்ற அம்சங்களும், கற்றலினுள் அடங்குகிறது. ஒரு மனிதனின் நடத்தையிலே ஏற்படும் நிரந்தர மாற்றத்தையே கற்றல் என வரையறை செய்யலாம். ஆரம்ப காலக் கோட்பாடுகளுள் ஒன்று தொடர்புக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உதாரணமாக நெருப்பைக் கண்டதும் நாம் அங்கு எரிதல் என்னும் செயல் நடைபெறுவதை தொடர்புபடுத்திக் கூறுகின்றோம் இதேபோல இரண்டு சம்பவங்களுக்கிடையில் ஒரு புதிய தொடர்பை உருவாக்குவதே கற்றலின் அடிப்படையான முறையாகும். மேலும் உளவியலாளர்கள் இவ்வகையான தொடர்புகளை வேறுபடுத்திக் காட்டுகிறார்கள், அவையாவன :

I நெறிப்படுத்திய இயைவாக்கம் ( Classical Conditioning )

II தொழில் இயைவாக்கம் ( Operant Conditioning )

நெறிப்படுத்திய இயைவாக்கத்தில், ஒரு உயிரி இரண்டு தூண்டல்கள் ( Stimuli ) ஒருமுகப்பட்டு தொழிற்படுவதை கற்கின்றது. உதாரணமாக ஒரு குழந்தை தாயின் மார்பைக் காண்கிறது. அதே நேரத்தில், பாலின் சுவையை அதனுடன் தொடர்புபடுத்தி உணர்ந்து கொள்கிறது. இங்கு மார்பு என்ற ஒரு தூண்டலும் பால் என்கின்ற பிறிதொரு தூண்

டலும் செயல்படுவதைக் காணலாம் இதனை ரஷ்ய உளவியலாளர் பவ்லோ ( Pavlov ) நெறிப்படுத்தினர்.

ஸ்கின்னரின் ( Skinner ) தொழில் இயைவாக்கத்தில் ஒரு உயிரியானது சில செயல்களின் பயனுக குறிப்பிட்ட விளைவை உண்டாக்குகின்றது. உதாரணமாக ஒரு குழந்தை தாயின் முலைக்காம்பை தனது வாயில் வைக்கும்போது ( Response ) பால் சுரப்பதைக் ( Consequence) அதனுடன் தொடர்பு படுத்தி உணர்ந்து கொள்கிறது.

### கற்கும் ஆற்றலை அதிகரித்தல்

கற்கும் செயல்முறையில் திறம்பட முன்னேற்றத் தேவைப்படும் காரணிகள் பலவாகும் அவற்றில் ஆர்வம் ( Interest ) ஊக்குவித்தல் (Motivation) செயல் தூண்டல் (Incentive) என்பன முக்கியமானவையாகும்.

ஊக்குவித்தலானது ஒருவனது உள்மனதிலிருந்து எழுவதாகும். அதே நேரத்தில் செயல் தூண்டலானது வெளித்தூண்டுதலினுல் பெறப்படுகின்றது.

### கற்றலுக்குத்தேவையான காரணிகள்

I உளநோக்கம்.

கற்கும்போது உள்நோக்கத்துடன் கவனத்துடனும் பயின்ருல் மனதில் பதிவது தெளிவாகவும் திருத்தமானதாகவும் இருக்கும்.

II மீளாய்வு III மேலதிக முயற்சி IV வேலைத்திட்டமிடல்

உள நோக்கலுக்கும் அதனை மீளாய்வு செய்வதற்கும் போதியளவு நேரத்தை ஒதுக்குதல் மிகவும் அவசியமாகும். அத்தோடு கற்றவை மனதில் பதிவதற்கும் நேர இடைவெளி கொடுத்தல் முக்கியமாகும். இவ்வாறன செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் கற்றலில் முன்னேறலாம்.

### நினைவாற்றல்

கடந்த கால நினைவுகளை நினைத்தலும் மறத்தலும் மனித மனதில் நிகழும் அன்றாட அனுபவங்களாகும். மனதினுள் நினைவுகளை நீடித்த தன்மை கொண்டதாகவும் தேவையான போது மீட்டுப்பார்த்துப்பெறக் கூடியதாகவும் இருப்பது மனித வாழ்விற்கு அத்தியாவசியமானது. நினைத்தல் பல வழிகளிலே நிகழ்கிறது. ஒரு நிகழ்ச்சி நடந்த சூழலை நினைத்துப்பார்த்து அந்த நிகழ்ச்சியை உடனே ஞாபகத்திற்கு கொண்டுவருவது ஒரு முறை (உ+ம்) அன்பளிப்புப் பொருள் சூழல்பற்றிய தடயங்களின்றியே சிலவற்றை நினைவுக்குக் கொண்டுவர முடியும் (உ+ம்) மனப்பாடம்

நினைவுக்குக் கொண்டு வருவதிலே இனங்கண்டு கொள்வது (உ+ம்) உம்மை எங்கேயோ பார்த்திருக்கிறேன். மேற்கூறிய அனைத்தும் மனதின் நினைவாற்றலை வெளிப்படுத்துகின்றன.

**நினைத்தல் 3 நிலைகளில் நிகழ்கின்றது**

புலன்களினால் சேகரிக்கப்படும் தகவல்களை மீட்டுப் பார்க்கக் கூடிய வடிவம் கொடுத்தல், இதை மீட்டுக் கொணர்தல் (Recall) அல்லது மீட்டுணர்தல் ( Recognition ) எனலாம்.

II அந்த தகவல்களை சேமித்து வைத்தல் ( Retention )

III நினைத்தல் (Remembering ) எண்ணங்கள் நிகழ்வுகள் அனுபவங்களை உள்ளத்தில் இருத்தி இவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தல்.

ஒன்றை ஞாபகப்படுத்த முடியவில்லை என்றால் மேற்குறிப்பிட்ட 3 நிலைகளில் ஏதாவது ஒன்றில் அல்லது மூன்றிலும் ஏதாவது கோளாறு ஏற்பட்டுள்ளது என்பதுதான் அர்த்தம்.

மறத்தலிலே சேமித்து வைக்கும் தொழிற்பாடு ஒன்று நிகழ்கின்றது. அண்மைக்கால நிகழ்வுகளைச் சேமித்து வைப்பதிலே ஒரு செயற்பாடு உட்பட்டிருக்கிறது. நமது மனத்தை அடையும் அனுபவங்கள், தகவல்கள், என்பன குறைந்தகால நினைவுச் செயற்பாட்டிற்கு உட்படுகின்றன. அவற்றில் எதை நாம் தெரிவு செய்து கவனம் செலுத்துகிறோமோ, அவை நீண்டகால நினைவுச் செயற்பாட்டினுள் சேர்க்கின்றது. ஏனையவை மறக்கப்பட்டு விடுகின்றன. எந்த அனுபவம் தகவல் என்பவற்றின் மீது மீண்டும் மீண்டும் கவனம் செலுத்துகிறோமோ அவை அழியாத நினைவுகளாகி நிரந்தரமாகின்றன. இப்படியானவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருவது இலகுவாகின்றது.

நினைவாற்றலை வளர்க்குப் முறைகளில் சிறந்த முறையானது ஆறு படிமுறைகளில் உள்ளது இதனை PQ 4 R முறை என அழைப்பர். முதற்பார்த்தல்– Preview கேள்விகளைக் கேட்டல்-Question வாசித்தல்– Read மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரல் - Reflect வரிசைப்படுத்திக் கூறல் – Recite மறுசிராய்வு செய்தல் – Review

ஞாபக சக்தியானது பல காரணிகளில் தங்கியுள்ளது. விசேஷமாக மூளையின் செயற்பாட்டில் தங்கியள்ளது.

முதலாவது நிலையிலே மாணவன் தான் படிக்கவிருக்கும் அதிகாரத்தை ஒருமுறை பார்க்க வேண்டும். அவ்வேளை முக்கிய தலையங்கங்களையும் அதிகாரங்களையும் அறிந்து கொள்கிறான். இரண்டாவது நிலையும்

மூன்ருவது நிலையும் ஒரேரீதியில் உபயோகிக்கலாம். கேள்வி நிலையி லேயே தகுந்த விடைகளை பெறுவதற்கு கவனமாக வாசிக்கின்ருன். மூன் ருவது நிலையிலே மாணவன் பாடங்களிலே பிரதிபலிக்க அழைக்கப்படு கிருன். தனது அறிவை தனக்குதெரிந்தவைகளோடு ஒப்பிட்டு ஒரு மைப்பாட்டை அறிந்து கொள்கிருன். நாலாம் நிலையிலே படித்தவைகளை வேறு உதவியின்றி சொல்லிப்பார்க்க அழைக்கப்படுகின்ருன். இறுதியாக சொல்லிப்பார்த்தவைகளை ஒன்ருகச் சேர்த்து திருப்பிப் பார்த்து தெளி வடைகிருன். இதன் மூலம் ஒருவர் தனது அறிவிலே பிடித்த விடயங் களிலே ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது.

உணர்ச்சியற்றவன் மனிதன் அல்ல. ஆனுல் அவ்வுணர்ச்சிகளை தன்னேடு ஒருங்கமைத்து வாழும்போது அவன் முழு மனிதன் ஆகிருன்.

● ●

தன் சிந்தனைகளின் விளைபொருளே ஒருவன். அவனது நினைவுகள் எப்படியோ அவன் ஆவதும் அப்படியே.

# 11

# உள உணர்ச்சியும், உளக்கிளர்ச்சியும் ஊக்குவித்தலும்

# (Feeling, Emotion & Motivation)

உணர்வு என்பது அகப்புயக்காரணிகளால் ஒருவனுடைய உள்ளத்தில் தோன்றுவதாகும். நனவு நிலையில் மனித செயற்பாடுகளைப் பறிக்கும்போது உளநிலையே உணர்வு ( Feeling ). உணர்வு என்பது வேகம் பெறும்போது அது உள்ளக்கிளர்ச்சி ( Emotion ) ஆகின்றது. உளவியலாளர்கள் உள்ளக்கிளர்ச்சியை மூன்று பகுதிகளாக பிரித்துள்ளார்கள். அதாவது உணர்ச்சிகளின் சிறப்பான பண்பு அல்லது அகஉணர்வு நிலைக்குரிய அனுபவங்கள் உடற்கூறின் செயற்பாட்டின் எடுத்துக்காட்டமைப்பு, வெளிப்படையாகச் செய்யப்பட்ட அனுபவங்களின் எடுத்துக்காட்டமைப்பு, அகவுணர்வு நிலைக்குரிய அனுபவங்களின் இன்பம், துன்பம், ஊக்கம், கிளர்ச்சி, அமைதி போன்ற அடிநிலையுணர்வு உண்டாகும். உடற்கூறின் செயற்பாட்டின் எடுத்துக்காட்டமைப்பு, உடல் மாற்றத்தில் உள்ளக்கிளர்ச்சி தங்கியுள்ளதை உள்ளடக்கியுள்ளது. வெளிப்படையாகச் செய்யப்பட்ட அனுபவங்களின் எடுத்துக்காட்டமைப்பானது உடம்பின் தோற்ற அமைவிலும் தனித்தன்மையான உள்ளக்கிளர்ச்சிகள் முகபாவத்தின், தனிச்சிறப்பிலும் உள்ளடங்கியுள்ளது.

உள்ளுணர்வுகளின் வெளிப்பாடுதான் உரையாடல், உள்ளக்கிளர்ச்சியாலேயே ஒரு மனிதனது வாழ்க்கைச் சக்திகள் இயங்குகின்றன. உள்ளக்கிளர்ச்சி உணர்ச்சிமிக்கவை. உள்ளக் கிளர்ச்சியின் செயற்பாடுகள் மூளையின் தூண்டுதல்களாலேயே நடைபெறுகின்றன. உளவியல் நோக்கில் உணர்வு என்பது உடலினுள் நிகழும் நிகழ்வுகளின், புலனுணர்வுக் காட்சியே ஆகும். ஆர். எஸ். வூட்வேர்த் (R. S. Wood Woceth) என்பவர் உணர்வும் உள்ளக்கிளர்ச்சியும், தனிஒருவரின் உளநிலை என்கிறார். மனிதனின் ஆளுமையை முக்கியமாக பொறுப்புணர்ச்சி, சுதந்திரவுணர்ச்சி பாதுகாப்புணர்ச்சி, அன்புணர்ச்சி, இன்பவுணர்ச்சி என்பவை கட்டி வளர்கின்றன என்பது உளவியலாளரின் கருத்தாகும். இவை மனிதனை முழு மனித வளர்ச்சிக்கு இட்டுச்செல்கின்றன.

**ஊக்குவித்தல்**

வெளியிலிருந்து வரும் தூண்டல்களுக்கு மனதினுள்ளிருந்து இடைவினையாற்றும் உள்நிலையே ஊக்குநிலை எனப்படும். உள் சார்ந்த, வெளி

சார்ந்த தோற்றுவாய்கள் ஊக்குநிலையை உருவாக்கும். உணர்வு, நீர் மற்றும் உடல் தேவைகளே உடல் சார்ந்த தோற்றுவாயாகும். புறத் தேயுள்ள சூழ்நிலையால் விருப்பத்தை ஏற்று அறிந்துகொள்ளுதல் வெளி சார்ந்த தோற்றுவாயாகும். பொதுவாக சமூகத்தின் தன்மையால் ஊக்கு நிலை ஏற்படும். ஊக்குநிலையானது இயல்புணர்சசி (Instinct) கொள்கை, உந்து (Drive) கொள்கை, செயல்படுத்தும் (Arousal) கொள்கை, செயல் நோக்க (Incentive) கொள்கையாக நான்கு அணுகுமுறைகளைக் கொண் டுள்ளது.

— இயல்புணர்ச்சிக் கொள்கையானது இயல்பான முன்சார்பின் துலங் கலானது. தனிப்பட்ட வழியில் உறுதியான தூண்டலால் ஏற்ற வையாகக் கொள்ளப்பட்டது.

— உந்து கொள்கையானது உணவு, நீர், பிராண வாயு, ஓய்வு, தூக்கம், குளிர்காலத்தில் வெப்பம், வெயில் நேரத்தில் தன்மை, நோவு நீக்கம் இன்னும் பல உள்ளான ஈர்ப்புக்களையும் உள் ளடக்கியுள்ளது.

— செயல்படுத்தல் கொள்கையானது செயல்படுத்தல் குறைவாயின் உயிர்ப் பொருளின் ஈர்ப்பு மிகுதியாகவும், செயல்படுத்தல் கூட வாயின் உயிர்ப்பொருளின் ஈர்ப்பு குறைந்தும் இருப்பதாகும்.

— செயல் நோக்கக் கொள்கையானது பிரத்தியேக துலங்கலின் வெளிப்புற நிபந்தனையாக வற்புறுத்துகிறது. வெளியான தூண் டல்கள் பசி, உண்ணல் என்பவற்றின் அனுசரணையின் நடத்தையில் நிலைப்பாடுடையது. பசியானது எல்லா உயிர்ப்பொருளுக்கும் ஊக்கு நிலையாகும், உணவு உண்ணும் செயலானது உடலியலிலும், சூழ் நிலையிலும், சமூக மாறிகளிலும் செல்வாக்குடையது.

மனிதன் பெறும் ஊக்குநிலையாகவும் ஒன்று போலிருப்பதில்லை மனித எழுச்சிகளையும் அவற்றின் செயலையும்பற்றி இலக்கியம், நாடகம், திரைப்படம், ஆகிய கலைகளில் திறம்பட எடுத்துக் கூறுகின்றான். ஆனால் இவற்றில் உள்ளார்ந்த முறைகளையே கையாளுகின்றனர். வெளிசார்ந்த தாக ஆராய்வதற்கு உளவியலின் துணையே அவசியம். ஒரு மனிதனினது வாழ்க்கைச் சக்திகள் இயங்குவது உள்ளக் கிளர்ச்சியாலே. உள்ளக் கிளர்சிகளால் தனியாளுக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கும் நற்பயன் உண்டு. ஒரு உள்ளக்கிளர்ச்சி பல செயல்கள் மூலம் முற்றுப்பெறலாம்

# 12

# சமூக நடத்தையும், சொல் சாரா தொடர்பும்.

சமூக உளவியலில் நாம் எவ்வாறு சமூகச் சூழ்நிலையில் சிந்திக்கின்றோம், உணர்கின்றோம், செலவாக்குகின்றோம், என்பதுடன் எவ்வாறு இவைகள் சமூகச் சூழலில் செயற்படுகிறதெனப் பயில்வோம். சமூக உளவியலானது ஒரு நபரினதும் சூழலினதும் செயற்பாட்டின் நடத்தையின் புலக்காட்சியிலும், சமூக உளவியலை ஆதாரமாகக்கொண்ட புலன்காட்சியிலும் தங்கியுள்ளது.

சொல் சாராத தொடர்பானது உடல் செயற்பாட்டிலும் குரலிலும் தங்கியுள்ளது. இரு நபர்கள் இரு வேறுபட்ட மொழியைப் பயன்படுத்தும்பொழுது இந் நபர்கள் சந்திக்கநேரிடின் ஒருவர் ஒருவரை விளங்கிக்கொள்வது சுலபமாக இராது இருந்தும் இரு நபர்களும் தங்களால் இயன்றளவு விளங்கிக்கொள்ளும் முறைகளாக 'ஆ' 'ஓ' என்ற குரலாலும் வேறு செய்கைகளிலும் செயற்படத் தள்ளப்படுவார்கள்.

உடம்பின் நிலையான இருத்தல், கைகளைச் சேர்த்தல், கால்களை குறுக்காக வைத்திருத்தல் நோக்குதல், நோக்காமல் இருத்தல் என்பவை ஒரு நபர் தொடர்புகொள்பவரின் செல்வாக்கைப் பிரதிபலிக்கிறது புறத் தூண்டுதல்களுக்குரிய உடம்பின் நிலைகள் சில. அவை பின்வருமாறு:- திடீரென தசையில் விறைப்பு உண்டாகும், கைகளைத் தட்டுதல் மூக்கைத் தேய்த்தல், உதடு புருவம் முதலியவற்றைச் சுருக்குதல் ஆகும் குடும்பங்களில் உள்ளவர்கள் தங்களுக்குரியஇடம், பொருள் என்பவற்றை வேறொருவர் பயன்படுத்தின் அந்நிகழ்ச்சியால் மனமுடைவார்கள். சில வேளைகளில் பிள்ளைகள் தங்களுக்குரியதென இடம், பொருள்களைப் பற்றி கொள்வார்கள். இவ்வாறு பொதுத் தலங்களிலும் நடைபெறுவதுண்டு.

ஈ. ரி, கோல் (E. T. Hall) என்பவர் 3–20 அங்குல இடைவெளியில் இருவர் நிற்பின் நெருங்கிய உறவு நிலையைத் தெரிவிக்கிறது. 2–5 அடி இடைவெளியினுள் இருவர் நிற்பின் பொதுமுறையான தூரமாகும். 6 அடிக்கு கூடவாயின் பொதுமக்களைக் காணும் தூரமாகும் எனக் கூறினார். *1 எமது குடாநாட்டில் இருவர் நெருங்கி நிற்பின் பால்வேறுபாடு சார்ந்த நெருங்கிய உறவுநிலையென்ற பொதுக் கருத்து நிலவுகின்றது.

---

1 APril o' connell/Vincen o' connell, choice and change, 1980 p.

தொடுதல் என்பது உணர்ச்சிவயப்பட்ட ஆதாரமாகவுள்ள நிலையாகும். தொடுகை செயலானது உணர்ச்சிவயப்பட்ட உறுதி, அகநிலை ஊட்டம் என்பவற்றிற்கு வாய்க்காலாக அமைகிறது. உணர்ச்சிவயப்பட்ட உளவியல்பு சார்ந்த உறுதி நிலையைத் தொடுகை மூலம் நாம் தெரிவிக்கின்றோம். நபரின் குரலானது அவரின் உணர்ச்சிவயப்பட்ட நிலைகளைச் சுட்டிக்காட்ட உறுதுணையாகச் செயல்படுகின்றது. சமுதாயப் பண்பாடுகள் முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

அமைதியாக இருத்தல் ஒருவகையில் அறிவிருக்கும் செயலாகும். அதாவது ஆழ்ந்த சிந்தனையாகவும், தன் உள்ளத்தைத்தானே நுணுக்குக் காணும் செயலாகவும் இருக்கும். கஷ்டமான சூழலில் ஆய்வுரை நிகழ்த்தின் நீண்டதூரம் உலாவி அவ்வேளையில் பகிரின் இலகுவாகப் பிரச்சனையை அணுகலாம்.

மனித நடத்தைக்கும் சமூக நடத்தைக்கும் இடையேயுள்ள தொடர்பு மொழி வளர்ச்சியில் சிறப்பாகக் காணப்படுகின்றது. தனிச்சிந்தனை முறைகளிலும்கூட சமூகப் பண்பு அமைந்துள்ளது. ஒருவரின் சமூக நடத்தையின் வளர்ச்சி அவன் தனியாள் திறனின் விருத்தியோடுகூட சேர்ந்து செயற்படுகிறது. எல்லா வயது நிலைகளிலும், சமூக நடத்தையானது அவனைச் சுற்றியுள்ள கலாச்சாரத்தாலும் பழக்கவழக்கங்களாலும் பாதிக்கப்படும்.

**படித்தவன் எல்லாம் பண்பாளன் அல்ல**
**பண்பாளன் எல்லாம் படித்தவன் அல்ல!**

# புள்ளிவிபரவியல் உளவியல், எனது ஆய்வுத் தொகுப்பும்

**புள்ளிவிபரவியல் உளவியல்** (Statistics in Psychology)
**மைக்கல் டி. பிடமென்** (Michael. D. Biderman)

மாறும் பொருட்களை ஆராயும் விஞ்ஞான நூல்களில் எல்லாக் கூறுகளையும் அடக்கியாள முடியாது. அதனால் விஞ்ஞானிகள் தனியாராய்ச்சிக்குப் பதிலாக பொதுப் போக்குகளையும், பொது நிதானங்களையும் ஆராய முற்படுகிறார்கள். கடினமும் சிக்கலுமான உளவியலை ஆராய்பவர் புள்ளிவிபரவியல் முறையை அதிகமாக கையாள வேண்டியிருக்கிறது. இதற்காக உளவியலாளர் புள்ளியியல் உதவியை நாடுகிறார்கள். புள்ளியியல்களைச் சேகரித்து, ஒழுங்கு படுத்தி, வகுத்து, அளவுமுறையில் அவற்றின் பெறுமதிகளைக் காணும் கணித முறையாகும். புள்ளியியல் கணித முறையால் ஆராய்ச்சி நிலைகளின் குறைபாட்டைப் பெரும்பாலும் நிறைவாக்கிகொள்ளலாம்.

மேலீடான ஆராய்ச்சியானது (Surveys) இரு கணியங்களில், எல்லை வரையறை செய்யப்பட்டுள்ளது. இவ்விரு கணியங்களும் மாதிரிக் குழுவில் பெற்ற சமுதாயத்தின் பொதுக் கருத்தை உருவாக்குவதிலும், மாதிரியாளரின் மனப்பாண்பினதும், நடத்தையினதும் சொல்சார்ந்த அக உணர்வு குறிப்புரையிலும் தங்கியுள்ளது.

இரு மாறுபடும் உருக்களுக்கிடையிலுள்ள (Variable) தொடர்பு படுத்தல் முறை புள்ளிவிபரவியல் மதிப்பீட்டில் தொடர்புபடுத்தல் குணகம் எனப்படும் இதன் தனிச் சிறப்புக்குறி r ஆனது அவற்றின் செயலாட்சியைக் குறிக்கிறது.

$$r = \frac{\text{இரு விலகலின் பெருக்கங்களின் கூட்டுத்தொகை}}{\sqrt{\text{1 வது உருவின் விலகலின் வர்க்கங்களின் கூட்டுத்தொகை} \times \text{2 வது உருவின் விலகலின் வர்க்கங்களின் கூட்டுத்தொகை}}}$$

| தொடர்பு படுத்தல் குணகம் | 0 | 0 - ±0.3 | ±0.3 - ±0.7 | ±0.7 - ±1 | ±1 |
|---|---|---|---|---|---|
| இரு மாறுபடும் உருக்கலின் தொடர்பு | இல்லை | வலிமையற்றநேர் or எதிர்படியான | மிதமான நேர் or எதிர்படியான | உறுதியான நேர் or எதிர்படியான | முழுநிறைவானநேர் or எதிர்படியான |

எனது ஆய்வில் 1950—1970 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் பிறந்த இளைஞர்களிடமும், இளம் யுவதிகளிடமும் கேட்கப்பட்ட கேள்விக்கொத்துக்கள்.

1. எத்தனை வயது வரை தாய்ப்பால் அருந்தியுள்ளீர்?
2. இளம் பராயம்வரை உம்மை பராமரித்தவர்கள் யார்?
3. இக் காலப்பகுதியில் சுதந்திரமாக செயற்பட்டீரா?
4. யாருடன் கூடுதலாக உறவை வளர்த்தீர்?
5. இக் காலப்பகுதியில் எதிர் பாலாருடன் சுமுகமாகப் பழகுகின்றீரா?
6. இன்றைய காலப்பொழுது உமக்கு எத்தனை ஆண், பெண் நண்பர்கள் உள்ளார்கள்?
7. சுதந்திரமாக உமது உணர்வுகளைப் பயன்படுத்துகின்றீரா?
8. எதிர்பாலாரின் மேல் அன்புசெய்ய மனம் மலரவில்லையா? விரும்புகின்றதா?
9. ஆரோக்கியமான ஆண், பெண் நட்புறவை நீர் ஊக்குவிக்கின்றீரா?
10. ஆண் ஆண்மையுடனும், பெண் பெண்மையுடனும் வாழும் சமத்துவத்தை விரும்புகிறீரா?

சிறந்தவர்கள்

சிந்திக்கிறார்கள்

சிந்தித்தவர்கள்

சீர்தூக்கிப் பார்க்கிறார்கள்

சீர்தூக்கிப் பார்ப்பவர்கள்

சரி என்பார்கள்

1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த 1000 ஆண்களின் பருவநிலை அடையமுன் முதிர்ச்சிக்கும், பருவநிலை அடைந்த பின் முதிர்ச்சிக்கும் உள்ள புள்ளிவிபரவியல் தொடர்பை அட்டவணை குறிக்கிறது.

| ஆண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | ஆண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | இருவிலகலின் பெருக்குத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| 44 | + 4.7 | 22.09 | 34 | + 7.5 | 56.25 | + 35.25 |
| 39 | + 0.3 | 0.09 | 25 | — 1.5 | 2.25 | + 0.45 |
| 42 | + 2.7 | 7.29 | 27 | + 0.5 | 0.25 | + 1.35 |
| 48 | + 8.7 | 75.69 | 37 | +10.5 | 110.25 | + 91.35 |
| 44 | + 4.7 | 22.09 | 32 | + 5.5 | 30.25 | + 25.85 |
| 31 | — 8.3 | 68.89 | 15 | —11.5 | 132.25 | + 95.45 |
| 29 | —10.3 | 106.09 | 26 | — 0.5 | 0.25 | + 5.15 |
| 47 | + 7.7 | 59.29 | 20 | — 6.5 | 42.25 | — 50.05 |
| 34 | — 5.3 | 28.09 | 24 | — 2.5 | 6.25 | + 13.25 |
| 35 | — 4.3 | 18.49 | 25 | — 1.5 | 2.25 | + 6.45 |
| | | 408.10 | | | 382.50 | +224.50 |
| நிகர அளவு | 39.3 | | நிகர அளவு | 26.5 | | |

$$r = \frac{+224.50}{\sqrt{408.10 \times 382.50}} = +0.56$$

பருவநிலை அடையமுன் முதிர்ச்சியின்மைக்கும், பருவநிலை அடைந்தபின் முதிர்ச்சிக்கும் உள்ள புள்ளி விபரவியல் தொடர்பை அட்டவணை குறிக்கிறது.

| ஆண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் விளக்கம் | ஆண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | இருவிலகலின் பெருக்குத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| 56 | + 4.7 | 22.09 | 11 | + 3.2 | 10.24 | + 15.04 |
| 61 | + 0.3 | 0.09 | 10 | — 4.2 | 17.64 | — 1.26 |
| 58 | — 2.7 | 7.29 | 5 | — 9.2 | 84.64 | + 24.84 |
| 52 | — 8.7 | 75.69 | 11 | — 3.2 | 10.24 | + 27.84 |
| 56 | — 4.7 | 22.09 | 16 | + 1.8 | 3.24 | — 8.46 |
| 69 | + 8.3 | 68.89 | 18 | + 3.8 | 14.44 | + 31.54 |
| 71 | +10.3 | 106.09 | 16 | + 1.8 | 3.24 | + 18.54 |
| 53 | — 7.7 | 59.29 | 9 | + 5.2 | 27.04 | — 40.04 |
| 66 | + 5.3 | 28.09 | 20 | — 5.8 | 33.64 | — 30.74 |
| 65 | + 4.3 | 18.49 | 26 | —11.8 | 139.24 | — 50.74 |
| | | 408.10 | | | 243.60 | — 13.44 |
| நிகர அளவு: | 60.7 | | நிகர அளவு: | 14.2 | | |

$$r = \frac{-13.44}{\sqrt{408.10 \times 243.60}} = -0.04$$

1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த 1500 பெண்களின் பருவநிலை அடையமுன் முதிர்ச்சிக்கும், பருவநிலை அடைந்த பின் முதிர்ச்சிக்கும் உள்ள புள்ளிவிபரவியல் தொடர்பை அட்டவணை குறிக்கிறது.

| பெண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | பெண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | இருவிலகலின் பெருக்குத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| 92 | +29.6 | 876.16 | 53 | +14.9 | 222.01 | +441.04 |
| 72 | + 9.6 | 92.16 | 36 | — 2.1 | 4.41 | — 20.16 |
| 51 | —11.4 | 129.96 | 30 | — 8.1 | 65.61 | + 92.34 |
| 63 | + 0.6 | 3.60 | 35 | — 3.1 | 9.61 | — 1.86 |
| 56 | — 6.4 | 40.96 | 42 | + 3.9 | 15.21 | — 24.96 |
| 50 | —12.4 | 153.76 | 34 | — 4.1 | 16.81 | + 50.84 |
| 46 | —16.4 | 268.96 | 32 | — 6.1 | 37.21 | +100.04 |
| 66 | + 3.6 | 12.96 | 38 | — 0.1 | 0.01 | — 0.36 |
| 51 | —11.4 | 129.96 | 32 | — 6.1 | 37.21 | + 69.54 |
| 77 | +14.6 | 213.16 | 49 | +10.9 | 118.81 | +159.14 |
| | | 1921.64 | | | 526.90 | +885.60 |
| நிகர அளவு: | 62.4 | | நிகர அளவு: | 38.1 | | |

$$r = \frac{+885.60}{\sqrt{1921.64 \times 526.90}} = +0.88$$

பருவநிலை அடையமுன் முதிர்ச்சியின்மைக்கும், பருவநிலை அடைந்த பின் முதிர்ச்சிக்கும் உள்ள புள்ளி விபரவியல் தொடர்பை அட்டவணை குறிக்கிறது.

| பெண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் விளக்கம் | பெண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | இருவிலகலின் பெருக்குத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| 58 | +30.6 | 936.36 | 8 | — 3 | 9 | + 91.8 |
| 88 | + 0.6 | 0.36 | 8 | — 3 | 9 | +18 |
| 99 | +10.4 | 108.16 | 11 | 0 | 0 | 0 |
| 87 | — 1.6 | 2.56 | 7 | — 4 | 16 | + 6.4 |
| 94 | + 5.4 | 28.16 | 16 | + 5 | 25 | +27 |
| 100 | +11.4 | 129.96 | 11 | 0 | 0 | 0 |
| 104 | +15.4 | 237.16 | 11 | 0 | 0 | 0 |
| 84 | — 4.6 | 21.16 | 19 | + 8 | 64 | —36.8 |
| 99 | +10.4 | 108.16 | 20 | + 9 | 81 | +93.6 |
| 73 | —15.6 | 243.36 | 8 | — 3 | 9 | +46.8 |
| | | 1815.4 | | | 213 | +246.8 |
| நிகர அளவு: | 88.6 | | நிகர அளவு: | 11 | | |

$$r = \frac{+246.8}{\sqrt{1815.40 \times 213}} = +0.39$$

1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த 1000 ஆண்களில் எதிர்பாலாரின்மேல் அன்புமலர எகினவர்களுக்கும் முதிர்ச்சி அடைந்தவர்களுக்கும் உள்ள புள்ளிவிபரவியல் தொடர்பை அட்டவணை குறிக்கிறது.

| ஆண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | ஆண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | இருவிலகலின்பெருக்குத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| 85 | +11.5 | 132.25 | 40 | + 7.1 | 50.41 | + 81.65 |
| 68 | — 5.5 | 30.25 | 33 | + 0.1 | 0.01 | — 0.55 |
| 66 | — 7.5 | 56.25 | 25 | — 7.9 | 62.41 | + 59.25 |
| 87 | +13.5 | 182.25 | 43 | +10.1 | 102.01 | +136.35 |
| 81 | + 7.5 | 56.25 | 42 | + 9.1 | 82.81 | + 68.25 |
| 84 | +10.5 | 110.25 | 33 | + 0.1 | 0.01 | + 1.05 |
| 85 | +11.5 | 132.25 | 29 | — 3.9 | 15.21 | — 44.85 |
| 59 | — 14.5 | 210.25 | 27 | — 5.9 | 34.81 | + 85.55 |
| 49 | —24.5 | 600.25 | 21 | —11.9 | 141.61 | +291.55 |
| 71 | — 2.5 | 6.25 | 36 | + 3.1 | 9.61 | — 7.75 |
| | | 1516.25 | | | 499.30 | +584.95 |
| நிகர அளவு | 73.5 | | நிகர அளவு | 32.9 | | |

$$r = \frac{+584.95}{\sqrt{1516.50 \times 499.30}} = +0.67$$

1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த 1500 பெண்களின் எதிர்பார்லாரின் மேல் அன்பு மலர ஏகினவர்களுக்கும், முதிர்ச்சியடைந்தவர்களுக்கும் புள்ளிவிபரவியல் தொடர்பை அட்டவணை குறிக்கிறது.

| பெண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | பெண்களின் எண்ணிக்கை | விலகல் | விலகலின் வர்க்கம் | இருவிலகலின் பெருக்குத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| 99 | +17.8 | 316.84 | 48 | +10.3 | 109.09 | +183.34 |
| 113 | +31.8 | 985.96 | 40 | + 2.3 | 5.29 | + 73.14 |
| 62 | −19.2 | 368.64 | 26 | −11.7 | 136.89 | +224 64 |
| 71 | −10.2 | 104.04 | 34 | − 3.7 | 13 69 | + 37.74 |
| 92 | +10.8 | 116.64 | 50 | +12.3 | 151.29 | +132.84 |
| 70 | −11.2 | 125.44 | 31 | − 6.7 | 44.89 | + 75.04 |
| 76 | − 5.2 | 27.04 | 25 | +12.7 | 161.29 | + 66.04 |
| 80 | − 1.2 | 1.44 | 32 | − 5.7 | 32.46 | + 6.84 |
| 84 | + 2.8 | 7.84 | 40 | + 2.3 | 5 29 | + 6.44 |
| 65 | −16.2 | 262.44 | 31 | − 6.7 | 44.89 | + 88.54 |
| | | 2316.32 | | | 725.07 | +894.60 |
| நிகர அளவு: | 81.2 | | நிகர அளவு: | 37.4 | | |

$$r = \frac{+894.60}{\sqrt{2316.32 \times 725.07}} = +0.69$$

# எனது ஆய்வுத் தொகுப்பு

மனித நடத்தையைப்பற்றி ஒரு புள்ளிவிபர ஆய்வை, கடந்த 2 வருடங்களில் 2000 குடும்பங்களில் மேற்கொண்டேன். மேலும் 1950 க்கும் 1970 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த 2500 இளைஞர்களையும் யுவதிகளையும் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம், கல்வி நிலையங்கள் மற்றும் பொது நிலையங்களில் சந்தித்து எனது ஆய்வை மேற்கொண்டேன். எனது ஆய்வின் மூலம் 86% ஆண்களும் 73% பெண்களும் ஆரோக்கியமான ஆண்பெண் நட்புறவை ஊக்குவிக்கின்றனர்கள். 83% ஆண்களும், 87% பெண்களும் ஆண் ஆண்மையுடனும், பெண் பெண்மையுடனும் சமத்துவமாக வாழ்வதை விரும்புகின்றனர்கள் என்பது புலனாகிறது. மேலும், எதிர்பாலாரின்மேல் அன்பு மலர ஏகினவர்கள் தங்கள் வாழ்க்கை, அந்தஸ்தை தெரிவுசெய்ய முதிர்ச்சியடைந்தவர்கள் என்பது புள்ளி விபரவியல் தொடர்புபடுத்தல் குணகத்தின்மூலம் உறுதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவைத் தந்துள்ளது.

பேறு காலத்திற்கு முந்திய வளர்ச்சியானது சூழ்நிலையின் விளைவில் தங்கியுள்ளது. மேலும் தாயின் உணர்ச்சிவசப்பட்ட செயல்களும், சிசுவைப் பாதிக்கும். இது தொடர்பாக எனது ஆய்வின்போது சிலரைச் (தாய்மாரை) சந்தித்து அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்தேன். அவர்களின் அனுபவங்களில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். ஒரு தாய் ஏழு மாதக் கர்ப்பிணியாய் வீட்டில் இருக்கும்போது ஒரு நாள் இரவு தனது கணவன் வேறு பெண்களுடன் உடலுறவு கொண்டதாக செய்தி கேட்டதாகவும் இச் செய்தி கேட்டவுடன் தான் அதிர்ச்சியால் மயங்கி விழுந்ததாகவும் 3 மணித்தியாலங்களின் பின்புதான் சுயநினைவு திரும்பியதாகவும் இதன் தாக்கம்தான் இப்போது 15 வயதுடைய தனது மகன் பிறக்கும்பொழுது ஊமையாகப் பிறந்தான் எனக்கூறினாள்.

சமுதாயக் கூட்டான கற்றலின் முழுஉளப்பதிவின்படி குழந்தைகள் தங்களின் பெற்றோர்களின் நடத்தையைப் பார்த்துப் பழகுகின்றனர்கள். இதன் மூலம் அவர்கள் தமது பாலியல் தொடர்பினை வளர்த்துக்கொள்கின்றனர்கள். எனது ஆய்வின்போது ஒரு 5 வயதுப் பையன் தனது ஒத்த வயதுடைய ஒரு பெண்பிள்ளையுடன், பெற்றோர்கள் எவ்வாறு பாலுறவில் செயற்பட்டார்கள் என்பதை அவதானித்து செயலில் இறங்க முயற்சித்தான் என்பதை அறிந்தேன். எனவே பெற்றோர்கள் உடலுறவுகொள்ளும் வேளையில் பிள்ளைகளைத் தவிர்ப்பது சாலச் சிறந்ததாகும். ஒவ்வொரு பெற்றோரும், தமது பிள்ளைகள் வளர்ந்து எதிர்காலத்தில் நல்லதொரு

இடத்தை வகிக்கவேண்டுமென்றுதான் விரும்புவார்கள். எனவே ஒவ்வொரு பெற்ரோரும், தங்கள் பிள்ளைகளின் ஆற்றலை நன்கு புரிந்து கொண்டு ஆற்றல்களுக்கு ஏற்றவகையில் பிள்ளைகளை ஈடுபடச்செய்து பிள்ளைகளுக்கு ஊக்கமளிப்பின், பிள்ளைகளின் வாழ்வு சிறப்புற இடமுண்டு.

ஆளுமையின் வளர்ச்சிக்கு மரபுநிலையும் சூழ்நிலையும் அடிப்படைக் கூறுகளாகும். புரொய்ட்டின் ஆளுமைக் கோட்பாட்டின்படி பாலுணர்ச்சி சார்பான ஆற்றல் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு ஆரம்பகாலப் பகுதியில் இருப்பவர், பக்குவப்படாத தன்மையை தன்னகத்தே கொண்டதாக இருப்பார். குழந்தையின் வாய்நிலைப் பருவத்தில் முதிர்ச்சியடைய, உதவியாக தாய்ப்பால் அருந்த நல்வாழ்விற்கு துணைபுரிகின்ற மார்பகத்தை கடவுளின் மதிப்புமிக்க கொடையாக குழந்தைகள் பெற்றுள்ளார்கள்.

எமது யாழ். குடாநாட்டில், மக்களில் இருபாலாரினதும் சிநேக பூர்வமான தொடர்பு அவசியமானது. ஏனெனில் முறைமையான பால் உளவியல் நடத்தையில் வளர உதவுகின்றது. ஆணும் பெண்ணும் இணைந்து பழகுவதற்கு ஆரோக்கியமற்ற சூழ்நிலை போன்றவை மனித ஒழுக்கம் கெடுவதற்கும் சமூகக் குற்றங்கள் பெருகுவதற்கும் வாய்ப்பாக உள்ளது. எனது ஆய்வின்மூலம் ஒத்தபாற் கவர்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களில் அதிகமானோர் எதிர்பாலாரில் ஒருவித பயமும், ஒத்துப்போகாத் தன்மையையும் தன்னகத்தே கொண்டவர்கள் என அறியக்கூடியதாக உள்ளது.

சமுதாயக் கூட்டான கற்றலின் கோட்பாடு சூழ்நிலை நடத்தையின் அடிப்படைக்கூறு என வலியுறுத்தப்படுகின்றது. அதிகமான பெற்றோரும் 20 வயதிற்குட்பட்ட இளவயதினரும் நேருக்குநேர் பழகுவது குறைவு. ஆனால் சொற்ப இளவயதினர் பெற்றோருடன் மிக அன்னியோனியமாக அன்புடன் பழகுகின்றார்கள். மேலும் இன்றைய சமுதாயத்தில் பெண்களின் கூந்தலும், மார்பகமும், இடையுமே ஆண்களின் கவர்ச்சியாக செயற்படுவதுபோல ஆண்களின் மீசையும் பொருத்தமான உடற்கட்டமைப்புமே பெண்களின் கவர்ச்சியாக செயற்படுவதோடு, இளம் வயதினர் பெற்றோரிலும் பார்க்க பால் சார்ந்த அறிவு கூடியவர்களாக இருப்பதை எனது ஆய்வின் மூலமாக அறியக்கூடியதாக இருந்தது.

அறிவாற்றலுடைய வளர்ச்சியில் உதாரணமாக 5 பாடத்தில் நுண்சித்தி அடைந்தவர்களில் 48 வீதத்தினரின்படி தாங்கள் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் காலப்பகுதியில், தமக்குத் தேவையான அடிப்படைச் சலுகைகளுடனும், அன்புள்ள நண்பர்களோடும், சாதகமான மனநிலையோடும் சந்தோசமாக வாழ்ந்தோம் எனக் கூறினார்கள். ஆதலால் அறிவு வளர்ச்சிக்கு உடல், உள, ஆன்ம ரீதியான செயற்பாடுகள், அடிப்

படையானவை என்பது புலனுகிறது. எத்தகைய கல்வி, நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளரச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, சுயவலிமையைக்கொண்டு நிற்கமுடியுமோ அத்தகைய கல்விதான் வாழ்க்கைக்கு உறுதுணையாய் நிற்கும்.

ஒவ்வொரு சமுதாய அமைப்பிலும் கூட்டான கட்டமைப்பின், ஒரு பகுதியாக பால்க்கவர்ச்சி கலாச்சாரத்தில் உள்ளது. இருபாலாரும் சிநேகபூர்வமான ஆரோக்கியமான தொடர்பு கொள்வதன்மூலம் பால் கலாச்சாரம் வளர்ச்சியடையும். 76 வீதம் பெண்கள் தாம் போக்குவரத்துச் செய்யும் காலப்பகுதியில் 45க்கும் 65க்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்கள் தகாத முறையில் செயற்படுவதாக கூறினார்கள். இதன் பிரதிபலிப்பாக நான் கூறுவது பால்த்தன்மை நடத்தைபற்றி இளம் வயதினருக்கு அறிவு வழங்குவதால் அடுத்த சமுதாயத்தை அப்படியான தவறிலிருந்து விடுவிக்கலாம். மேலும் நான் பெற்ற தரவிலிருந்து வெளிநாட்டில் வேலை பார்க்கும் கணவன்மாரின் சொற்ப பெண்கள் வேறு ஆண்களுடன் பாலுறவை அனுபவிக்கிறார்கள். இப்படியான பெண்களை தன்னடக்கம் குறைந்தவர்களாகவும் தங்களது கணவருக்கு விசுவாசம் அற்றவர்களாகவும் கருத இடமளிக்கின்றது. எனது கருத்தின்படி பால் இன்பத்தை அதாவது வர்க்கப்பசியை தன்னகத்தே ஒழுங்குபடுத்த முடியாதவர்கள் தங்களது கணவருடன் கூடி வாழ்க்கை நடத்துவது சாலச் சிறந்ததாகும்.

உணர்ச்சிகளை நாம் ஆளவேண்டும்
உணர்ச்சிகள் நம்மை ஆளக்கூடாது!

15

# முடிவுரை

உளவியலானது விஞ்ஞானத் துறையைச் சார்ந்ததாகும். இது விசேஷமாக மனித நடத்தையை விளக்குவதோடு நடத்தையின் பல் வேறுபட்ட தன்மையை விபரித்துக்கூற முயற்சிக்கிறது. சில உளவிய லாளர்கள் இயல்பு தொடர்பான தனிப்பட்ட பிரச்சனைகளுக்குரிய மனித நடத்தையை விளக்கிக் கொள்ள ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில், உளவியல்பு தொடர்பான அறி வாற்றலைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆரம்பகால உளவியலாளர்கள் மனித நடவடிக்கைகள், அதி விசேட சக்தியாலும், மற்றும் நட்சத்திர கோள்களாலும், ஆட் கொள்ளப்படுவதாக கருதினார்கள். கிரேக்க மூதாதையர்கள் உடல்சார்ந்த உறுப்பான்மையே நடத்தையின் காரணம் எனக் கூறினார்கள். 17ம் நூற்றாண்டில் கீழைத் தேசத்தவர்கள் சூழ்நிலைகள் மனித நடத்தையை வரையறை செய்யும் காரணிகளில் ஒன்று எனக் கருதினார்கள். ஆனால் இன்றைய உளவியலாளர்கள் மனித நடத்தையானது உடல்சார்ந்த, சூழ்நிலைசார்ந்த, உளவியல்பு சார்ந்தவைகளில் ஒரு பின்னிப்பிணைந்த விளைவு எனக் கருதுகின்றார்கள்.

நடத்தைக் கோலம் என்பது சூழ்நிலையாலே தனக்குள்ளே ஏற் படும், ஒரு நிலைமைக்கு ஒரு உயிரி அனுசரிக்கும் தொடர்ச்சியாகும். சூழ்நிலை என்பது ஒருவரின் உயிர், உயிரணுக்களைத் தவிர அவரைப் பாதிக்கும் மற்றெல்லாப் பொருள்களாகும். ஒரு பொருளின் முன்பே நிற்பதால் மாத்திரம், சூழ்நிலை ஆகிவிட முடியாது. அது ஒருவரைத் தூண்டினால் தான் சூழ்நிலையாகும். எனவே இளைஞர்களும், இளம்யுவ திகளும் ஒழுக்கவியலுக்கு அமைவாக ஆரோக்கியமான பொருத்தமான உடை அணிவது சாலச்சிறந்ததாகும். உள்ளக்கிளர்ச்சி என்னும் சொல் வெகுளி, அச்சம், மகிழ்ச்சி, இன்பம், துன்பம், வெறுப்பு போன்ற மெய்ப்பாட்டு நிலைகளைக் குறிப்பதாகும். உள்ளக்கிளர்ச்சியாலேயே, ஒரு மனிதனது வாழ்க்கைச் சக்திகள் இயங்குகின்றன. வெளிப்படையாக பார்த்தால் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் உணர்ச்சி வசப்படுகின்ற வர்கள் போலத் தெரியும், நொடிப் பொழுதில் கண்ணீர் வடித்து விடுவார்கள். ஆனல் கூர்ந்து அவதானித்தால் ஆடவருடைய உணர்ச் சிகள் மறைவானவை, ஆழமானவை நெடுங்காலம் நிலைத்து நிற்பவை என உணர முடியும். உள்ளக்கிளர்ச்சி உணர்ச்சி மிக்கவை. உள்ளக் கிளர்ச்சியை எம்மை மேற்கொள்ள நாம் அனுமதிக்கும் போது தான்

அதன் விளைவு எமக்கும், சமுதாயத்துக்கும் பாதகமாக அமைகின்றது. சோர்வு உணர்வுகளுக்கும், மகிழ்ச்சி உணர்வுகளுக்குமிடையே ஒற்றுமையான ஒருகால நிர்ணய அளவு இருப்பதை நாம் உணர்வோம். இந்த உணர்ச்சி வட்டத்தின் கால அளவு மனிதருக்கு மனிதர் வேறுபடக் கூடும். இந்த உணர்ச்சி வட்ட செயற்பாடு பெண்கள் விடயத்தில், அவர்கள் மாதவிடாய் காலத்தை மையமாகக் கொண்டு இயங்குவதுண்டு. இயல்பாக இந்த உணர்ச்சி ஓட்ட நிலை நமது உடல் நிலையைப் பொறுத்தவரை கூடவோ குறையவோ செயற்படக் கூடும். உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய ஆள், இடம், காலம் அறிந்து வெளிப்படுத்தப்படும் போது உண்மையில் அவை வழிப்படுத்தப்படுகின்றன.

சமூக வாழ்க்கையில் எதிர்பால் வேட்கையின் வன்மையை யாவரும் அறிவர். இதன் வலிமை பசியின் வன்மையைப் போன்றதாகும். ஆண்கள் இயல்பாகவே உடலமைப்பின் பயனாக உடல்கிளர்ச்சிக்கு உட்பட்டவர்கள். அவர்கள் ஒரு பெண்ணை நாடும் பொழுது அவளோடு பழகும் பொழுது பாலுறவுச் செயல்களில் ஈடுபட்டு பாலுறவு இன்பத்தைப் பருகவே தூண்டப்படுகின்றார்கள். பெண்களோ அன்பையே இயல்பாக நாடுபவர்கள். ஆண்களுக்கு அன்பு இல்லாமலில்லை. அது பெண்களின் அன்பு போன்று உணர்ச்சி மிகுதியுள்ளதன்று, ஆண்களோடு அவர்கள், பழகும் பொழுது அன்பையும், அமைதியையும், தோழமையையும் நாடுகிறார்கள். அவர்கள். எங்குவது அரவணைப்பிற்கும், அன்பின் அடையாளத்திற்கும் ஆகும் இந்த வேறுபாட்டை இரு பாலாரும் நன்கு அறிய வேண்டும். பெண்கள் தமக்குரிய சிறப்பான குணங்களை வளர்த்து, தமது உள்ளச் சிறப்பைக் கண்டுபிடிக்காவிடில், ஆண்மகனின் வாழ்வில் தனக்குள்ள பங்கை நிறைவுறச் செய்யவியலாது. மனிதத் தன்மையைக் காப்பாற்றும் தாயாக இருப்பவள் பெண் இதுவே அவள்மீது சம்மந்தப்படும் புனிதப்பணி இதைச் செய்து முடிப்பது அவள் பொறுப்பாகும்.

ஆண்மகன், ஒரு பெண்ணில் அக்கறை காட்டுகிறான். அவளை அடிக்கடி நோக்குகிறான், புன்முறுவலை உதிர்க்கிறான். இவற்றிற்கு அந்தப் பெண், தன் இயற்கைப் போக்கின்படி பொருள் கொடுத்து அவன் அன்பை ஏற்க அவாவுகிறாள். அவனது தோழமை விரும்பத்தக்கதே எனத் தீர்மானிக்கிறாள். ஆதலால் இவளும் அவன் அன்பு நாட்டத்திற்கு விடை தந்தது போல், அவன்மீது அக்கறை கொள்கிறாள். அடிக்கடி குறுநகை செய்கிறாள், அவனைக் காணும் போதெல்லாம் அளவு மீறி வெட்கத்துடன் கோணுகிறாள். இந்தச் செயல்களைக் காணும் அவன் தன் இயற்கைப் போக்கின்படி இவற்றிற்குப் பொருள் தருகிறான். பாலுறவு இன்பத்தை அடைய அச்செயல்களுக்குத் தூண்டுகிறாள் என்று எண்ணுகிறான். இவ்வாறு இருவரும் தப்புக்கணக்கு போட்டு நெருங்குகிறார்கள். மேலும், ஓர் ஆண்மகனுக்கு உள்ளத்திலே காதல் வேட்கை, தோன்றி விடுமானால் விரைவில் அது தானாகவே செயலற்று உடம்பில் புணர்ச்சி வேட்கையாக மாறிவிடும். ஆனால் பெண்ணில் அவ்வாறு அல்ல அந்த வேட்கையை எழுந்து விட்டால் புணர்ந்தாலொழிய தீருவது கஷ்டம். ஆனால் வெறும் காதல் வேட்கையால் மட்டும் அவள் உள்ளம்

பீடிக்கப்பட்டு இருக்கும் போது தன் காதலனைக் காண்பது கதைப்பது மற்றும் காரியங்களினால் அவள் மனநிறைவு அடைந்து விடுவாள். மேலும் அவள் தன் காதலனோடு நெருங்கிப் பழகும்போது அவளுடைய புணர்ச்சி வேட்கை சிறிது தூண்டப்பட்டு விடுகின்றன.

இப்படியான அறிவு அற்ற நிலையில்தான் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆதலால் இளைஞரும் இளம்யுவதிகளும், நெருங்கிப் பழகும் போது மின்சார சந்திப்புகளில், 'அபாயம்' என்று எழுதியிருக்கிறார்களல்லவா? அதனை நினைத்துக் கொண்டு பாலியல் தாக்கத்தினால் அபாயம் உண்டு என நடக்க வேண்டும். வயதான வாலிபனுக்கும் பெண்ணுக்கும் இனஉணர்ச்சி, பாலியல்கவர்ச்சி, வர்க்கப்பசி எடுப்பது தவறில்லை. திருமணத்தில் ஈடுபடும் வரையில் வர்க்கப்பசியை கட்டுப்படுத்த வேண்டும், தன்னடக்கமாய் இருக்க வேண்டும். திருமணத்தில் ஈடுபடாதோர் அதனை அடைந்தாலும், அடையமுயன்றாலும் இறைவனின் திட்டத்தை மீறுகிறார்கள். மனிதரிடம் எழும் சில இயல்பூக்கங்களை அடக்கிக் கொள்வதால் அதனோடு தொடர்பான உணர்வுகளை முடக்கி இயல்பாக எழும் நேர் கருத்துப் படியான ( Positive Thinking ) ஆசைகளை அமுக்கி வைப்பதால் அவற்றின் செல்வாக்கினால் உந்தப்படும் போது அவன் பல்வேறு விதமான நடத்தையினூடாக அவற்றை வெளிப்படுத்தவேண்டியவனாகின்றான். அவன் எவ்வளவு அவற்றை மறைக்க முயன்றாலும் அவனது நடத்தையினூடாக அது வெளிப்படவே செய்யும். மிக நுட்பமாக உளவியல் அணுகுமுறை கொண்டு அவதானித்தால் அவற்றை இனங்காண முடியும்.

சகோதர வாஞ்சையுடன் பழகும் ஆண்கள் குறிப்பாய் பெண்களின் நலனில், அக்கறை காட்டுவார்கள் அவர்களின் தவறினைச் சுட்டித் திருத்துவார்கள். அவர்கள் செய்யும் தவறினைப் பெற்றோர் ஆசிரியர் அவர்களிடம் வெளிப்படையாக முறையிடுவார்கள், அவர்களுக்கு வழிகாட்டியாக நிற்பார்கள், ஆனால் அதேநேரத்தில் பெண்களின் ஆபாசத்தை ரசிக்கமாட்டார்கள், உடலை விரும்பமாட்டார்கள், தனிமையில் சந்தித்து அக்கறை காட்டுவது போல பாசாங்கு பண்ண மாட்டார்கள் அநாகரிகமாய், உடற்பாகங்களைத் தொட்டு விளையாடி மகிழ்வை உண்டாக்கமாட்டார்கள், அநாவசியமாய் விலையுயர்ந்த பரிசுப்பொருட்களையும் பணத்தையும் கொடுக்கமாட்டார்கள். பெற்றோர்கள் இல்லாத நேரத்தில் சம்பாஷணையை வளர்க்க வீடு தேடி வந்து பெண்களின் தனிமையைக் கெடுக்கமாட்டார்கள். எப்போதும் புகழ்ந்து கொண்டேயிருக்க மாட்டார்கள். பொதுவாக உடன்பிறந்தாரைப் போல பிறர் சகோதரர்கள் ஆவது அரிதிலும் அரிது.

இருபாலாரும் உடல் கட்டமைப்பில் மட்டுமன்றி உளவியல்பு தொடர்பான பண்பிலும் வித்தியாசப்படுகிறார்கள். எனது கருத்துப்படி

பெண்கள் ஆண்களுடன் சமத்துவமாக முடியாது. ஆனால் ஆண் ஆண்மையுடனும், பெண் பெண்மையுடனும் உள்ள சமத்துவம் இன்றியமையாததொன்றாகும். பெண்கள் தங்கள் உடல்சார்ந்த விதிமுறைகளுக்கு எதிராக ஆண்களுடன் சமத்துவம் அடைய முடியாது. ஒரு பெண்ணின் பாதுகாப்பில் ஒரு ஆண் இல்லாவிட்டால் அந்த ஆணின்கதி அச்சாணியற்ற தேர்போல் ஆகிவிடும். அத்தகைய பெண் தாயாக இருக்கட்டும் மனைவியாக இருக்கட்டும், சகோதரியாக இருக்கட்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட ஆண்களை அன்பு என்ற அரவணைப்புக்குள், பாசம் என்ற கைப்பிடிக்குள் வைத்திருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு பெண்ணும் நன்கு உணர வேண்டும் என்பதே எனது ஆவல்.

ஒரு குடும்பத்தில், கணவனுக்கு ஆண்மையும், மனைவிக்கு பெண்மையும் எந்த அளவுக்கு உயர்வான நிலையில் அமைந்திருக்கின்றவோ அதுதான் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சிக்கும், இன்பத்திற்கும், அடித்தளமாக அமையும். மற்றவசதிகள், வாய்ப்புக்கள் பலவீனமான நிலையில் அமைந்திருப்பினும், அக்குடும்பத்தில் இன்பமும், மகிழ்ச்சியும் தாண்டவமாடும் என்று கூறிவிட முடியும். குடும்ப வாழ்க்கையில் பெண்மையின், இயக்கத்திற்கு, ஆண்மையின் செயற்பாடுதான் ஆதாரமாக இருக்கின்றது. மேலும் உடலுறவு நிகழ்ச்சியில் இயக்கும் சக்தியாக ஆணின் ஆண்மை விளங்குகின்றது, இயங்கு சக்தியாக பெண்மை விளங்குகின்றது இயக்கும் சக்தி பலவீனமாகி விட்டால், இயங்கும் சக்தியானது பரிதாபகரமான நிலைக்கு உள்ளாக நேரிடுகின்றது. இப்படிப்பட்ட அந்தக் குடும்பத்தின் அமைதி சலனமுற ஆரம்பித்து விடும். மனிதனின் இளமைப்பருவத்தில் எழுகின்ற உணர்வுகள் உரிமை பெறுகின்ற வாய்ப்பானது அவன் வாழ்கின்ற சூழலில் தங்கியுள்ளது. திருமணத்தில் இணைப்புப்பாலமாக அமைவது உணர்வு. இவ்வுணர்வு நிலையில் ஒருவரையொருவர் புரிந்துணர்வு கொள்ளா விட்டால் சட்டம் தந்த உரிமையோ, அதனால் வந்த உறவோ செயலற்று விடுகிறது. காலங்களின் மாறுதலுக்கேற்ப மனிதன் தன்னை மாற்றிக் கொள்ளும் பண்புள்ளவன். மங்கைக்கு எற்ற மணாளனாக மனிதன் மாறவேண்டுமே தவிர, மணாளனுக்கேற்ற மங்கையாக பருவ மங்கை முழுவதும் மாறமுடியாது. காலத்தோடு இயற்கையோடு ஒப்புரவாகி ஞானத்தில் வாழ்வது சாலச் சிறந்ததாகும்.

எமது சமுதாயத்தில் பெண் இனத்தைப் பற்றியே சிலருக்குத் தவறான கருத்தோட்டம் உண்டு. பெண் என்பவள் ஒரு அழிவுச் சக்தி என்றும், பெண்களுடன் தொடர்பு கொள்வதே ஒரு பாவ காரியம் என்பது போல கருத்தும் இடம் பெறுகின்றது. சின்ன வயதிலிருந்தே சிலர் மனதில் வெறும் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம் அல்லது இவர்களாகத் தவறாக அந்தமாதிரி

யெல்லாம் கற்பனை செய்து கொண்டிருக்கலாம் பெண்மை இகழ்ச்சிக்குரியதோ கேலிக்குரியதோ அன்று மதிக்கப்படத்தக்கது. இறைவனின் படைப்பின் வெளிப்பாட்டிலே பெண்மையின்றி உலகம் முழுமையடைய முடியாது. பெண்மையே உலகிற்கு முழுமை தருவது பிரதிபலிக்கிறது. அவ்வாறு முழுமை தருவதை நிறைவாகவே கருத வேண்டும். பெண்மை எங்கு மதிக்கப்படுகின்றதோ அங்கே தான் முழுமையான உரிமைபெற்ற சமுதாயம் உருவாக முடியும்.

திருமணம் ஒன்று தான் பாலியல் இன்பத்தை முறையாகப் பெறுவதற்கான சரியான வழி என்ற உணர்வு மனத்தில் இருக்க வேண்டும். திருமணத்தின் மூலம் தங்குதடையற்ற பாலியல் இன்பத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு நிச்சயமாக இருக்கும் போது சுய இன்பம் போன்ற தீய பழக்கங்களுக்கு இடமளிக்க வேண்டிய அவசிய மேயில்லை என்பதை இளைஞர்களும், இளம்யுவதிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்மை இன்பத்தை அனுபவித்து மகிழ்வதற்கு எவ்வளவோ அவகாசமும் வயதும் இருக்கின்றது அவசரப்பட்டு இளவய திலேயே பெண்மை இன்பத்தை அனுபவிக்க விழைவது புலனடக்கமற்ற போக்கும் அறிவீனமாகும்.

என் அருமைச் சகோதரிகளே! பெண்ணாய்ப் பிறந்தவளின் தலை சிறந்த பேறு தாய்மையே! தாய்மையில் தனிப்பெருமை கொள்ள வேண்டும். இவ்வுலகில் உங்களது அரியபணி தாயாயிருப்பது என்பதை உணர்ந்து, உவகை பூக்கவேண்டும். தாயின் பதவி எவ்வளவு சிறந்தது உயர்ந்தது ஒவ்வொரு சகோதரியும் அந்த தாய்மைக்கு உரியவர்கள் இன்றைய சகோதரிகள் நாளையத் தாய்மார்கள். எனவே தன்னை இளைஞர்களின் விளையாட்டுப் பொம்மைகளாக்கி கொள்ளாது, அன்பைச் சித றவிடாது. உங்கள் வாழ்க்கை அந்தஸ்துக்கு எற்ற விதத்தில் செயற்பட ஆசிக்கிறேன்.

என் அருமைச் சகோதரர்களே! பெண்களை இழிவாகக் கருதாது எளனம் செய்யாது. அன்பைச் சிதறவிடாது உங்கள் வாழ்க்கை அந்தஸ் துக்கு வற்ற விததில் செயற்பட ஆசிக்கிறேன். திருமண வாழ்வு எத் துணை சிறப்பான வாழ்வு அதற்கு இளைஞர்களும், இளம்யுவதிகளும் ஆயத்தம் செய்ய வேண்டும். அவர்கள் நல்ல உடல் வலிமையுடன் இருக்கமுயல வேண்டும். இறையன்பும், பிறரன்பு, தியாகமனப் பான்மையுடன் வளர வேண்டும்.

பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பொது நிலையங்களில் ஆரோக்கியமான ஆண்-பெண் நட்புறவை ஊக்குவித்தால் தூய்மையான சந்தோசத்தை உடல் சார்ந்த, உளவியல்பு சார்ந்த, ஆன்ம இயல்பு சார்ந்த முறையில் நாம் பெற முடியும் என்பதை ஒவ்வொருவரும்

நன்கு உணரவேண்டும் என்பதே எனது ஆவல். இளைஞர்கள் இள மையை முன்னிட்டோ அல்லது மகிழ்ச்சி, உண்மை, அழகு, அன்பு இவற் றின்மீது அவர்களுக்குள் ஆழ்ந்த விருப்புகளையிட்டோ, கலங்க வேண்டிய சாத்தியக் கூறு இல்லை என்பதே எனது கருத்தாகும்.

வருங்காலத்தில் யாராவது உளவியலாளர்கள் எமது நாட்டில் தோன்றியோ அல்லது வேறு நாட்டினரோ பல வழிகளில் உளவியல்பு சார்ந்த ஆய்வை மேற்கொண்டு அதற்கொப்ப மேலைநாட்டவரின் கோட் பாடுகளில் சிலபகுதியை நீக்கியோ அல்லது இணைத்தோ அல்லது செப் பம் செய்தோ எம் நாட்டின் சமுதாயத்திற்கேற்ப அக்கோட்பாட்டைப் புதுப்பிக்கும் தருணம் அவ்விதிகள் பொருத்தமாக இருக்கும். எனவே தான் அடிப்படை உளவியல் தத்துவங்களை தவிர மற்றவைகளை ஏற்க முடியாத நிலையில் உள்ளேன்.

அண்மைக் காலங்களில் உலகின் பலபாகங்களிலும் உளவியலின் பயனாலும், ஆராச்சியாலும், சமூகப் பிரச்சனைகள் அவற்றின் காரணம் போக்கு ஆகியவற்றைப் பற்றித் தெளிவு ஏற்பட்டுள்ளது. உன்னையே அறிந்து கொள்' என்பது ஆன்ரேரின் வாக்கு. நமது உடல் எழுச்சி உளஎழுச்சி, சமூகசிந்தனை ஆகியவற்றில் எழும் தேவைகளை உணர்ந்து நாம் நமக்கும் சமுதாயத்திற்கும் ஏற்றவர்களாக ஒழுக வெவ்வேறு வழி முறைகளை உளவியல் காட்டுகிறது. பிறரோடு இசைந்து வாழ வேண்டு மானல் அவர்களது எண்ணம், உணர்ச்சி, செயல் ஆகியவற்றிற்குரிய காரணம் நமக்குத் தெரிய வேண்டும். அதாவது சொல், பார்வை, செயல் ஆகியவற்றிற்குரிய காரணம் நமக்கு தெரிய வேண்டும்.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்களது இயற்கையான உட லியல், உளவியல்பு சார்ந்ததுமான உண்மையையும் அவற்றை மலர்ச்சி யுறும் ( Positive Thinking ) நேர்க்கருத்துப்படியான வழிகளில் செயல் வடிவமாக்கியும் காணல் வேண்டுமென நான் ஆசிக்கின்றேன்.

சில மனிதர்கள் கல் நெஞ்சம் படைத்தவர்கள், சுயநல வாதிகள், இருந்தும் அவர்களை அன்பு செய்.

# 15

## துணை நூல்கள்


- Andrew B. Crider, George R. Golthals, Robert D. Kavanaugh Paul R. Solomen, **"Psychology"**, United States of America; Scott, Foresman and Company, 1983
- Rita L. Atkinson, Richard C. Atkinson, Ernest R. Hilgard, **"Introduction to Psychology eighth edition"**, New York; Har; court Brace Jovanovich, Inc 1983.
- Richard A. Kalish, **"The Psychology of Human Behaviour"**, United States of America; Brooks / Cole publishing Company, 5 th printing 1969.
- Nicolas Wright, **"Understanding Humen Behaviour"**, **London**; Purnell Reference books, 1977.
- Malinda Jo Levin, **"Psychology a Biographical approch"**, United States of America; Mc Grow - Hill Book Company 1978.
- Kurt Schlesinger, Philip M. Groves, **"Psychology a dynamic science"**, Dudnque, Lowa; W. M. C. Brown Company pudlishers, 1976.
- Mark R. Rosenzweing, **"Psychology an introduction"**, London; D. C. Helth and Company, 1973.
- Claire Rayner, **"Time Presents the Rand minally Atlas of the Body"**, New York: Rand menally and Company 1980.
- **"The New Encyclopedia Britannica"**, Macropedia Volume 8, United States of America; 15th edition, 1980.
- **"The Encyclopedia American"**, Volume 3, International edition, United States of America, 1983.

# பின்னிணைப்பு

16

இக்காலத்தில் தொடர்புச் சாதனங்கள் மூலம் கூடுதலாக பாலுறவும், மணவாழ்க்கையும் பற்றிப் பல்வேறு நேர், எதிர் மறையான கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. இதனால் மனிதன் தனது வாழ்க்கையில் மாற்றம் செய்திட எண்ணுகிறான். மணவாழ்க்கை ஏதோ உடை உடுத்துவது போன்ற நிகழ்ச்சியன்று. வாழ்விலே ஒரு முக்கிய கட்டம், திருமண வாழ்வில் வெற்றி என்றால் வாழ்க்கையில் வெற்றியுண்டு. ஆதலால் மணவாழ்க்கைக்கு ஆயத்தம் இன்றியமையாதது எனவே திருமணவாழ்விற்கு யாதொரு ஆயத்தமுமில்லாமல் செல்வது எவ்வளவு அறியாமை. மனித நடத்தையைப் பற்றி ஒரு புள்ளிவிபர ஆய்வை கடந்த இரு வருடங்களில் 2000 குடும்பங்களில் மேற்கொண்டேன். மேலும், 1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த 2500 இளைஞர்களையும், யுவதிகளையும் சந்தித்து எனது ஆய்வை மேற்கொண்டேன். இவ்வாறான எனது செயற்பாடுகளின் தூண்டுதலினால் இச்சிறு கட்டுரையில் திருமணவாழ்க்கைக்கு ஆயத்தமாக சில உண்மைகளை என் அருமைச் சகோதர சகோதரிகளுடன் பகிர முயலுகிறேன்.

ஏன் இந்த வேறுபாடு?

பதின்மூன்று, பதினான்கு வயதை எட்டியவுடன் இளைஞனின் கண்கள் பெண்களைக் கூர்ந்து நோக்கத் தொடங்குகின்றன. அவர்கள் மீது ஒரு கவர்ச்சி ஏற்படுகிறது. அவன் உள்ளத்தில் உவகை பூத்து கடவுள் ஏன்தான் பெண்களை உண்டாக்கினாரோ? என்று வினாவை எழுப்புகிறான்.

அந்த வயதில் இளம் பெண்களோ இளைஞரைப்பார்க்க அவா கொள்கிறார்கள். உள்ளத்தில் ஒருவகை இன்ப உணர்ச்சியை உணர்கிறார்கள். கடவுள் ஏன்தான் ஆண்களை உண்டாக்கினாரோ? என்று அவர்களும் வினா எழுப்புகிறார்கள்.

கடவுள் ஆணையும் பெண்ணையும் உண்டாக்கியது அவரது அளவில்லா நன்மைத் தன்மையின் பயனே ஆகும். இறைவனின் திட்டம் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் தன்னலமற்ற அன்புடன் நேசித்து ஈருடல் ஓர் உயிராக வாழ்ந்து, தங்கள் அன்பின் கனிகளாகத் தங்களையொத்த குழந்தைகளைப் பெறவேண்டும் என்பதேயாகும். மணவாழ்க்கை கேளிக்கைக்கும் வேடிக்கைக்கும் உரியதன்று. நாம் அவ்வாழ்க்கையை

இறைவன் அருளிய நல்வாழ்க்கையாகக் கண்ணியத்துடன் நோக்க வேண்டும். எதிர்பாலாரின் மேல் அன்பு மலர மனதில் ஏங்கினவர்கள் தங்கள் வாழ்க்கை அந்தஸ்தைத் தெரிவு செய்ய முதிர்ச்சியடைந்தவர்கள் என்பது புள்ளிவிபரவியல் தொடர்புபடுத்தல் குணகத்தின் மூலம் உறுதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவைத் தந்துள்ளது.

இரு வகைப் பசி.

மனிதனுக்கு இறைவன் இரண்டு வகையான பசியைக் கொடுத்திருக்கிறார். ஒன்று வயிற்றுப் பசி, மற்றொன்று வர்க்கப் பசி. வயிற்றுப் பசி தனி மனிதன் உண்டு உயிர்வாழ உதவுகிறது. வர்க்கப்பசியோ மானிடவர்க்கம் பிழைத்திருக்க உதவுகிறது.

வயிறு காலாகாலத்தில் பசிப்பது இயல்பு, அதுவே முறை. அது உடல் நலத்தைக் காட்டுகிறது. அவ்வாறு பசிப்பது தவறில்லை. அது போல வயதான இளைஞனுக்கும் இன உணர்ச்சி, பாலியல் கவர்ச்சி வர்க்கப்பசி எடுப்பது தவறில்லை. திருமணத்தில் ஈடுபடும்வரையில் அந்த வர்க்கப் பசியைக் கட்டுப்படுத்த வேண்டும். தன்னடக்கமாய் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு உறுப்பும் தன் பொருளை நாடிச் செல்லுகிறது. இதுவே இயல்பு, அப்படியானால் மனுக்குலத்தைப் பெருக்குவதற்காகப் படைக்கப்பட்ட உறுப்புக்கள் தமக்குரிய செயலை நாடிச் செல்லாமல் இருக்குமா? ஆண் பெண்ணில் கவர்ச்சியடைகிறான். பெண் ஆணில் கவர்ச்சியடைகின்றாள். இக்கவர்ச்சி தவறன்று, திருமணத்தில் இல்லாதபோது தம் விருப்பம்போல் அது நாடும் செயலை அடைவது தான் தவறு.

சமூக வாழ்க்கையில் எதிர்பால் வேட்கையின் வன்மையை யாவரும் அறிவீர். இதன் வலிமை பசியின் வன்மையைப் போன்றதாகும் ஆண்கள் இயல்பாகவே உடலமைப்பின் பயனாக உடல் கிளர்ச்சிக்கு உட்பட்டவர்கள், அவர்கள் ஒரு பெண்ணை நாடும்பொழுது, அவளோடு பழகும் பொழுது பாலுறவுச் செயல்களில் ஈடுபட்டுப் பாலுறவு இன்பத்தைப் பருகவே தூண்டப்படுகிறார்கள்.

பெண்களோ அன்பையே இயல்பாக நாடுபவர்கள். ஆண்களோடு அவர்கள் பழகும்பொழுது அன்பையும், அமைதியையும், தோழமையையும் நாடுகிறார்கள். அவர்கள் ஏங்குவது அரவணைப்பிற்கும், அன்பின் அடையாளத்திற்கும் ஆகும். அன்பு! ஆண்களுக்கு அன்பு இல்லாமல் இல்லை. அது பெண்களின் அன்பு போன்று உணர்ச்சி மகுதியுள்ளதன்று.

மேலும் ஆணின் பாலுணர்வு இச்சை எக்காலமும் செயற்படும் அதை அடக்கவும் முடியும். ஆனால் பெண்களுக்கோ சொற்ப காலப்

பகுதியில் அவ்விச்சை மிக வேகமாகச் செயற்படும். அடக்க முயன்றாலும் சாத்தியமாவது எளிதல்ல. சொற்ப காலத்தில் இச்சை எழுவதில்லை முயன்றாலும் முன்போல வேகமாக செயற்படாது.

உங்கள் உடல் உணர்ச்சியை நீங்கள் வாழ்க்கையில் உணர்ந்திருப்பீர்களல்லவா ! இந்த வேறுபாட்டை இருபாலாரும் நன்கு அறிய வேண்டும். இப்படியான அறிவு அற்ற நிலையில் தான் பல பாதிப்புக்கள் ஏற்படுகிறது. ஆதலால் இளைஞரும், இளம்யுவதிகளும் நெருங்கிப்பழகும் போது, மின்சார சந்திப்புகளில் 'அபாயம்' என்று எழுதியிருக்கிறார்களல்லவா ? அதனை நினைத்துக் கொண்டு பாலியல் தாக்கத்தினால் அபாயம் உண்டு என நடக்க வேண்டும்.

## தடுமாறாதே

மணவாழ்க்கையில் இல்லாதவர், உடலின்பத்தை நேரடியாக நாடுவதும் அதனை ஏற்பதும் தவறு. அது தீவினையாகும், அறிந்தும், வலிய முழுமனதுடன் உடல் இன்பத்திற்கு இணங்கச் செய்யக்கூடிய கிட்டிய ஆபத்தில் ஒருவன் தன்னையே உட்படுத்திக் கொள்வது தவறு. நீ குளிக்கிறாய். அது நல்ல செயல். உன்னை மீறி ஏதாகிலும் இன்ப உணர்ச்சி ஏற்பட்டால் அதை அசட்டை செய் ஆதரிக்காதே, இறைவன் நமக்குக் கொடுத்திருக்கும் இந்த பாலியல் அவா, நாட்டம் மிகமிக வலிமையுள்ளது. அதனைக் கட்டுப்படுத்தாது விலங்குகளைப் போல ஆளப்பட அநுமதித்தால் நாம் விலங்குகளிலும் கேடுகெட்ட விலங்குகளாவோம். எமக்கு வரும் சோதனைகளில் மூன்றுபடிகள் உள. முதலில் தூண்டுபொருள், இரண்டாவது நமது மனவெழுச்சியின் விடை, மூன்றாவது செயல் ஆகும். நேர்க்கருத்துடன் இவற்றைச் செய்யின் அதன் பெறுமதியை அநுபவிக்கலாம்.

## குடும்ப அமைப்பு ( திருமணம் )

ஒரு குடும்பத்தில் கணவனுக்கு ஆண்மையும், மனைவிக்குப் பெண்மையும் எந்த அளவுக்கு உயர்வான நிலையில் அமைந்திருக்கிறதோ, அது தான் குடும்பவாழ்வின் மகிழ்ச்சிக்கும், இன்பத்துக்கும் அடித்தளமாக அமையும மற்றவசதி வாய்ப்புகள் பலவீனமான நிலையில் அமைந்திருப்பினும் அக்குடும்பத்தில் இன்பமும் மகிழ்ச்சியும் தாண்டவமாடும் என்று கூறிடமுடியும். குடும்ப வாழ்க்கையில் பெண்மையின் இயக்கத்திற்கு ஆண்மையின் செயற்பாடுதான் ஆதாரமாக இருக்கின்றது. மேலும் உடலுறவு நிகழ்ச்சியில் இயக்கும் சக்தியாக ஆணின் ஆண்மை விளங்குகின்றது. இயங்கு சக்தியாக பெண்மை விளங்குகின்றது. இயக்கும் சக்தி பலவீனமாகி விட்டால் இயங்கு சக்தியானது பரிதாபகரமான நிலைக்கு உள்ளாக நேரிடுகின்றது இப்பப்படிட்ட நிலை தொடர்ந்து நீடித்தால் அந்தக் குடும்பத்தில்

அமைதி சலனமுற ஆரம்பித்து விடும். திருமணம் செய்ய விரும்புவோர் எவ்வளவு எச்சரிக்கையுடனும், ஆய்வுடனும், ஆயத்தத்துடனும் இதில் ஈடுபட வேண்டுமென்பது சொல்லாமலே விளங்குகிறது.

எமது சமுதாயத்தில் சீதனம், முற்பணம் என்னும் பல காரணி களால் திருமணம் ஒரு சந்தைப் பொருளாக உருவாகிக் கொண்டு வரு வதை எல்லோரும் நன்கு அறிவோம். ஆண்கள் நற்குணமுள்ள பெண் சாதாரண நிலையில் வாழும் பெண்ணுக இருந்தாலும் பரவாயில்லை என்று திருமணம் செய்ய முன்வர வேண்டும். பெண்கள் நான் சாகும் வரை கன்னிப் பெண்ணுக இருந்தாலும் இருப்பேனேயொழிய விலை கேட்டு என்னை இழிவுபடுத்தும் ஆண் எனக்கு வேண்டாமென்று ஒரே உறுதியாய் சொல்ல வேண்டும். இவ்வாறு தீர்மானத்துடன் இருந்தால் சமூகம் சீர்படுமல்லவா ? சாதாரண நிலையில் வாழும் பெண்களுக்கும் வாழ வாய்ப்பு இருக்குமல்லவா ?

மனிதனின் இளமைப் பருவத்தில் எழுகின்ற உணர்வுகள் உரிமை பெறுகின்ற வாய்ப்பானது, அவன் வாழ்கின்ற சூழலில் தங்கியுள்ளது. திருமணத்தில் இணைப்புப் பாலமாக அமைவது உணர்வு, இவ்வுணர்வு நிலையில் ஒருவரையொருவர் புரிந்துணர்வு கொள்ளாவிட்டால், சட்டம் தந்த உரிமையோ அதனுல் வந்த உறவோ செயலற்று விடுகிறது.

சமூக வாழ்க்கை

கலாச்சாரம், பண்பாடு என்பது நாட்டுக்கு நாடு வேறுபட்டது. அவ்வாறே நாட்டுக்கு நாடு ஆண்கள் பெண்களின் மேல் கொண்டுள்ள கவர்ச்சியும் வேறுபாடுடையதாகும். அதாவது ஆண்களின் கவர்ச்சிக்குறி யப்பான், சீனு, ஆகிய நாடுகளில் பெண்களின் பாதங்களிலும், மேலை நாடுகளில் அநேகமாக பெண்குறியிலும், ஆபிரிக்க நாடுகளில் பெண்குறி யிலும் செயற்படுவதாக உளவியலாளர்கள் கூறியுள்ளார்கள். அதை அடிப்படையாகக் கொண்டே தொடர்புச் சாதனங்களில் பெண்களின் உடை அமைப்பை அரை நிர்வாணமாகவும், அரை குறையாகவும் படங் களை பிரசுரித்தோ அல்லது விளம்பரதாரர்களாகவோ பயன் படுத்துகி ருர்கள். ஆனுல் எமது சமுதாயத்தில் அநேகமாகப் பெண்களின் கூந் தலும், மார்பகமும், இடையுமே ஆண்களின் கவர்ச்சியாகச் செயற்படு வதை நாம் அறிவோம். இதற்கொப்பவே தொடர்புச் சாதனங்களில் எம் சமுதாயத்தில் பெண்களை உபயோகிக்க வேண்டும். ஆனுல் நடை முறையில் அநேகமாக மேலை நாட்டாரின் விளம்பர பிரசுரங்களையே பயன்படுத்துகிருேம். இவற்றை வியாபாரத் தலங்களில் பாவிக்கும்போது அங்கு விநியோகஸ்தர்களாக கூடுதலாகப் பெண்களே நிற்கிருர்கள். இது நியாயமா ? உங்கள் பணியகத்தில் தொடர்பு கொண்டு நேரிய முறையில் செயற்பட முயற்சியுங்கள். சிந்தியுங்கள் ! செயற்படுங்கள் !

இயற்கை அன்னை இயல்பாகவே அந்திமாலைப் பொழுதை அணு கும் வேளையில் ஆண், பெண் பால் ஹோமோன்கள் அதிக தொழிற் பாட்டை பெறுவதோடு துயில் கொள்ளும்பொழுது இவை புதிப்பிக்கப் படும் என்று மருத்துவ நூலர் கொள்கை, சைக்கிள் ஓடும் தருணம் உறுப்பு உணர்வு சிறப்பாக (பெண்கள்) ஊக்கத்தினைப் பெறுவதை அறிவீரன்றோ. ஆதலால் மாலைப்பொழுதில் சைக்கிள் பிரயாணம் செய் வதை நிறுத்துவது சாலச் சிறந்ததாகும்.

இயல்பாகப் பாலுணர்வு ஏற்படும்போது அதன் வெளிப்பாட்டில் ஒன்று மார்பகச் செயற்பாடென்று உளவியலாளரின் கருத்தாகும் எனவே எளிமையான முறையில் பெண்கள் உடை அணிவது அவர்களின் அழகை நிச்சயமாகக் குறைக்க மாட்டாது என்பதை அவர்கள் மனதில் கொண்டு மார்பகங்களைக் காட்டுவதையோ, அன்றேல் இடையின் இடை வெளியைக் காட்டுவதையோ தவிர்த்துக் கொள்ளல் உண்மையான அழகை நிலை நாட்டுவதற்கு வழி சமைக்கும். மேலும் ஆண்களை உடல் கவர்ச்சி மூலம் கவர முக்கியத்துவம் கொடுப்பின் பெண் அடிமை நிலவ வாய்ப்பு உறுதியாக உண்டு. உள்ளக் கவர்ச்சி மூலம் கவர முக்கியத் துவம் கொடுப்பின் பெண் அடிமைத்தனம் தோன்ருது. உடல், உள்ளக் கவர்ச்சி மூலம் கவர முயலின் பெண் அடிமை நிலவ வாய்ப்பு உண்டு எனலாம். ஒருபொருள் தன் நிலைப்பாட்டில் இருந்து பிசகின் அது ஏதோ ஒன்றுக்கு கீழ்ப்பட்டோ அல்லது மேற்பட்டோ இருக்க நேரிடும். அதா வது பெண்களின் உடல் அழகு சொற்ப காலம் மட்டும் செயல்படும். அதன்பின் அதன் தன்மை குன்றும் என்பதை அறிவீரன்றோ. சமுதாயத் தில் உடல் அழகுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் பிரதிபலிப்பாக, மனித நடத்தையில் சில ஆண்கள் தம் மனைவியரை பல விதங்களில் அடிமைப் போக்கில் வாழ்க்கை நடத்துகிறுர்கள். இதற்கு மாருக உள்ளக்கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் பிரதிபலிப்பாக சமுதாயத்தில் சில பெண் கள்தாம் பணிபுரியும் தலங்களில் மற்றவர்களுக்கு ஆறுதலாக்வும் செயற் படுகிறுர்கள்.

முடிவுரை

இறைவனே மனிதனை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினுர். வேறுபட்ட உடலமைப்புடன் அவர்களை உண்டாக்கியிருக்கிறுர். வய தான இளைஞனுக்கும் இளம் யுவதிக்கும் இளமையிற் கவர்ச்சி ஏற்படு கின்றது. இவற்றின் தொடர்ச்சி திருமணத்தில் ஈடுபடச் செய்கிறது. பாலியற் கவர்ச்சி உண்டாகும் போது அதனை அடக்கி ஆண்டு தன் அன்பைச் சிதற விடாது, இறைவன் தனக்கு கணவனுக அனுப்பும் ஆணுக்கு மட்டுமே உரியது, மனைவியாக அனுப்பும் பெண்ணுக்கு மட் டுமே உரியது என்பதை உணர்ந்து அதனைத் தூய்மையாகக் காத்துவர

வேண்டும். திருமண வாழ்வு எத்துணை சிறப்பான வாழ்வு. இதற்கு இளைஞர்களும், இளம் யுவதிகளும் ஆயத்தம் செய்ய வேண்டும். அவர்கள் நல்ல உடல் வலிமையுடன் இருக்க முயலவேண்டும். இறையன்பு, பிறரன்பு, தியாக மனப்பான்மையுடன் வளர வேண்டும்.

இருபாலாரும் உடல் கட்டமைப்பில் மட்டுமன்றி உளவியல்பு தொடர்பான பண்பிலும் வித்தியாசப்படுகிறார்கள். எனது கருத்துப்படி, பெண்கள் ஆண்களுடன் சமத்துவமாக முடியாது. ஆனால் ஆண் ஆண்மையுடனும், பெண் பெண்மையுடனும் உள்ள சமத்துவம் இன்றியமையாததொன்றாகும். பெண்கள் தங்கள் உடல் சார்ந்த விதிமுறைகளுக்கு எதிராக ஆண்களுடன் சமத்துவம் அடைய முடியாது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்களது இயற்கையான உடலியல், உளவியல்பு சார்ந்ததுமான உண்மையையும், அவற்றை மலர்ச்சியுறும் வழிகளில் செயல்வடிவமாக்கிக் காணல் வேண்டுமென நான் ஆசிக்கின்றேன்.

நீ நன்மை செய்யும்போது உன்னிடம் சுயநல நோக்கம் இருப்பதாகக் கூறுவார்கள். தயங்காதே, நன்மை செய்!

## என் அருமைச் சகோதர, சகோதரிகளே!
## துணிந்துநில்! தொடர்ந்து செய்!

---

- சில மனிதர்கள் கல்நெஞ்சம் படைத்தவர்கள், சுயநலவாதிகள், இருந்தும் அவர்களை அன்பு செய்!

- நீ நன்மை செய்யும் போது உன்னிடம் சுயநல நோக்கம் இருப்பதாகக் கூறுவார்கள் தயங்காதே. நன்மை செய்!

- உனக்கு வெற்றி கிடைத்தால் பொய் நண்பர்களையும் உண்மை எதிரிகளையும் அடைந்து கொள்வாய், துணிந்து நில்!

- எதிர்பாலாரின் மேல் அன்பு மலர மனதில் ஏங்கினவர்கள், தங்கள் வாழ்க்கை அந்தஸ்தை தெரிவு செய்ய முதிர்ச்சி அடைந்தவர்கள்.

- ஆரோக்கியமான ஆண் – பெண் நட்புறவை ஊக்குவித்தால், தூய்மையான சந்தோஷத்தை உடல் சார்ந்த, உளவியல்பு சார்ந்த, ஆன்மவியல்பு சார்ந்த முறையில் நாம் பெறமுடியும்.

- இன்று நீ செய்யும் நன்மை நாளை மறக்கப்படலாம். நலிவுறுதே நல்லதையே செய்!

- நேர்மையுடனும் நீதியுடனும் நீ நடந்தால் கூட உன்னை வெளிவேடக்காரனென்று கூறுவார்கள், நேர்மையைக் கடைப்பிடி, நீதி தவறுதே!

உனது நற்குணம் நானிலமெங்கும் பரவட்டும்.

தொகுப்பு:- அ. றெபேட், பெரியகுருமடம், கொழும்புத்துறை.

---

எமது வெளியீடு:
1. மனித நடத்தையின் ஆய்வுத்தொகுப்பு
2. துணிந்து நில்! தொடர்ந்து செய்!
3. அறிந்திடுவீர் சில புதிர்கள்
4. மனித நடத்தைக் கோலங்கள்

